Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxrious rooms
❖ Swimming Pool
Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
TP - 0212225969
Hotline: 0212229497
(C/2486)

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 15 புதன்கிழமை (29.05.2013) பக்கங்கள் 20 ஓசை – 241
















# யாழ். – கொழும்பு அதிவேக நெடுஞ்சாலை

## கொடை வழங்க சீனா சம்மதம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான அதிவேக நெடுஞ்சாலை ஒன்றை அமைப்பதற்கு உதவி வழங்க சீன அரசு முன்வந்துள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான இலங்கைக் குழுவினர் நேற்று பீஜிங்கில் சீனப்பிரதமருடன் நடாத்திய பேச்சுக்களின் போது மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

யாழ். - கொழும்பு அதிவேக நெடுஞ்சாலை அமைப்பு உள்ளிட்ட மேம்பால வீதிகள், நெடுஞ்சாலைகள், தொடருந்துப் பாதைகளை அமைப்பது உள்ளிட்ட போக்குவரத்துத் திட்டங்களில் முதலீடுகளை மேற்கொள்ள சீனா முன்வந்துள்ளது. பீஜிங்கில் நேற்று நடந்த இருதரப்பு பேச்சுக்களிலேயே இது தொடர்பான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

கொழும்பு - யாழ். அதிவேக நெடுஞ்சாலைத் திட்டம், கொழும்பு-கண்டி- குருநாகல் அதிவேக நெடுஞ்சாலைத் திட்டம், மாத்தறை - கதிர்காமம் அதிவேக நெடுஞ்சாலைத்திட்டம் ஆகியவற்றை மேற கொள்ளவும் சீனா இணங்கியுள்ளது. மேலும், அத்தனகல, மினுவாங்கொட, குருநாகல் பகுதிகளில் நீர்விநியோகத் திட்டங்களில் முதலீடு செய்யவும்,

(19) ஆம் பக்கம் பார்க்க



## மீண்டும் "பிம்சவிய"

(கிளிநொச்சி)

"பிம்சவிய" திட்டம் கிளிநொச்சியில் மீண்டும் முன்னெடுக்கப்படுவதற்குரிய சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நேற்று கிளிநொச்சி மாவட்டத்தில் திறக்கப்பட்டுள்ள இலங்கை நில அளவை திணைகளத்தின் கிளிநொச்சி பிரதேச அலுவலகம் மூலம் மண்ணின் மகிமை திட்டம் விரைவுபடுத்தப்

(19) ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர் மேர்வினுக்கு புதிய அதிகாரங்கள்

### கடமை தவறும் அதிகாரிகள் சிக்குவர்

அரசாங்க அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு வழங்கப்படவுள்ளது. கடமைகளை உரிய முறையில் ஆற்றத் தவறும் அரசாங்க அதிகாரிகளுக்கு எதிராக விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கக் கூடிய பூரண அதிகாரம் இவருக்கு வழங்கப்படவுள்ளது. இதற்கென நாடாளுமன்றில் விசேட சட்டமொன்று கொண்டு வரப்படவுள்ளது. இதற்கான அனுமதி அமைச்சரவையிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்படவுள்ளது. அமைச்சுகளில் கடமையாற்றிவரும் உத்தியோகத்தர்களுக்கு எதிரான முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடாத்தி, சட்ட நடவடிக்கை எடுககவும், அது தொடர்பில் பரிந்துரைகளை வழங்கவும் இந்தச் சட்டமூலம் வழிவகை செய்யும் எனத் தெரிவிக்கப்படுகிறது. அமைச்சுச் செயலாளர்கள் உள்ளிட்ட பொதுத்துறை அதிகாரிகளை அழைத்து விசாரணை நடத்தக்கூடிய வகையில் இந்தச் சட்டம் உருவாக்கப்படவுள்ளதாக அறியமுடியகின்றது.

## வெளிநாடு செல்ல துமிந்தவுக்குத் தடை

ஜனாதிபதியின் ஆலோசகரான பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர படுகொலை வழக்கின் பிரதான சந்தேகநபரான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது. சிங்கப்பூரிலுள்ள மவுண்ட் எலிசபெத் வைத்தியசாலையில் சிகிச்சை பெறச் செல்வதற்காக விடுக்கப்

(19) ஆம் பக்கம் பார்க்க

## புதுக்குடியிருப்பு பிரதேச செயலக புதிய கட்டடம் திறப்பு



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் வைபவ ரீதியாக பொருளாதர அபிவிருத்தி அமைச்சரால் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இப் பிரதேச செயலகக் கட்டடத்திற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 52 மில்லியன் ரூபா செலவில் புனர்நிர்மாண வேலைகள் செய்யப்பட்டு மக்களின் பாவனைக்காக வைபவ ரீதியாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதமவிருந்தினர்கள் மங்கள வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டு பிரதான கட்டடத்

(19) ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணம் செல்ல நவிப்பிள்ளை ஆர்வம்

(கொழும்பு)



ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர நவநீதம்பிள்ளை யாழ்ப்பாணத்தில் சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கும் விருப்பம் தெரிவித்துள்ளார். எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி கொழும்பு வருகைதருவதற்குத் திட்டமிட்டிருக்கும் நவநீதம்பிள்ளையின் இலங்கைக்கான நிகழ்ச்சி நிரலில் யாழ். விஜயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்து

(19) ஆம் பக்கம் பார்க்க

## நாடாளுமன்றத்தை பகிஷ்கரிப்போம்


### இது கூட்டமைப்பின் வீராப்பு

(கொழும்பு)

அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அரசு அகற்ற முயற்சித்தால் நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்யும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. 13 ஆவது அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தை இரத்துசெய்யும் முனைப்புக்கள் மேற்கொள்ளப்படுமானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தை புறக்கணிக்கும் என்று தமிழீழ விடுதலை இயக்கத்தின் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்ததாக இணையத் தளங்கள் செய்தி வெளியிட்

(19) ஆம் பக்கம் பார்க்க

## '13'ஐ அகற்ற இன்று பிரேரணை



13 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்து செய்வது குறித்த உத்தேச பிரேரணையை இன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக ஜாதிக ஹெல உறுமய கட்சி தெரிவித்துள்ளது.

ஜாதிகஹெல உறுமய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும், அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தனிநபர் பிரேரணையாக இந்த உத்தேச பிரேரணையை சமர்ப்பிக்க உள்ளார்.

மாகாணசபைகளை உருவாக்குவதற்காக இயற்றப்பட்ட 13 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்து செய்யுமாறு இந்த பிரேரணையில் கோரப்படவுள்ளது, உத்தேச பிரேரணையின் ஆங்கில, சிங்கள பிரதிகள்

(19) ஆம் பக்கம் பார்க்க

உள்ளே...
தரம் 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

# இரண்டு இலட்சம் பக்தர்கள் திரண்ட வற்றாப்பளை அம்மன் பொங்கல் விழா



இலங்கையின் வடபகுதியின் முல்லையும் மருதமும் நெய்தலும் ஒருங்கே சூழப்பெற்ற முல்லைத்தீவு மாவட்டத்தில் வற்றாப்பளையில் வீற்றிருந்து அருளாட்சி புரியும் தாய்த் தெய்வமான கண்ணகி அம்மனின் வைகாசி விசாக பொங்கல் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

வைகாசி விசாக பெங்கல் திருவிழாவை காணவும் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிக்கொள்ளவும் நாட்டின் பல பாகங்களில் இருந்து இம்முறையும் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் ஆலயத்திற்கு வருகை தந்திருந்தனர்.

அடியார்களது நன்மை கருதி விசேட போக்குவரத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

வைகாசி பௌர்ணமியில் கடல் நீரில் விளக்கெரியும் வரலாற்று புதுமை மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மனின் வருடாந்த பொங்கல் விழா பாக்குதண்டல் என்ற பாரம்பரிய நிகழ்வுடன் ஆரம்பமாகி நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு, ஏராளமான அற்புதங்களுக்கு சொந்தக்காரியான வற்றாப்பளை கண்ணகி அம்மனை பல இலட்சக்கணக்கான தமிழ், சிங்கள மக்கள் மிகுந்த பயபக்தியுடன் வழிபடுவதுடன் இம்முறை அதிகமான முஸ்லிம்களும் இந்த திருவிழாவில் கலந்து கொண்டிருந்தனர்.

இம்முறை இலங்கை பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையம் முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தின் நுழைவாயில் அருகே பாரதத்தின் மகிமை வாய்ந்த 12 சிவன் கோவில்களின் ஜோதிலிங்க தரிசன நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வற்றாப்பளை அம்மன் ஆலய வேப்பம் மரத்திலிருந்து சில தினங்களாக பால் வடிந்துகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். வர்த்தகர்கள் இன்று கலந்துரையாடல்

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணம் நகர வர்த்தக நிலைய ஊழியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சம்பந்தமான கலந்துரையாடல் இன்று மாலை 4.00 மணிக்கு யாழ். வணிகர் கழகப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

மிகவும் முக்கியமான விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டு இக்கலந்துரையாடலில் தீர்வு காணப்பட வேண்டியுள்ளதால் வர்த்தக நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்கள் தவறாது இதில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

ஊழியர்கள் இக்கலந்துரையாடலில் பங்குபற்ற வசதியாக வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தங்கள் வர்த்தக நடவடிக்கை பாதிக்காதவாறு சில பணியாளர்களை மட்டும் வைத்துக் கொண்டு ஏனைய ஊழியர்களை குறித்த நேரத்துக்கு விடுவித்து உதவுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலின் முடிவில் ஊழியர் சங்கம் ஒன்று உருவாக்கப்படலாம் எனத்தெரிய வருகின்றது. (137)

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சரா பொன் மாணவர் கௌரவிப்பு விழாவும் நூல் வெளியீட்டு நிகழ்வும் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் சயன்ஸ் அக்கடமி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

சரா பொன் விழா சபைத் தலைவர் எஸ்.ஸ்ரனிஸ்லோஸ் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட பேராசிரியர் க.தேவராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன், மடு வலய கல்விப் பணிப்பாளர் ஏ.ஜெ.குரூஸ், தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சிவத்திரை சிவநாதன், சர்வதேச லயன்ஸ் கழக மாவட்ட பிரதம இணைப்பாளர் டாக்டர் லயன் வை.தியாகராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் வி.ரி.சகாதேவராஜா. இ.எஸ்.பி. கூட்டு நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் இ.எஸ்.பி.நாகரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் வெற்றித் தேர்வு வெளியீட்டகத்தின் வெற்றித் தேர்வு சுற்றாடல்சார் செயற்பாடுகள் நூல் வெளியீடு இடம்பெறவுள்ளது.

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான ஐந்தாவது (மே மாத) மாதாந்தப் பொதுக் கூட்டம் நாளை பி.ப. 2.00 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறும்.

## குருபூசை விழா

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் நல்லூர் பிரதேச அறநெறிப் பாடசாலையினரும் இணைந்து நடத்தும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசை விழா வரும் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் ஆலய முன்றலில் உள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் இடம்பெறும்.

# சபை உறுப்பினர்களின் குழப்பங்களால் அபிவிருத்தி நடவடிக்கைகள் பாதிப்பு

(திருநெல்வேலி)

யாழ். மாவட்டத்தில் உள்ள சில உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் சபைக் கூட்டங்களின் போது மேற்கொள்ளும் தேவையற்ற குழப்பங்களினால் சபை நடவடிக்கைகளை ஒழுங்காக நடத்தமுடியவில்லை என பலராலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில சபைகளில் உறுப்பினர்கள் அதே ஆளும் கட்சியைச் சேர்ந்த தவிசாளருடன் முரண்பட்டுக் கொள்கின்றனர். அதேசமயம் தவிசாளருக்கும் செயலாளருக்குமிடையே முரண்பாடுகள் ஏற்பட்டுக் கொள்கின்றன. இதனால் பிரதேச மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளையும் அவர்களுக்குரிய அத்தியாவசிய தேவைகளையும் உள்ளூராட்சி சபைகள் நிறைவேற்ற முடிாயமல் பின்னடைவு ஏற்படுவதாகக் கூறுகின்றனர்.

சில சபைகளில் ஏற்பட்டுள்ள இந்நெருக்கடி நிலையைத் தீர்த்து வைப்பதில் ஆளும்கட்சியைச் சேர்ந்த கட்சித் தலைமையகமும் ஈடுபட்டு சமரசம் செய்து வைக்கும் முயற்சிகளையும் எடுத்திருப்பதாகத் தெரியவில்லை.

தவிசாளர், செயலாளருக்கிடையிலான முரண்பாடுகளை நீக்குவதற்கும் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் இவற்றில் தலையீடு செய்ததாகவும் இல்லையென பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் சில உள்ளூராட்சி சபைகளின் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாமல் இருப்பதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், கட்சித் தலைமைகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமே மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளை தொடர்ந்து முன்னெடுக்க முடியும் எனவும் கூறப்பட்டுள்ளது. (137)


# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 959

திகதி 27.05.2013

வெற்றி எண்கள்: 01 11 22 60 — ஆங்கில எழுத்து: M

ஜக்பொட் பரிசு ரூ. 12,632,400/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 12,632,400/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 10 | 50,000/= | ரூ. 500,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 258 | 1,000/= | ரூ. 258,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 465 | 1,000/= | ரூ. 465,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11406 | 60/= | ரூ. 684,360/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 5862 | 40/= | ரூ. 234,480/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 149579 | 20/= | ரூ. 2,991,580/= |
| ஆங்கில எழுத்து | 21758 | 20/= | ரூ. 435,160/= |
| | | மொத்தம் ரூ. | 6,568,580/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 604213435-9-29 |
| மாத்தளை | 604205922-7-07 |
| கொழும்பு | 604216143-4-34 |
| மொணராகலை | 604202731-0-00 |
| மாத்தறை | 604200817-2-22 |
| கேகாலை | 604215089-7-47 |
| யாழ்ப்பாணம் | 604202472-6-16 |
| பதுளை | 604216059-5-05 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,968,580/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 1,29,24,760/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2013.05.30 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02. தொலைபேசி: 2 335546/7

(C/2798)


# மீட்கப்படாத நகைகள் ஏலத்தில் விற்பனை

(யாழ். நிருபர்)

செலான் வங்கியில் ஒரு வருட, 6 மாத, 3 மாத கால அடிப்படையில் அடகு வைக்கப்பட்டு உரிய காலத்தில் மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க நகைகள் யாவும் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளதாக செலான் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இந்த ஏல விற்பனை எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் அடைவு வைக்கப்பட்ட பின்வரும் கிளைகளில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் (சங்கானை. மானிப்பாய் உள்ளடங்கலாக) மற்றும் நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய கிளைகளில் பகிரங்க ஏல விற்பனை இடம்பெறுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)



காரைநகர் புகலி சிவசுப்பிரமணிய ஆலய நித்திய உற்சவ பூர்த்தியும் அஸ்வமேத மகா யாகமும் நடைபெறுவதற்கு முன்பாக உள்ளூர், வெளியூர் குதிரைகள் சகிதம் முருகப்பெருமான் ஊர்வலத்தில் வந்துகொண்டிருப்பதைக் காணலாம். (50)



வேலணை மேற்கு கண்ணபுர பிரதேசத்தில் உள்ள உள்வீதிகளுக்கு கருங்கற்கள் பரப்பப்பட்டு செப்பனிடப்பட்டு வருகின்றது. இதற்கு முன் இவ்வீதி ஊரி, மணல் நிரப்பப்பட்டு மழை காலங்களில் பயணிக்கமுடியாத சூழல் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (21)

# கல்வியையும், ஒழுக்கத்தையும் போதிப்பதாக அறநெறிப் பாடசாலைகள் விளங்குகின்றன

(சாவகச்சேரி)

சிறார்களின் வளர்ச்சிக்கு கல்வியறிவு மட்டுமல்லாமல் அறநெறிகளையும், இந்து சமயத்தின் கோட்பாடுகளையும், ஒழுங்குகளையும் அவர்களின் மனங்களில் விதைக்கவேண்டும். இவ்வாறான ஒழுக்க நெறிகளைப் புகட்டுகின்ற செயற்பாடுகளுக்கு ஊக்கமும், ஒத்தாசைகளும் செய்கின்ற ஒரு சிறந்த அமைப்பாக அறநெறிப் பாடசாலைகள் விளங்குகின்றன என நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் தெரிவித்தார்.

நுணாவில் விளைவேலி மருதடி விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு ஆசியுரை நிகழ்த்து கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெற்றோர் மாணவர்களின் கல்வியில் செலுத்தும் அக்கறையைப்போல அறநெறிகளிலும், ஒழுக்கத்திலும் கவனம் எடுக்கவேண்டும். எமது கலாசாரத்திற்கு ஏற்றாற்போல் இம் மாணவர்கள் ஆடை அணிந்துள்ளார்கள்.



இது மாணவர்களின் ஒழுக்கத்தினையும், அறநெறிகளையும் வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது. இவ்வாறு தொடர்ச்சியாக இவ்வாறான போட்டிகளை நடாத்துவதன் மூலம் சமயம் சார்ந்த செயற்பாடுகள் அனைத்தையும் மாணவர்கள் அறியக்கூடியதாக இருக்கும். இவ்வாறான போட்டிகள் மற்றும் விழாக்களுக்கு நான் ஊக்கமளிக்க தயாராக இருக்கின்றேன். தவறாது ஞாயிற்றுக்கிழமைகளில் உங்கள் பிள்ளைகளை அறநெறிப் பாடசாலைக்கு அனுப்பி சிறந்த சமய அறிவினையும் பெற்றுக் கொடுக்க ஒவ்வொரு பெற்றோரும் முன்வரவேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் ஆலய பிரதம குரு து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள், கல்வயல் கிராம சேவகர் திருமதி உமாஜோதினி, மற்றும் ஆலய நிர்வாக சபையினர் கலந்துகெண்டிருந்தனர். (43)

# செல்வச்சந்நிதி ஆலயத்தில் பக்தர்கள் வருகை அதிகரிப்பு

(அச்சுவேலி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் அதிகளவான பகதர்கள் ஆலயத்திற்கு வருவதை அவதானிக்க முடிகின்றது. குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வருகைதரும் பக்த அடியார்கள் தமது நேர்த்திக் கடன்களைப் பூர்த்தி செய்து வருகின்றனர்.

அத்துடன் ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் பசியைப் போக்கவென நீண்ட காலமாக அன்னதானப் பணியினைச் சிறப்பாக மேற்கொண்டுவரும் சந்நிதியான் ஆச்சிரமம் பலரது பாராட்டையும் பெற்றுள்ளது.

இங்கு ஒவ்வொரு வெள்ளி தோறும் சிறப்பு சொற்பொழிவுகள் நடைபெறுவதுடன் வறுமைக்கோட்டிற்கு கீழ்ப்பட்ட மாணவர்களுக்கு பல உதவிகளையும் இந்த ஆச்சிரம் வழங்கிவருவதும் குறிபபிடத்தக்கது.

அத்துடன 63 நாயன்மார்களை நினைவுபடுத்தும் முகமாக வெள்ளி தோறும் விசேட பூசையும், சிவபுராணப் படிப்பும் இடம்பெற்று பின்பே அன்னதானம் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (85)

# சேவைகள் விஸ்தரிப்பு

(கல்வயல்)

ஏ - 9 வீதி கைதடிப் பகுதியில் அமைந்துள்ள தனியார் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் பயன்பாடுகள் மற்றும் சேவைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

அதாவது கைதடிப் பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கான எரிபொருள் நிலக்கீழ்த்தாங்கிகள் பொருத்தும் வேலைகள் இடம்பெற்றுவருகின்றன.

ஒவ்வொன்றும் 20 ஆயிரம் லீற்றர்கள் கொள்ளளவுடைய இரண்டு நிலக்கீழ்த்தாங்கிகள் டீசல் மற்றும் பெற்றோல் பாவனைக்காகப் பொருத்தப்பட்டு வருகின்றது.

இச்சேவையினால் பயனாளிகள் அதிகம் பயன்பெற்று வருவதாகத் தெரிவிக்கின்றனர். (43)

# பொது மக்களின் செயற்பாட்டால் ஆபத்து ஏற்படுமென அச்சம்

(அச்சுவேலி)

வளலாய் பகுதியில் கண்ணிவெடி அபாய குறியீடுகளையும், மஞ்சள் நிற சமிக்ஞை நாடாக்களினையும் விறகு வெட்டுபவர்கள் அறுத்து எடுப்பதாக இராணுவத்தினர் தெரிவிக்கின்றனர்.

தற்போது விடுவிக்கப்பட்ட வளலாயின் சில பகுதிகளில் கண்ணிவெடிகள் அகற்றப்படாமல் அபாய குறியீடுகள் பொருத்தப்பட்டுள்ளன. இப் பகுதியில் இராணுவத்தினரும். கலோரஸ்ட் நிறுவனத்தினரும் இணைந்து கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

விறகு வெட்டுவதற்கு வருபவர்கள் விறகினை கட்டிச் செல்வதற்கு அபாய குறியீட்டு மஞ்சள் நாடாக்களை எடுத்துச் செல்வதாகவும் இதனால் கண்ணிவெடிகள் உள்ள இடங்களை இனங்கண்டு கொள்வதில் தாம் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக பொதுமக்கள் கவனத்தில் கொண்டு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என இராணுவத்தினர் கேட்டுக் கொள்கின்றனர். (15)

# பொங்கல் திருவிழா

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்ட காட்டு விநாயகர் ஆலய வருடாந்த பொங்கல் விழா வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளது.

இப் பொங்கல் விழா முல்லை கடல் நீர் எடுத்து இவ் ஆலயத்தில் 07 நாட்கள் நீரில் விளக்கு ஏரிய விட்டு பண்டைய முறைப்படி ஓலையில் எழுதிவைத்திருந்த வாசகங்களைப் படித்து மடப்பண்டம் எடுக்கப்பட்டு ஆலயப் பூசகரால் வளந்தெடுக்கப்பட்டது.

மேலும் பொங்கல் வைத்து கண்ணகியம்மனின் வரலாற்றுக் கதை படிக்கப்பட்டதோடு அடியார்களினால் நேர்த்திக்கடன்கள் தூக்குக் காவடி, பறவைக்காவடி, பால்செம்புக் காவடி, தீ மிதிப்பு போன்றன இடம் பெற்றன. (40)


## வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத் துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் எம்மை அர்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்கள் மனக் குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன்மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல : 117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி : 0214927000 பக்ஸ் - 0212222730
ஈமெயில் : pccsl@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka




சாவகச்சேரி நுணாவில் விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தேர்த்திருவிழா கடந்த வியாழனன்று இடம்பெற்றது. இதன் போது தேர் பவனி வருவதையும், பக்தர் ஒருவர் பறவைக் காவடி எடுத்து நேர்த்திக்கடன் நிறைவேற்றுவதையும், விநாயகப்பெருமானுக்கு பச்சை சாத்தி எழுந்தருளுவதையும், காணலாம். (43)

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## நம்பிக்கையில்லாது நடந்து கொள்ளுதல்!

மலைச் சிகரத்தின் மீது ஒரு நாத்திகன் நடந்துகொண்டிருந்த போது, தவறி விழுந்துவிட்டான். விழும்போது, பாறை இடுக்கில் வளர்ந்திருந்த ஒரு மரக்கிளையைப் பிடித்துக் கொண்டான். உயிரை நடுக்கும் குளிர் காற்று வீசிக்கொண்டிருந்தது.

மரக்கிளையைப் பிடித்தவாறு தொங்கிக் கொண்டிருந்த நாத்திகன், தனது நம்பிக்கையற்ற நிலையைச் சிந்தித்துப் பார்த்தான். கீழே பெரும் பாறைகள், மேலே ஏறிச் செல்லவும் முடியாது. கிளையைப் பற்றிக் கொண்டிருந்த பிடிப்பும் நழுவிக் கொண்டிருந்தது.

அவன் நினைத்தான், "நல்லது, கடவுள் மட்டுமே என்னைக் காப்பாற்ற முடியும். எப்போதுமே நான் கடவுளை நம்பியதில்லை. நான் இதில் தவறு செய்திருக்கலாம். கடவுளை அழைத்துக் காப்பாற்றச் சொல்லிக் கேட்பதில் என்ன இழப்பு வந்துவிடப் போகிறது...?" இப்படி நினைத்த அவன் கடவுளை அழைத்தான்: "கடவுளே! நீ இருப்பது உண்மையென்றால் என்னைக் காப்பாற்று. நான் உன்னை நம்புகிறேன்!"

பதிலே இல்லை. அவன் மீண்டும் அழைத்தான். "கடவுளே! என்றுமே உன்னை நான் நம்பியதில்லை. ஆனால் இப்போது என்னைக் காப்பாற்றினால், இன்றிலிருந்து நான் உன்னை நம்பத் தொடங்குவேன்!" மேகக் கூட்டத்திலிருந்து திடீரென ஒரு குரல் எழுந்தது. "உன்னை எனக்கு நன்றாகத் தெரியும். நீ என்னை நம்ப மாட்டாய்!"

கிளையின் பிடியை அறவே விட்டுவிடக்கூடிய நிலையில் கைகள் சோர்ந்திருந்த அந்த நாத்திகன் இதைக் கேட்டு ஆச்சரியமடைந்தான். "கடவுளே! தயவு செய்யுங்கள். நீங்கள் கூறுவது தவறு. நான் உண்மையாகவே கூறுகிறேன். இனி நான் உங்கள் மீது நம்பிக்கை வைப்பேன்."

"இல்லை. நீ நம்பிக்கை கொள்ள மாட்டாய்! இப்படியானதொரு சந்தர்ப்பத்தில் எல்லோருமே உன்னை மாதிரித்தான் கூறுகிறார்கள்" என்றார் கடவுள். அந்த மனிதன் மீண்டும் கெஞ்சினான். அவர் கடவுள் என்றால் எப்படியும் அவர் தன்னைக் காப்பாற்ற வேண்டும் என்று வாதாடினான். இறுதியாகக் கடவுள் கூறினார்: "சரி, நான் உன்னைக் காப்பாற்றுகிறேன். மரக்கிளையை விட்டு விடு."

"என்னது? மரக்கிளையை விட்டுவிடுவதா? என்னை என்ன முட்டாள் என்று நினைக்கிறீர்களா?" என்று கேட்டான் நாத்திகன்.

தமிழ் மக்களுக்கான தீர்வைப் பொறுத்தவரையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் அந்த நாத்திகனைப் போன்றுதான் செயற்படுகிறார்கள். தீர்வை அரசாங்கம்தான் வைக்க வேண்டும் என்று மூச்சுக்கு மூச்சு சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதே மூச்சிலேயே சிங்கள அரசாங்கங்கள் தமிழ்மக்களுக்கான தீர்வை ஒருபோதும் தரமாட்டாதென்றும் சொல்லிவருகிறார்கள். இத்தகைய நம்பிக்கையற்ற அணுகுமுறையால் என்னதான் இங்கு நடக்கும்?

தீர்வின் மீதே நம்பிக்கையற்றதால்தான் தாங்கள் ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும்; அதற்கு தமிழ்–முஸ்லிம்–சிங்கள மக்களின் கணிசமான ஆதரவைத் திரட்ட வேண்டும்; பேச்சு வார்த்தை மற்றும் ராஜதந்திர அணுகுமுறைகள் ஊடாக முத்தரப்புக்கும் ஏற்றதாக ஒரு சமரசத் தீர்வை எட்டவேண்டும் என்பதிலெல்லாம் எந்த முயற்சியும் காட்டாமலிருக்கிறார்கள்.

இந்த நாட்டிலுள்ள ஏனைய கட்சிகள், ஏனைய சமூக மக்களில் கணிசமானோரின் ஆதரவைப் பெறக்கூடியதாகத்தான் தீர்வுத்திட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்பது ஒரு யதார்த்தம். அதற்கு முதலில் நாட்டிற்குள்ளேயேதான் பேசியாக வேண்டும் என்பதும் மறுக்க முடியாத மற்றொரு யதார்த்தம்.

கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் தேர்தல் வெற்றிகளுக்கு உணர்ச்சிகரமான பேச்சுக்களையும் அரச வெறுப்பூட்டலையுமே நம்பியிருக்கிறார்கள். தேர்தல் கதிரைகளைக் கைவிடத் தயாராயில்லாததால்தான், தீர்வொன்று வருவதையும் அவர்களால் விரும்பவோ நம்பவோ முடியவில்லை. - ஆசிரியர்

# ஜோர்தான் காந்திமதியின் உயிரிழப்பிற்கு நீதி பெற்றுத் தருமாறு கோரிக்கை

(கொழும்பு)

ஜோர்தானில் துப்பாக்கிச் சூட்டில் பலியான இலங்கைப் பணிப்பெண்ணின் மரணம் தொடர்பாக விசாரணை நடாத்தி நீதி வழங்க வேண்டும் என்று மட்டக்களப்பு வாழைச்சேனையில் பேரணியொன்று நடத்தப்பட்டுள்ளது.

கடந்த 6ஆம் திகதி ஜோர்தானில் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த 21 வயதான நாகேந்திரன் காந்திமதியின் சடலம் கடந்த ஞாயிற்றுக்கிழமை விமானம் மூலம் இலங்கை கொண்டு வரப்பட்டு, நேற்றுமுன்தினம் அவரது சொந்தக் கிராமமான கறுவாக்கேணியில் அடக்கம் செய்யப்பட்டது.

இந்தப் பெண் துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுக்கொன்றதாக கூறப்படுவதில் சந்தேகம் இருப்பதாக அவரது தாயார் மங்களேஸ்வரி கூறுகிறார்.

மர்மமான முறையில் இவர் உயிரிழந்துள்ளமை தொடர்பில் நீதி விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று கோரி அவரது கிராம மக்களும் உறவினர்களும் பேரணியாக சென்று பிரதேச செயலாளரிடம் மனுவொன்றைக் கையளித்துள்ளனர். இவ்மனுவை ஜோரதானிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தனது மகள் எவ்வாறு சுடப்பட்டார், அதன் பின்னணி என்ன என்பது பற்றி அறியத்தராமல் சடலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தாய் கூறுகிறார்.

தனது மகளின் மரணத்திற்கு காரணமானவர்கள் கண்டு பிடிக்கப்பட வேண்டும் என்று அந்நாட்டு அரசுக்கு அழுத்தம் கொடுககுமாறு அவர் வலியுறுத்திக் கேட்டுள்ளார்.

வீட்டு எஜமானாலும் அவரது மகனாலும் தனது மகள் தொடர்ச்சியாக கொடுமைப்படுத்தப்பட்டு வந்துள்ளதாக அவர் ஏற்கனவே கூறியிருந்தார்.

இதேவேளை, ஜோர்தானிலுள்ள இலங்கை தூதரகம் ஊடாக விசாரணை நடாத்தி உண்மை கண்டறியப்பட்டு உரியவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் வெளிநாட்டு வேலை வாய்ப்புத் துறை அமைச்சர் டிலான் பெரேராவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

உயிரிழந்த பணிப் பெண்ணின் நெஞ்சில் துப்பாக்கி குண்டு பாய்ந்து குருதி வெளியேறியுள்ளதாக உறவினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் மூலம் அறிய முடிவதாக அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள அவசர கடிதமொன்றில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் குடும்ப பொருளாதாரத்தை கவனத்தில் எடுத்து இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் அக் கடிதத்தில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தப்பியோடிய இராணுவத்துடன் பொன்சேகா நாடுமுழுவதும் சுற்றினார்

## ஓய்வுபெற்ற பிரிகேடியர் சாட்சியம்

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பியோடியதாகக் கூறப்படும் இராணுவ மோட்டார் படையணியைச் சேர்ந்த வீரர்களுடன் சரத் பொன்சேகா கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது நாடுபூராவும் சுற்றிவந்தார் என்று ஓய்வுபெற்ற பிரிகேடியர் அசோக வீரசிங்க சாட்சியமளித்துள்ளார்.

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களுக்கு அடைக்கலம் கொடுத்ததாக முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவுக்கும் அவருடைய உதவியாளர் சேனக்க ஹரிபிரியவுக்கும் எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது இடம்பெற்ற குறுக்கு விசாரணையிலேயே ஓய்வுபெற்ற பிரிகேடியர் அசோக வீரசிங்க மேற்கண்டவாறு சாட்சியமளித்தார்.

மேலும், இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் தொடர்பில் முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவிற்கு அறிவித்ததாகவும், எனினும், அவர்களைக் கைது செய்வது தொடர்பில் அவர் எவ்விதமான நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை என்றும் ஓய்வுபெற்ற பிரிகேடியர் அசோக வீரசிங்க சாட்சியமளித்தார். இதனையடுத்து இந்த வழக்கு அடுத்த மாதம் 14 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனம் ஹிரிம்புரேகமவின் நியமனத்திற்கு எதிர்ப்பு

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு புதிய உபவேந்தராக கலாநிதி குமார ஹிரிம்புரேகம நியமிக்கப்பட்டமைக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் சம்மேளனம் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள் சங்கம் இதுகுறித்து நேற்று முனதினம் பிரேரணையொன்றை நிறைவேற்றியதாக சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்தார்.

இதற்கமைய, புதிய உபவேந்தர் கலந்துகொள்ளும் எந்தவொரு கூட்டத்திலும் தமது விரிவுரையாளர்கள் கலந்துகொள்ளமாட்டார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

உரிய தகைமைகளைக் கொண்டிராத ஒருவர் தற்போது குறித்த பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர் சம்மேளனம் தெரிவித்தது.

இந்தவிடயம் தொடர்பில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் கையொப்பத்துடன் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பவுள்ளதாகவும் கலாநிதி ரஞ்சித் தேவசிறி கூறியுள்ளார்.

குறித்த பதவியிலிருந்து கலாநிதி குமார ஹிரிம்புரேகம விலகுவதற்கு இரண்டு வாரங்கள் கால அவகாசம் வழங்கியுள்ளதாகவும் அவர் விலகாத பட்சத்தில் கடும் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் சம்மேளனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# பெண்ணின் தொலைபேசி இலக்கம் கேட்டவருக்கு தர்மஅடி

(வவுனியா)

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் திருமண வீட்டில் பெண் ஒருவரிடம் தொலைபேசி இலக்கத்தை தருமாறு தொந்தரவு செய்தவர்த்தகருக்கு அப்பகுதி இளைஞர்கள் சேர்ந்து தாக்கியுள் ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, வவுனியா, கந்தசாமி கோவில் வீதியில் உதிரிப்பாகம் விற்பனை செய்யும் 50 வயது மதிக்கத்தக்க வர்த்தகர் ஒருவர் திருமண வீடொன்றில் கலந்துகொண்டிருந்த சமயம் அங்கு வந்திருந்த பெண்ணை தொடர்ச்சியாக தொந்தரவு கொடுத்து தொலைபேசி இலக்கத்தைத் தருமாறு கோரியுள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த அப்பெண் திருமண வீட்டில் அவரை எச்சரித்துவிட்டு அங்கிருந்து உடனடியாக முச்சக்கர வண்டியொன்றில் தனது வீட்டிற்கு சென்றுள்ளார். இச் சமயம் அவ் வர்த்தகர் முச்சக்கரவண்டியை பின்தொடர்ந்து வருவதை அவதானித்த பெண் தனது வீட்டில் இருந்த உறவினர்களிடம் முறையிட்டுள்ளார். அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் ஒன்று திரண்டு அவ்வர்த்தகரை மடக்கிப் பிடித்து பலமாகத் தாக்கியுள்ளனர். இதன் காரணமாக வர்த்தகர் கைவிரலில் பலத்த காயங்களுக்குள்ளானதுடன் மோட்டார் சைக்கிளும் சேதமடைந்த நிலையில் இளைஞர்களால் விரட்டியடிக்கப்பட்டுள்ளார்.

## 40,000 போலி வைத்தியர்களை கைதுசெய்ய நடவடிக்கை

நாடளாவிய ரீதியில் உள்ள போலி வைத்தியர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. போலி வைத்தியர்களைக் கைது செய்வதற்கான சுற்றிவளைப்புக்களை தேசிய ஔடதங்கள் அதிகாரசபை மேற்கொள்வதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித்த மஹிபால தெரிவித்துள்ளார்.

# பாவத்தின் சம்பளம்

## த.அகிலன் கட்டுரையிலிருந்து

**மரணம் என்றுமே நண்பனல்ல**
**அப்படியிருக்க முடியவே முடியாது.**
**மரணம் பிரியமானவர்களுக்கு எதிரி**
**மரணம் எழுத்தாளர்களுக்கு பாடுபொருள்**
**மரணம் ஆன்மீகவாதிகளுக்குக் கச்சாப்பொருள்**
**மரணம் சிலருக்கு சாகசம்**
**மரணம் சில வேளைகளில் தந்திரோபாயம் அல்லது**
**அப்படி அழைக்கப்படுகிற மண்மூட்டை**
**மரணம் சில வேளைகளில் பெரும் வியாபாரம்**
**மரணம் ஒரு பெரும் அரசியல்.**

என்னுடைய தம்பியின் இறப்புச் செய்தியை அறிந்து என்னிடம் வந்த அந்த நண்பர் என்னைப் பார்த்தபடியே நீண்டநேரம் மௌன மாய் அமர்ந்திருந்தார். திடீரென ஞாபகம் வந்தவரைப்போலக் கேட்டார் என்ன றாங்? எனக்கொருகணம் அவர் என்ன கேட்கிறார் எனத் தெரியவேயில்லை பிறகுதான் புரிந்தது புலிகள் அவர்களுடைய உறுப்பினர்களுக்கு வழங்குகிற இராணுவப் படிநிலையைக் கேட்கிறார் என்பது. நான் பதில் சொல்லாமல் அமைதியாயிருந்தேன். அவர் சிறிது நேரம் என்னைப் பார்த்துக்கொண்டிருந்து விட்டு சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தனாய்த் திரும்பவும் கேட்டார். உங்கட தம்பி அவசரகாலத்தில் அழைத்துச் செல்லப்பட்டவரா அல்லது தானாகச் சேர்ந்தவரா? தொடர்ந்து அவசரகாலத்தில் அழைத்துச் செல்லப்பட்டவராயிருந்தால் வீரவேங்கைதான் குடுத்திருப்பாங்கள் என்றார்.

எவ்வளவு துயரமான உண்மை.
வீரவேங்கைகளின் மரணமும், பிரிகேடியர்களின் மரணமும், இளவரசர்களின் மரணமும், சாதாரண பாலகர்களின் மரணமும், தளபதி களின் மரணமும், சிப்பாய்களின் மரணமும் எத்தனை வேறுபாட்டுடன் அணுகப்படுகிறது, அணுகப்பட்டது. இதற்கெல்லாம் உயிருள்ள சாட்சியங்கள் இன்னும் இருக்கிறார்கள். புரகந்த கழுவர அந்தப்படம் தான் எனக்கிந்த இடத்தில் நினைவுக்கு வருகிறது. அதோடு கூடவே கொக்காவிலில் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தினரால் எரியூட்டப்பட்ட 1500 படை யினரின் சடலங்களும் நினைவுக்கு வருகின்றன. முல்லைத்தீவுப் படைமுகாமை புலிகள் கைப்பற்றியபோது அதில் கைப்பற்றப்பட்ட இராணுவத்தினரின் சடலங்களை அப்போதைய சந்திரிகா அரசாங்கம் கையேற்க மறுத்தது. அந்தச் சடலங்களை வெற்றி இறுமாப்போடு வன்னிச் சனங்கள் சந்திரன் சிறுவர் பூங்காவில் சென்று பார்த்தனர். “முல்லைமண் எங்களின் வசமாச்சு ஈழம் முற்றிலும் வெல்வது திடமாச்சு” வெற்றி மெட்டு வானலைகளில் மிதந்தது. ஏழாம் வகுப்புச் சின்னப்பெடியன் இந்தப் பாட்டைப் பாடிக்கொண்டு ஒழுங்கைக்குள் தனது நீல அரைச் சைக்கிளை ஓடித்திரிந்தான். அது நான் தான். பிறகு அதே சின்னப் பெடி யன் கொக்காவில் ஏ-9 வீதியோரக்காடுகளில் எரிக்கப்பட்ட அந்தச் சடலங்களின் பிணவாடை மறையும் முன்பாக மூக்கைப் பொத்தியபடி கிளிநொச்சியை விட்டு அதே சைக்கிளில் இடம்பெயர்ந்து மாங்குளம் நோக்கிப் போனான். வெற்றி என்பதும் தோல்வியின் முதற்படிதான் சில நேரங்களில். மரணம் எவ்வளவு பொய்யாக எவ்வளவு அரசியலாக, எவ்வளவு ஏமாற்றாக யுத்தத்தை முன்னெடுக்கும் தரப்புகளால் செய்யப்படுகின்றன என்பதற்கது சாட்சி.

இசைப்பிரியாவின் இறந்த உடல் முதலில் துவாரகாவின் உடலாகத்தான் உலகம் முழுவதும் அறியப்பட்டது. உங்களுக்கது நினைவிருக்கலாம். உலகம் பதைபதைத்தது. பிரபாகரனின் மகள் என்கிற பதட்டம் அதிலிருந்தது. பிறகுதான் அது இசைப்பிரியா என்கிற ஆறுதலான தகவல் தமிழ்த்தேசிய இணையப்போராளிகளை வந்தடைந்தது. அந்த ஆறுதலை அவர்கள் 2009இல் வெளிப்படுத்திய விதம் மிகவும் அருவருக்கத்தக்கது. அப்போது நான் பேஸ்புக்கில் எழுதியது நினைவிருக்கிறது “அது அவளில்லாவிட்டால் பரவாயில்லையா?” உண்மையைச் சொன்னால் பரவாயில்லை என்பதுதான் அநேகரின் உள்ளக்கிடக்கை. இந்த மனோ நிலை எங்கிருந்து முளைக்கிறது? இந்தச் சாக்கடைச் சமூகத்திற்குத்தான் அறிவூட்டல் முதலில் தேவை. மரணம் என்பதில் இத்தனை வேறுபாடுகளைக் கண்டுபிடித்து வைத்திருக்கிற ஒரு சமூகம். இழப்பில் இத்தனை தகுதி நிலை களைக் கொண்டியங்கும் சமூக அமைப்பில் எப்படி இழப்பில் இருக்கிறவனுக்கு ஆறுதல் கிடைக்கும்.

சாவு இழப்புத்தான். ஆனால் ஐயையோ என்று ஒன்றையும், அப்படியா சந்தோசம் என்று இன்னொன்றையும் எப்படி இந்தச் சமூகத்தால் பார்க்கமுடிகிறது?

அண்மையில் சவுதி அரேபியாவில் மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட ரிசானாவின் தண்டனை நிறை வேற்றல் காட்சி என்ற பெயரில் ஒரு வீடியோவை பார்த்தேன். உடல் பதற சகமனிதனாயிருக்க வெட்கப்பட்ட ஒரு தருணம் அது. என்ன ஒரு கொடூரமான தருணம் அது. என்னை மிகவும் பாதித்தது. ஆனால் அது ஒரு பெரும் குற்றவுணர்வை எனக்குள் எழுப்பியது. ஒரு பதினைந்து வருடங்கள் முன்னால் என்னுடைய அனுபவம் இது ஒரு பதினாலாவது வயதில் என்று நினைக்கிறேன். நாங்கள் இடம் பெயர்ந்து ஸ்கந்தபுரத்தில் இருந்தோம். தேசத்துரோகியைச் சுடுவதற்காக ஸ்கந்தபுரச் சந்தைக்கு முன்னால் மரக்குற்றியில் ஏற்றிவைத்து குற்றப்பத்திரிகை படித்துக்கொண்டிருந்தார்கள். அந்த மனிதனின் கைகள் பின்னால் கட்டப்பட்டிருக்க அவன் கால்களால் கூப்பியபடி தனக்கருகில் துவக்கேந்தி நின்றவர்களிடம் கெஞ்சிக்கொண்டிருந்தான். துவக்குகள் ஏந்தியிருந்தவர்கள் சுடப்போகிறார்கள் என்றெதிர்பார்த்த தருணத்தில் சரேலென்று பிக்கப்பொன்றின் கதவுதிறந்து வெகு ஸ்டைலாக பிஸ்டலை உயர்த்தி ஒரே வெடி. நான் அதை ஒரு புனிதக் காரியத்தைப் பார்ப்பதைப் போலவே பார்த்தேன். தேசத்துரோகிக்கு வேண்டியதுதான். வெட்கத்துடனும் துயரத்துடனும் சொல்கிறேன் அந்த மனிதன் பற்றி எந்த அக்கறையும் எனக் கிருக்கவில்லை. இறந்து போன அந்த மனிதனை விடவும் பிஸ்டலோடு வந்த கதாநாயகனின் தரிசனம் மகிழ்ச்சியளித்தது. அவர்தான் அந்த விசாரணைப்பிரிவின் பொறுப்பாளர், பொட்டம்மானின் வலது கை. இப்படித்தான் சனங்களிடம் ஆர வாரமிருந்தது. இறந்த போன அந்த மனிதனைப் பற்றி ஒரு நாயும் சீண்டவில்லை. நான் அவனது கொலையை நியாயம் என்றே நினைத்தேன். இன் னும் தெளிவாகச் சொன்னால் நியாயமா அநியா யமா என்றெல்லாம் யோசிக்கக் கூட இல்லை. ஆனால் இத்தனை வருடங்கள் கழித்து யாரோ



ஒரு பெண்ணின் தலை கொய்யப்படுவதைக் கண்டு வேதனைப்படும்போது காட்டிக் கொடுத்ததாய்ச் சொல்லப்பட்டுக் கொல்லப்பட்டவனின் கூப்பிய கால்களும் அந்த மரக்குற்றியில் யாரோ மண்ணள்ளிப் போட்டு மறைத்தபின்னும் எட்டிப்பார்த்த படியிருந்து உறைந்த இரத்தமும் என் நினைவுகளில் மேலெழுகின்றன. அவை என்னைப் பார்த்து பெரிய மனிதாபிமானி மாதிரி நடிக்காதே என்றென்னைக் கேட்குமாப்போல் இருக்கிறது. நான் இந்த இரண்டு மரணங்களையும் பார்த்ததைப் போலத்தானே இந்தச் சமூகம் மரணத்தைக் கொலையை அணுகுகிறது. அப்படியானால் எங்கே அறிவூட்டல் தேவை?

நினைவு கொள்ளல் நல்லதுதான். தேவைதான். நமது உரிமைதான். ஆனால் இன்றைக்கு அது பெரும் அரசியலாகவும் வியாபாரமாகவும் தமிழ் மொழிக்குப் புதிய சொற்களைக் கண்டடைவதற்கான நாளாகவும்தான் இருக்கிறது. மே 18 ஐ என்ன பெயரில் அழைப்பது என்பதிலேயே தமிழ்த்தேசிய ஜனநாயக இதயத்தில் ஒரு பெயரில்லை. அதற்கே ஆயிரம் அடிபாடு. நீங்கள் தமிழ்த்தேசியத்தை இந்த அடிபாடுகளிலிருந்து பார்க்காதீர்கள் என்பதாய் மரத்திலிருந்து பாம்பொன்று காதுக்குள் சொல்லும். இன்றைக்கு புலிகள் இயக்கமே பலதாய் பிரிந்திருக்கிறது. அதற்குள் ஒற்றுமை வேண்டி ஒரு சிலர் பேசுகிறார்கள். காலப்போக்கில் மற்றவற்றைப் பின்தள்ளி ஒரு அமைப்பு ஏகப்பிரதிநிதித்துவம் பெறும், மற்ற இரண்டோ மூன்றோ அமைப்புக்களும் ஒட்டுக்குழுவாகவும், துரோகக் கும்பலாகவும் உறுதிப்படுத்தப்படும். தமிழ்த்தேசியத்தின் ஜனநாயக இதயம் பலத்துடன் இருப்பதாகப் பத்தியாளர் எழுதுவார்கள். இதுதானே முப்பத்துச் சொச்சம் இயக்கங்களுக்கும் நடந்தது. வாழ்க்கை மட்டுமல்ல வரலாறும் வட்டம் தானோ?
நினைவு கொள்ளுதலில் எவ்வளவு அரசியல் இருக்கிறது? யார் நினைவு கொள்ளப்படுகிறார்? யாரால் நினைவு கொள்ளப்படுகிறார் என்பதில் தானே எல்லாம் இருக்கிறது இல்லையா? யார் யாரை நினைவு கொள்ளுவது யார் யாரைக் கழிப்பது ஒரு தீர்மானத்துக்கு வரமுடியுமா? ஒரு உதாரணத்துக்குச் சொல்கிறேன் தியாகி கள் தினத்துக்கும் மாவீரர் தினமளவு பிசினஸ் நடக்குமா? மன்னிக்கோணும் கவனம் கிடைக்குமா? எங்களுக்குள் இவ்வளவு சிக்கல் இருக்கிறதே இதை எப்படித் தீர்ப்பது? நாங்களே இன்னொருவர் நினைவுகொள்ளும் உரிமையை மறுத்தபடி நமது உரிமைக்காய் குரலெழுப்புகிறோம் நடக்குமா? அது வேறு இது வேறு. கனி ருசியானது அருந்து அருந்து மரத்தில் தொங்கும் அதே பாம்பு உருவேற்றும்.

அரசாங்கம் இன்றைக்கு யுத்த வெற்றியைக் கொண்டாடுகிறது அல்லது நினைவு கூர்கிறது. ஆனால் இந்த யுத்த வெற்றியைப் பெறுவதற்காக எத்தனை ஆயிரக்கணக்கான ஏழைச்சிங்களவர்களின் வீடுகளுக்கு சவப் பெட்டிகளை வெகுமானமாக இனவாதம் அளித்திருக்கிறது. உண்மையில் சிங்களவர்கள் வீடுகளில் இந்த நாளன்று யுத்தத்தில் இழந்த தங்கள் பிள்ளைகளை நினைக்காமல் உறவினர்கள் இருப்பார்களா?

சமாதான காலத்தில் நம்முடைய ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் நாடாளுமன்றத்தில் சவால் விட்டார் “40000 சவப்பெட்டிகளை தயாராக வைத்திருங்கள்” என்று அப்போது யாழ்ப்பாணத்தில் இருந்த இராணுவ வீரர்களின் எண்ணிக்கையது.
ஆனையிறவு புலிகளிடம் வீழ்ந்த போது உலகம் முழுவதும் பட்டாசுகள் வெடித்தன இனிப்புக்கள் பரிமாறப்பட்டன. அதேநேரம் நூற்றுக்கணக்கான வீடுகளில் சவப்பெட்டிகளுக்கு தாய்மார்கள் துணையிருந்தார்கள். ஆனால் பரிமாறப்பட்ட எந்த இனிப்பிலும் இந்தத் தாய்மாரின் கண்ணீரின் உப்புச் சுவடேயில்லை. வெற்றி ஆரவாரத்தில் துயிலுமில்லப்பாடல் ஒலியடங்கித் தேய்ந்தது. எப்படி இந்த உலகம் இத்தனை கொடூரமானதாய் சீவிக்கிறது? சவப்பெட்டிகளை தயார்ப்படுத்துங்கள் என்று சவால் விட்டவர் இன்றைக்கும் இருக்கிறார். அதே சவாலை அவர் எப்போதும், இன்னொரு சந்தர்ப்பத்திலும் விடத் தயாராயே இருப்பார் என்றே நான் நம்புகிறேன். ஏனெனில் அவருக்கு உறுதியாகத் தெரியும் களத்தில் செத்து மடியப்போவது தானல்ல என்பது.

பல பத்தாண்டுகளுக்கு முன்பே மண்ணுக்காய் போராட்டம் என்ற பெயரில் செத்துப்போன எத்தனையோ பேர் செத்தும் அங்கீகரிக்கப்படாதவர்களாய் தசாப்தங்கள் கடந்தும் ஒரு அனுங்கல் குரலில் நாங்களும் ஈழத்தமிழர்களுக்காய் இனவாதத்திற்கெதிராய்ப் போராடியவர்கள் தான் என்று முனகிக் கொண்டிருக்கிறார்கள்.

“மாண்ட வீரர் கனவு பலிக்கும் மகிழ்ச்சிக் கடலில் தமிழ் மண் குளிக்கும்” என்று கொத்துரொட்டிக் கடைப் பெயர்ப்பலகையில் எழுதிப் போட்டிருக்கிறார்கள். இதற்காகத்தானா இந்தவிலை? இதற்காகவா இத்தனை மரணங்கள்? உண்மையில் இந்தச் சமூகம் அந்த மரணங்களை மதிக்கிறதா? எல்லாவற்றையும் தங்களது இருப்பிற்கானதாகவும், பிழைத்தலுக்காகவும், உணர்ச்சி அரசியலுக்காகவும் ஆகுதியாக்கிக் கொண்டிருக்கிற இந்தச் சமூகம் உண்மையில் இழந்தவர்களைப் பற்றி அக்கறை கொள்வதை விட்டு விட்டு. மரணங்களைக் கொண்டாடாமலிருக்கக் கற்றுக் கொள்ளட்டும். எல்லா இடங்களிலும் மரணத்தின் விளைவுகள் ஒன்றேதான் என்பதை இந்தச் சமூகம் அறிந்து கொள்ளட்டும். பெருமைப்படுத்திவிட்டாலோ அல்லது சிறுமைப்படுத்திவிட்டாலோ மரணம் அல்லது இழப்பு உருவம் மாறிவிடாது என்கிற உண்மையை ஏற்றுக்கொள்ளட்டும். ஆற்றுப் படுத்துதல் பற்றிப் பிறகு பார்க்கலாம்.

# பத்தாயிரம் குடும்பங்களின் வாழ்க்கைத்தர மேம்பாட்டுத்திட்டம்

(கொழும்பு)

வறுமை நிலையிலுள்ள 10000 குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் சமுர்த்தி அதிகாரசபை பத்து நாள் வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது.

நாளை மறுதினம் 31 ஆம் திகதி முதல் ஜூன் 10 ஆம் திகதி வரை இதற்கான செயற்றிட்டம் நடை முறைப்படுத்தப்படுவதுடன் வறுமை நிலையிலுள்ள குடும்பங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு உதவுவதே இத்திட்டத்தின் நோக்கம் என சமுர்த்தி அதிகார சபையின் பொது முகாமையாளர் பந்துல திலகசிறி தெரிவித்தார்.

அரசாங்கத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் நிதியுடன் கொடி விற்பனை நலன் விரும்பிகளிடமிருந்து நன்கொடைகள் பெறப்பட்டும் சமுர்த்தி சங்கங்கள் மூலமாக நிதி சேகரிக்கப்பட்டும் இதற்கான நிதி பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவித்த அவர் உண்மையில் கஷ்டமான குடும்பங்களைத் தேர்ந்தெடுக்கும் பணியை சம்பந்தப்பட்ட கிராமத்தவர்களிடமே ஒப்படைக்கப் படுமெனவும் அவர் தெரிவித்தார்.

உலக புகையிலை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு புகையிலை ஒழிப்பு தொடர்பான செயற்றிட்டங்களையும் சமுர்த்தி அதிகார சபை நடைமுறைப்படுத்தி வருகிறது.

இது தொடர்பான கொடி விற்பனை மூலம்' கிடைக்கும் நிதியும் வறுமை நிலை குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் இத்திட்டத்திற்காக செலவிடப்படவுள்ளதாகவும் அவர தெரிவித்தார்.

வாழ்வெழுச்சித் திட்டத்தின் மூலம் குடும்பங்களின் வறுமைக்கு ஒரு காரணியான புகைத்தல் பழக்கத்தை குடும்பங்களிலிருந்து இல்லாதொழிப்பதற்கு திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. குறிப்பாக இத்தகைய குடும்பங்களுக்கும் மேற்படி திட்டத்தில் முன்னுரிமையளிக்கப்படும்.

குடும்பத்தின் பொருளாதாரம் பாடசாலைக்கு பிள்ளைகளை அனுப்ப வசதி இல்லாத குடும்பங்களுக்கு உதவுதல் உள்ளிட்ட வறுமை நிலையிலுள்ள குடும்பங்களின் தேவைகள் - ஆராயப்பட்டு இத்திட்டத்தின் மூலம் அவர்களை கை தூக்கி விடுவதே முக்கிய நோக்கமெனவும் அவர் தெரிவித்தார்.

சமுர்த்தி அதிகார சபை பிரதி வருடமும் இத்தகைய வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருவதுடன் இம்முறை பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட கஷ்டமான குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றும் இலக்கில் செயற்பாடுகள் முன்னெடுக்கப் படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தெற்கில் நிர்மாணிக்கப்படவுள்ளது நிலக்கரி மின் உற்பத்தி நிலையம்


(கொழும்பு)

500 மெகாவோல்ட் நிலக்கரி மின் உற்பத்தி நிலையமொன்றை தெற்கில் நிர்மாணிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.ஜப்பான் நிதியுதவியின் கீழ், இந்த உற்பத்தி நிலையத்தினை நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் டபிள்யூ.பீ கனேகல குறிப்பிட்டுள்ளார்.

நவீன தொழில்நுட்பத்தின் கீழ் இது நிர்மாணிக்கப்படவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி ஜப்பானுக்கான விஜயத்தின் போது, இதன் நிர்மாணிப் பணிகளின் சில முக்கிய தகவல்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக கனேகல தெரிவித்துள்ளார்.ஆயினும் நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தினை நிர்மாணிப்பதற்கான இடம் இதுவரையில் தெரிவுசெய்யப்படவில்லை எனவும், அது தொடர்பில் ஜப்பானுடன் தொடர்ந்தும் கலந்துரையாடி வருவதாகவும் மின்சார சபையின் தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## எறும்பு கடித்து பெண் மரணம்



(கொழும்பு)

கடி எறும்பு கடித்த பெண்ணொருவர் சிகிச்சை பலனளிக்காமல் நீர்கொழும்பு வைத்தியசாலையில் வைத்து மரணமாகியுள்ளார். சீதுவை, லியனகே முல்லை பிரதேசத்தைச் சேர்ந்த லலிதா பத்மினி திசாநாயக்க என்ற 59 வயதுடைய பெண்ணே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

கடி எறும்பு கடித்ததன் காரணமாக பாதிப்புக்குள்ளான இவர் சீதுவை விஜயகுமாரணதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நீர்கொழும்பு வைத்திய சாலைக்கு கடந்த ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் மாற்றப்பட்டார்.

இந்நிலையில் சிகிச்சை பலனளிக்காமல் நேற்றுப் பிறபகல் மரணமாகியுள்ளார். இதேவேளை, கடி எறும்பு கடித்ததினால் ஏற்பட்ட ஒவ்வாமைக் காரணமாகவே இந்த மரணம் சம்பவித்துள்ளது என வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

குறித்த பெண்ணின் உடற் பாகங்கள் மேலதிக பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அந்த வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## ஆமையுடன் சீனப் பிரஜை கைது

(கொழும்பு)

ஹம்பாந்தோட்டை,மிரிச்சவில பிரதேசத்தில் ஹொட்டல் ஒன்றில் விற்பனை செய்யத்தயாரான நிலையிலிருந்த ஒரு தொகை மிருக இறைச்சியுடன் சீனப் பிரஜை கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை வன ஜீவராசிகள் அலுவலக அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது இந்நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை இறைச்சிக்காக வைத்திருந்த ஆமை ஒன்றும் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

## பெண்கள், சிறுமிகள் உரிமைகள் மாநாடு மலேசியாவில் அமைச்சர் திஸ்ஸ கரலியத்த



(கொழும்பு)

பெண்கள், சிறுமிகளின் உரிமைகள் தொடர்பிலான மாநாட்டில் அமைச்சர் திஸ்ஸ கரலியத்த பங்குபற்றுகின்றார்.

பெண்கள் மற்றும் சிறுமிகளின் உரிமைகள், சுகாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவது தொடர்பிலான மூன்றாம் உலக நாடுகளின் நாடாளுமன்ற அமைச்சர்கள் மாநாடு நேற்று ஆரம்பமாகியுள்ளது.

மலேஷியாவின் கோலாலம்பூர் நகரில் இடம்பெறும். இந்த மாநாடு, எதிர்வரும் 30 ஆம் திகதி வரை நடைபெறுகின்றது.

இதில் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்துகொள்ளவுள்ளார்.

## அவுஸ்ரேலியாவில் பாதுகாப்பாக வாழும் 13 ஆயிரம் குற்றவாளிகள்

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவில் நடைமுறையில் உள்ள குறைபாடான குடிவரவு சட்டங்கள் காரணமாக சர்வதேச ரீதியாக குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் பாதுகாப்பாக வாழ்ந்து வருகின்றனர்.

சுமார் 13 ஆயிரம் குற்றவாளிகள் அவுஸ்ரேலியாவில் பாதுகாப்பாக இருந்து வருவதாக அவுஸ்ரேலிய ஊடகம் தெரிவித்துள்ளது.

இந்தச் செய்தியின் படி இலங்கையில் தமது நண்பியை கொலை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்ட ஒருவர் உரிய சாட்சியங்கள் இல்லாமை காரணமாக சமூகத்துடன் இணைந்து வாழ்ந்து வருகிறார்

அதேநேரம் இறுதியாக எகிப்தில் குற்றச்செயல்களில் ஈடுபட்ட நிலையில் அவுஸ்ரேலியாவுக்கு தப்பிச்சென்ற ஒருவர் கடந்த ஒரு வருடகாலமாக பாதுகாப்பாக இருந்து வந்துள்ளதாக அவுஸ்ரேலிய ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

## புலி உறுப்பினர் ஒருவர் உட்பட கைதிகள் தப்பியோட்டம்

(கொழும்பு)

முக்கிய விடுதலைப்புலி கைதி ஒருவர் ஏனைய நான்கு கைதிகளுடன் தப்பியோடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாத்தறை வெசாக் வலயத்தில் பணியாற்றுவதற்காக நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்த சிறைக் கைதிகளும் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்ட முக்கிய விடுதலைப் புலி கைதி ஒருவரும், ஏனைய நால்வரும் வெசாக் வலயத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

வெசாக் வலயத்தில் கடமையாற்றுவதற்காக 100 சிறைக் கைதிகள் அழைத்துச் செல்லப் பட்டிருந்தனர். ஜெகதீஸ்வரன் என்ற விடுதலைப் புலி கைதியே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்காக அண்மையில் ஜெகதீஸ்வரன் என்ற கைதிக்கு ஐந்து ஆண்டுகால கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

கைதிகளை கண்டு பிடிக்க விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

## முகாமைத்துவ பீடத்திற்கு புத்தகங்கள் அன்பளிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வணிக முகாமைத்துவ பீடத்திற்கு, அவுஸ்ரேலியாவிலுள்ள கல்லூரி ஒன்றில் இருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

அவுஸ்ரேலியாவில் கல்லூரி ஒன்றில் இருந்து புத்தகங்களைப் பெற்ற ஒருவர் அதனை அப்படியே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளார்.

முகாமைத்துவ வணிகபீட பீடாதிபதி வேல்நம்பி திருகோணமலைக்கு கடந்த சனிக்கிழமை சென்று புத்தகங்களை பொறுப் பேற்றார்.

## அதிகாரம் யாருக்கு?

(கொழும்பு)

காணி மீட்டல் மற்றும் காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் கடமையை செய்வதற்கு பொலிஸாருக்கு அதிகாரம் இல்லையென நீதிமன்றம் தெரிவித்ததையடுத்து சந்தேக நபர் ஒருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். கொம்பனி வீதியைச்சேர்ந்த மொஹமட் பைசார் என்பவரையே கோட்டை நீதவான் நீதிமன்ற நீதவான் திலின கமகே நேற்று இவ்வாறு விடுதலைசெய்தார்.

நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான இடத்தில் சட்டவிரோதமாக தற்காலிக கூடாரத்தை அமைத்திருந்ததாக அவருககு எதிராக பொலிஸார் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ததுடன் அந்தக் கூடாரத்தையும் அகற்றியுள்ளனர்.

இந்நிலையில் இந்த வழக்கு நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த விவகாரத்தில் பொலிஸார் முழுமையாக சட்டத்தை மீறி செயற்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டிய நீதவான், இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு பொலிஸாருக்கு எவ்விதமான அதிகாரமும் இல்லையென்றும் சுட்டிக்காடடினார்.

## துஷ்பிரயோக வழக்கை மீளப்பெற மறுப்பு

(கொழும்பு)

பாரிய நிதி மோசடி குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள சக்விதி ரணசிங்க என்று அழைக்கப்படும் அபய ரணசிங்கலாஹே சந்தன வீரகுமார என்பவருக்கு எதிரான துஷ்பிரயோக மற்றும் ஊழல் வழக்கை மீளப்பெற முடியாதென சட்டமா அதிபர் அறிவித்துள்ளார்.

1998 ஆம் ஆண்டு மார்ச் 13 ஆம் திகதி 16 வயதான சிறுமியை அவரது பாதுகாவலர்களிடம் இருந்து கடத்திச்சென்று துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக இவருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்டவர் தற்போது பிரதிவாதியின் சட்டபூர்வ மனைவி என்பதால் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை வாபஸ் பெறுமாறு அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ரவீந்ர செனரத் முறைப்பாட்டாளர் தரப்பிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்த வேண்டுகோள் தொடர்பில் சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான அரச தரப்பு சட்டத்தரணி மஹேஷி சில்வா ஆட்சேபனை வெளியிட்டதால் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தேவிகா தென்னக்கோன் தீர்மானித்துள்ளார்.

# யாழ்.கரையோரப் பிரதேசங்களில்
# பாரிய இடிதாங்கியை அமைக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பாசையூர், குருநகர் உள்ளிட்ட கரையோரப் பிரதேசங்களில் காலநிலை மாற்றத்தால் இடி, மின்னல், புயல் காரணமாக பாதிப்புக்கள் ஏற்படாமல் இருக்க அதிகூடிய சக்தி வாய்ந்த இடி தாங்கியை பொருத்தி கடற்றொழிலாளர்கள் அச்சமின்றி தொழில் செய்ய உதவுமாறு யாழ். பாசையூர் புனித அந்தோனியார் கிராமிய கடற்றொழில் அமைப்பும், யாழ்.பாசையூர் புனித அந்தோனியர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கமும் கோரிக்கையை முன்வைத்துள்ளன.

கடந்த 13 ஆம் திகதி விடிகாலை வேளையில் குடாக் கடலில் தொழிலில் ஈடுபட்டிந்த எமது தொழிலாளர் பட்ட துன்பங்கள், ஏற்பட்ட இழப்புக்கள் சொல்லில் அடங்காதவை. வயது வித்தியாசமின்றி ஒவ்வொரு தொழிலாளியும் தம் வாழ் நாளில் இவ்வளவு பயங்கரத்தை தாம் அனுபவித்ததில்லை என்று சொல்லும் அளவிற்கு அந்த இடி மின்னல் அமைந்திருந்தது.

ஒவ்வொரு வருடத்திலும் இந்த இடி மின்னலின் தாக்கம் குடாக்கடலில் இரண்டு மூன்று முறைக்கு மேல் ஏற்பட்டுவருகிறது. ஒவ்வொரு முறையும் முன்னையதை விட சக்தி வாந்ததாக இந்தத் தாக்கம் ஏற்படுவதும் எம் தொழிலாளர்கட்கு பெரும் இழப்பையும், அச்சத்தினையும் உண்டாக்கி வருகிறது.

அத்தொழிலாளர்களை மட்டுமல்ல தொழிலுக்குச்சென்ற தங்கள் உறவுகளின் நிலை எதுவோ என்று எண்ணி ஏங்கித் தவித்து நிற்கும் குழந்தைகள், பெற்றோர்கள், உடன் பிறப்புக்கள் மனப்பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர்.

பாசையூரை அண்டிய கடற் பிரதேசத்தின் ஒரு பகுதியையாவது இடி மின்னல் தாக்கத்திலிருந்து பாதுகாக்க 2004 ஆம் ஆண்டு பாசையூரை கடற்றொழில் சங்கமானது அந்தோனியார் ஆலயத்தின் கோபுர உச்சியில் 75,000 ரூபா செலவில் இடி தாங்கி ஒன்றைப் பொருத்தியது. அது தற்போது செயலிழந்து உள்ளது.

அதனை மீள புனரமைத்தாலும் அது ஒரு குறிப்பிட்ட சுற்று வட்டத்தினையே பாதுகாக்கும். யாழ்.குடாக்கடலில் பரந்த பகுதிக்கு பாதுகாப்பினைத் தரும் சக்தியற்றது.

எனவே மண்டைதீவு, கல்முனை (பூநகரி), தலைமுனை (கேரதீவு), போன்ற முக்கியத்துவம் வாய்ந்த முனைப் பகுதிகளில் அதிகூடிய சக்தி வாய்ந்த இடி தாங்கிகளைப் பொருத்தி கடற்றொழிலாளர் அச்சமின்றி தொழில் செய்ய உரிய நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு அமைப்புக்கள் கேட்டுள்ளன.

# வேலணையில் வெசாக் தினம்


(வேலணை)

வேலணையில் வெசாக் கொண்டாட்ட நிகழ்வுகள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

வேலணை கடற்படை முகாம்களிலும், இராணுவ முகாம்களிலும் இவ்விழா கொண்டாடப்பட்டது. வங்களாவடி, இராணுவத்தினரால் நடாத்தப்பட்ட வெசாக் விழாவில் வேலணை வர்த்தக சங்கத்தலைவர் லயன் ஜெயச்சந்திரமூர்த்தி (ஜே.பி.), உபதலைவர் க.பாஸ்கரன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் வெசாக் பக்தி கீதங்கள் ஒலிபரப்பப்பட்டதுடன், கோப்பி போன்ற பானவகைகளும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கெண்டனர்.

# வேலணை பிரதேச சபையினால் குடிநீர் விநியோகம்



(வேலணை)

வேலணை பிரதேச சபையினால் சபைக்குட்பட்ட பிரதேசங்களுக்கு தண்ணீர்த் தாங்கி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

தற்போது காணப்படும் வரட்சி நிலை காரணமாக குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், இப்பிரதேச சபையினால் இத்திட்டம் நடைபெற்று வருகிறது.

குறிப்பாக மண்டைதீவு, புங்குடுதீவு, துறையூர், அம்பிகை நகர், கண்ணபுரம் போன்ற பல பிரதேசங்களுக்கு பிரதேச சபைக்குச் சொந்தமான தாண்ணீர்த்தாங்கி மூலம் குறைந்த அளவு கட்டணத்தில் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

அநேக பிரதேசங்களுக்கு குழாய் நீர் முலம் நீர் வழங்கப்படுகின்ற போதிலும், அந்நீர் அவர்களின் அத்தியவசியத் தேவைகளுக்கு போதியளவாகக் காணப்படாததன் காரணமாகவே இவ்வாறு தண்ணீர்த்தாங்கிகள் மூலம் ஒவ்வொரு பிரதேங்களுக்கும் நீர் விநியோகிக்கப்பட்டுவருகின்றன.

ஒருசில பிரதேசங்களுக்கு கிழமையில் ஒரு தடவையும், ஒருசில பிரதேங்களுக்கு கிழமைக்கு இரண்டு, மூன்று தடவையும் குடிநீர் தாங்கிகள் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இதன் மூலம் மக்கள் பயனடைந்துள்ளதாகவும், தமது அன்றாட குடிநீர்த்தேவைகளை பூர்த்திசெய்யக்கூடியதாக இருப்பதாகவும் கிராமத்தவர்கள் தெரிவிக்கின்றனர். (21)


ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளி வருகிறது வாரமலர்.

வாரமலர்
தினமுரசு

நாளைய தினமுரசு வாரமலரில்... 30. 05. 2013





- உலகப் பொருளாதார நெருக்கடி!
- புலிகளின் வீழ்ச்சி வளைந்து கொடுக்காத குறிக்கோள்...
- வடக்குக் கிழக்கு வீரர்களும் கிரிக்கெட்டில் பிரகாசிக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை!
- அவசர முடிவு கொலையில் முடிந்தது..



உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

# முன்னணி வீரர்கள் முன்னேற்றம்



(பாரிஸ்)

பிரெஞ்ச் ஓபன் ரென்னிஸ் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி, சீனாவின் லி நா, ஸ்பெயினின் ரபெல் நடால், ரஷ்யாவின் மரியா ஷரபோவா உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்கள் வெற்றி பெற்றனர்.

பிரான்ஸ் தலைநகர் பாரிசில், பிரெஞ்ச் ஓபன் கிராண்ட் ஸ்லாம் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகின்றது. நேற்று முன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில், டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி, இங்கிலாந்தின் லாரா ராப்சன் மோதினர். இதில் அபாரமாக ஆடிய வோஸ்னியாக்கி 6-3, 6-2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு முதல் சுற்றுப் போட்டியில், சீனாவின் லி நா, ஸ்பெயினின் அனாபெல் மெடினாவை 6-3, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வீழ்த்தி, இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

பெண்கள் பிரிவில் நடந்த மற்ற முதல் சுற்றுப் போட்டிகளில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா, போலந்தின் அக்னீஸ்கா ரத்வான்ஸ்கா, இத்தாலியின் ராபெர்டா வின்சி, ஸ்பெயினின் கர்லா சவுரேஸ் நவரோவ், அமெரிக்காவின் வனியா கிங், பெதானி மட்டக்-சாண்ட்ஸ் ஆகியோர் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்குள் நுழைந்தனர்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் ஸ்பெயினின் ரபெல் நடால், ஜேர்மனியின் டேனியல் பிராண்ட்சை சந்தித்தார். முதல் செட்டை 4-6 என இழந்த நடால், டை பிரேக்கர் வரை நீடித்த 2ஆவது செட்டை 7-6 என கைப்பற்றினார். தொடர்ந்து அசத்திய நடால் அடுத்த இரண்டு செட்டை 6-4, 6-3 என தன்வசப்படுத்தினார். இறுதியில் நடால் 4-6, 7-6, 6-4, 6-3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று, இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.




## விசாரணைக் குழுவில் அங்கம்

(மும்பை)

சூதாட்டச் சர்ச்சை குறித்து விசாரணை நடத்தவுள்ள 3 பேர் கொண்ட குழுவில் முன்னாள் வீரர் ரவி சாஸ்திரி இடம் பெற்றுள்ளார். ஐ.பி.எல். ருவென்ரி-20 தொடரின் 6ஆவது சீசனில் எழுந்துள்ள சூதாட்ட சர்ச்சை குறித்து விசாரணை நடத்த 3 நபர் குழு அமைக்கப்படும் என்று கிரிக்கெட் சபை அறிவித்திருந்தது. இந்த நிலையில், முன்னாள் வீரரும் ஐ.பி.எல். நிர்வாகக் குழு உறுப்பினருமான ரவி சாஸ்திரி, கிரிக்கெட் சபை பொருளாளர் அஜய் ஷிர்கே மற்றும் ஓய்வுபெற்ற நீதிபதி (உயர் நீதிமன்றம்) ஒருவர் அடங்கிய 3 நபர் விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு விரைவில் விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சாதிக்க உதவிய கும்ளேயின் ஆலோசனை




(புதுடில்லி)


மும்பை இந்தியன்ஸ் அணியின் வெற்றிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்ததற்காக நான் பெருமைப்படுகிறேன். எனது இந்தச் சிறப்பான செயற்பாட்டில் அணியின் ஆலோசகர் கும்ளேவுக்கும் பங்கு உண்டு. கும்ளேயின் மதிப்பிடமுடியாத ஆலோசனைகள் நான் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்ப உதவியது என ஹர்பஜன்சிங் தெரிவித்துள்ளார்.

2008ஆம் ஆண்டில் கும்ளே ஓய்வு பெற்ற பின்னர் தற்போது தான் அவரிடம் நான் அதிக நேரம் ஆலோசனை பெற்று இருக்கிறேன். எனது பந்து வீச்சின் பலமான பவுன்சில் கவனம் செலுத்த ஆலோசனை அளித்த அவர் வேகமாக பந்து வீச முயல வேண்டாம் என்று அறிவுரை வழங்கினார்.

அவர் அளித்த ஆலோசனை எனக்கு நல்ல பலனை அளித்தது. விக்கெட்டுகள் வீழ்த்த முடிந்ததுடன், ஓட்டங்களை விட்டுக்கொடுப்பதிலும் சிக்கனமாக செயற்பட முடிந்தது. பவர்பிளேயில் அதிக ஓவர்கள் வீசியது எனது நம்பிக்கையை அதிகரித்தது. இந்திய அணிக்கு திரும்ப முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எனக்கு இன்னும் நிறைய சர்வதேச போட்டிகள் எஞ்சி இருக்கின்றன.

என்னை குறித்த விமர்சனம் தவறு என்பதை எனது ஆட்டம் மூலம் நிரூபிப்பேன். ஐ.பி.எல். தொடரிலிருந்து நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் விலகியது மிகுந்த கவலையான விடயம்தான். இருப்பினும் அவருடைய தீர்மானம் சிறப்பான தருணத்தில் எடுத்திருக்கின்றார் என்றே நினைக்கிறேன். அவருக்குரிய கௌரவத்தை நாம் எப்பொழுதும் அளிப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 2019 உலகக் கிண்ண கிரிக்கெட் வாய்ப்பு பெற்றது இங்கிலாந்து



(லண்டன்)


எதிர்வரும் 2019இல் உலக கிண்ண ஒரு நாள் (50 ஓவர்) கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் நடக்கவுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.,) சார்பில், நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை உலக கிண்ண ஒரு நாள் (50 ஓவர்) கிரிக்கெட் தொடர் நடத்தப்படும். இதுவரை 10 உலக கிண்ணத் தொடர்கள் நடாத்தப்பட்டுள்ளன. கடைசியாக 2010-11இல் இந்தியா, பங்களாதேஷ், இலங்கை நாடுகள் இணைந்து நடத்தின. வரும் 2015இல், 11ஆவது உலக கிண்ணத் தொடரை அவுஸ்ரேலியா மற்றும் நியூசிலாந்து நாடுகள் இணைந்து நடத்த உள்ளன.

இந்நிலையில், எதிர்வரும் 2019இல், 12ஆவது உலக கிண்ணத் தொடரை நடத்தும் வாய்ப்பு இங்கிலாந்துக்கு வழங்கப்பட்டது. இதன்மூலம் 5ஆவது முறையாக இங்கிலாந்தில் உலக கிண்ணத் தொடர் நடக்கவுள்ளது. முன்னதாக 1975, 79, 83, 99இல் நடந்தது. இதில் மொத்தம் 10 அணிகள் பங்கேற்கும். ஐ.சி.சி., தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களில் உள்ள அணிகள் நேரடியாக தகுதி பெறும். மீதமுள்ள இரண்டு இடங்களுக்கு தகுதிச் சுற்று நடத்தப்படும். இத்தொடருக்கான முழு அட்டவணை விரைவில் வெளியிடப்படும் என இங்கிலாந்து கிரிக்கெட் சபை (இ.சி.பி.,) தெரிவித்தது.

இதுகுறித்து இ.சி.பி., தலைமை செயல் அதிகாரி டேவிட் கூலியர் கூறுகையில், இங்கிலாந்தில் எதிர்வரும் 2019இல் உலக கிண்ணத் தொடரை நடத்தவிருப்பதில் பெருமை அடைகிறேன். ஏற்கனவே நான்கு முறை நடத்தி உள்ளதால், இம்முறையும் சிறப்பாக நடத்தப்படும் என நம்புகிறேன். இத்தொடர் மூலம், இங்கிலாந்தில் கிரிக்கெட் போட்டியின் வளர்ச்சியை அதிகப்படுத்தலாம் என்றார்.

## சச்சினுக்கு அர்ப்பணம்



(மும்பை)

ஐ.பி.எல். வெற்றிக் கிண்ணத்தை நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு அர்ப்பணிக்கின்றோம் என மும்பை இந்தியன்ஸ் அணிக் கப்டன் ரோகித் சர்மா தெரிவித்துள்ளார்.

காயம் காரணமாக சச்சின் இறுதிப்போட்டி உள்ளிட்ட கடைசி சில போட்டிகளில் பங்கேற்க முடியாதது ஏமாற்றம் அளித்தது. இருப்பினும் இவர், இளம் வீரர்களுக்கு நிறையஆலோசனைகள் வழங்கி ஊக்கப்படுத்தினார். இவர் அணியின் முதுகெலும்பாக விளங்கினார். ஐ.பி.எல். கிரிக்கெட் அரங்கில் இருந்து விடைபெற்ற இவருக்கு, கிண்ணத்தை வென்று மிகச் சிறந்த பரிசு அளித்தோம். இதனை இவருக்கு அர்ப்பணிக்கிறோம் எனவும் அவர் தெரிவித்தார்.

## ரென்னிஸ் பிரிமியர் லீக் ஆரம்பிக்கிறார் பூபதி

ஐ.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரைப் போல, ஆசிய அளவில் நகரங்களை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச பிரிமியர் ரென்னிஸ் லீக் (ஐ.பி.டி.எல்.) போட்டித் தொடரை மிகப் பிரம்மாண்டமாக நடாத்த இந்திய வீரர் மகேஷ் பூபதி ஏற்பாடு செய்து வருகிறார்.

இது குறித்து அவர் கூறுகையில், முன்னணி வீரர்கள் நடால், ஜோகோவிச், பெடரர், பயஸ் மற்றும் வீராங்கனைகள் செரீனா, ஷரபோவா, அசரென்கா ஆகியோர் மட்டுமல்லாமல் முன்னாள் நட்சத்திரங்கள் பீட் சாம்ப்ராஸ், அகாசி, ஸ்டெபி கிராப் ஆகியோரும் இதில் பங்கேற்க உள்ளனர். இந்தத் தொடர் ரென்னிஸ் இரசிகர்களுக்கு விருந்தாக அமையும். சிங்கப்பூர், டோக்கியோ, மும்பை, டில்லி, ஹொங்கொங், மணிலா, சியோல், டுபாய் போன்ற நகரங்களில் போட்டிகளை நடாத்தத் திட்டமிட்டுள்ளோம் என்றார்.

## கிறிஸ் லைனுக்கு அபராதம்



அவுஸ்ரேலியாவின் துடுப்பாட்டவீரர் கிறிஸ்லைனுக்கு 2000 அவுஸ்ரேலிய டொலர்கள் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சமூக இணையத்தளம் ஒன்றில் கிறிஸ் லைன் வெளியிட்டிருந்த கருத்துக்கள் அவமதிக்கும் வகையில்அமைந்துள்ளதாகத் தெரிவித்து இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

கிரிக்கெட் விழுமியங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து கிறிஸ் லைன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

பிறிஸ்பேன் பெண் ஒருவரினால் ரக்பி வீரர் பென் டியோவிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குற்றச்சாட்டு குறித்து கிறிஸ் லைன் கருத்து வெளியிட்டிருந்தார்.

இதற்கு முன்னர், சமூக இணையத் தளத்தில் கருத்து வெளியிட்டமைக்காக அவுஸ்ரேலியாவின் டேவிட் வோர்னருக்கும் அபராதம் விதிக்கப்பட்டிருந்தது.

# லண்டன் பயணமானது இலங்கை அணி



(கொழும்பு)

சம்பியன்ஸ் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் பங்கேற்றும் நோக்கில் அஞ்சலோ மத்தியூஸ் தலைமையிலான இலங்கை கிரிக்கெட் குழு நேற்று முன்தினம் அதிகாலை இங்கிலாந்து பயணமானது.

இந்தத்தொடரில் இலங்கை அணி பங்குகொள்ளும் முதல் போட்டி காடிஸ் சோபியா பூங்கா திடலில் எதிர்வரும் ஜூன் 9 ஆம் திகதி நியூசிலாந்து அணிக்கு எதிராக இடம்பெறவுள்ளது.

இலங்கை அணி ஏ பிரிவில் பங்கேற்கும் அதே வேளை, அதேபிரிவில் இங்கிலாந்து, அவுஸ்ரேலியா மற்றும் நியூசிலாந்து அணிகள் அடங்கியுள்ளன.

சர்வதேச கிரிக்கெட் சம்மேளனத்தின் சம்பியன்ஸ் லீக் கிரிக்கெட் போட்டித் தொடர் 1998 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை இடம்பெற்ற போட்டிகளில் தென்னாபிரிக்கா, மேற்கிந்திய தீவுகள் அணி, அவுஸ்ரேலிய அணி என்பன வெற்றிக்கிண்ணங்களை சுவீகரித்திருந்தன.

அதேவேளை, 2002 ஆம் ஆண்டு இடம்பெற்ற போட்டித் தொடரில் இலங்கை மற்றும் இந்திய கிரிக்கெட் அணிகள் இணை வெற்றியாளர் கிண்ணத்தை பெற்றுக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாவட்ட மட்ட மைலோ கிண்ண வலைப்பந்து

# அராலி சரஸ்வதி, சண்டிலிப்பாய் இந்து சம்பியன்



அராலி சரஸ்வதி வித்தியாலயம்



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

(உடுவில்)

மாவட்ட மட்ட மைலோக் கிண்ண வலைப்பந்தாட்டப் போட்டியில் அராலி சரஸ்வதி வித்தியாலயம், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணிகள் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான மைலோக் கிண்ண வலைப்பந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 14, 16, 18 ஆகிய வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் போட்டிகள் நடைபெற்றன. 14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், அராலி சரஸ்வதி வித்தியாலய அணியும் மோதின. இதில் அராலி சரஸ்வதி வித்தியாலயம் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்தியது. இறுதியில் 12-2 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும், பொன்னாலை வரதராஜா பெருமாள் வித்தியாலய அணியும் மோதின. இதில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை 13-8 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும், அராலி சரஸ்வதி வித்தியாலய அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்தியது. இறுதியில் அராலி சரஸ்வதி வித்தியாலய அணி 18-11 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

மூன்றாமிடத்திற்கான போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும் மோதின. இதில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி. அணி 12-04 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக்கொண்டது.

19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும் மோதின. இதில் இரு அணிகளும் முதற்பாதி ஆட்டத்தில் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஆடின. பிற்பாதி ஆட்டத்தில் எழுச்சிபெற்ற சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி 23-14 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இதில் முதல் இடங்களைப் பிடித்துக் கொண்ட அணி தேசிய மட்ட மைலோக் கிண்ணப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (17,93,எஸ்.எஸ்.பி.)

## இறுதியில் யூனியன், அரியாலை



(அரியாலை)

அரியாலை சனசமூக நிலையத்தினால் நடாத்தப்பட்டுவரும் வலைப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு யூனியன் மற்றும் அரியாலை ஐக்கிய அணிகள் தகுதிபெற்றுள்ளன.

அரியாலை சனசமூக நிலையத்தினால் 64ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு அமரர் பொன்னையா சிவலிங்கம் ஞாபகார்த்தமாக வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியை நடாத்தி வருகின்றது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆறு விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றின. இதன் அரையிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் அரியாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

முதல் அரையிறுதியாட்டத்தில் யூனியன் ஏ அணியினை எதிர்த்து ஒளி ஸ்டார்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது. இப்போட்டியில் யூனியன் ஏ அணி 23:05 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் யூனியன் பி அணியினை எதிர்த்து அரியாலை ஐக்கிய அணி மோதியது. இப்போட்டியில் அரியாலை ஐக்கிய அணி 18:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது. இறுதிப் போட்டிகள் விரைவில் இடம்பெறவுள்ளதாகப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# மாவட்ட எல்லே

## தெல்லிப்பளை சம்பியன்



(யாழ்ப்பாணம்)

மிகவும் பரபரப்பாக நடைபெற்ற எல்லே போட்டியில் அதிக ஓட்டங்களை பெற்ற சாதனையுடன் தெல்லிப்பளை பிரதேச செயலக அணி யாழ். மாவட்ட சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற யாழ். மாவட்ட பிர தேச செயலகங்களுக்கிடையேயான ஆண்களுக்கான எல்லே போட்டி நடைபெற்றது.

இதில் பிரதேச செயலகப் போட்டிகளில் முதலிரு இடங்களைப் பிடித்த அணிகள் பங்குபற்றின. இருப்பினும் இதன் இறுதிப் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியும் தெல்லிப்பளை பிரதேச செயலக அணியும் மோதிக் கொண்டன.

முதலில் விளையாடிய தெல்லிப்பளை பிரதேச செயலக அணி அனைவரும் ஆட்டமிழந்து 13 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

பதிலுக்கு விளையாடிய பருத்தித்துறை பிரதேச செயலக அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 08 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

இரண்டாவது இனிங்ஸில் விளையாடிய தெல்லிப்பளை பிரதேச செயலக அணி அனைவரும் ஆட்டமிழந்து 29 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.அது ஒரு இனிங்ஸில் ஒரு அணி பெற்றுக் கொண்ட அதிகூடிய ஓட்டமாக கணக்கிடப்பட்டுள்ளது.

பதிலுக்கு 35 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய பருத்தித்துறை பிரதேச செயலக அணி அனைவரும் ஆட்டமிழந்து மீண்டும் 08 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

ஆட்ட நிறைவில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணி 42-16 என்ற எண்ணிக்கையில் வெற்றி பெற்று யாழ். மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

இறுதிப் போட்டி ஒன்றில் அதி கூடிய ஓட்டமாக 42 ஓட்டங்கள் பெறப்பட்டுள்ளமை இதுவே முதற் தடவையாகும். (93)

## எதியோப்பிய வீரர் தங்கம்



(அடிஸ் அபாபா)

அமெரிக்காவின் பாஸ்டன் மாகாணத்தில் நடைபெற்ற மரதன் போட்டியில் எதியோப்பிய வீரர் லெலிசா தங்கப் பதக்கத்தை வென்றார்.

அமெரிக்காவின் பாஸ்டன் மாகாணத்தில், கடந்த மாதம் 15 ஆம் திகதி நடைபெற்ற இந்த மரதன் ஓட்டப்பந்தயம், நடுவில் நிகழ்ந்த குண்டு வெடிப்புகளினால் தடைப்பட்டது.

இந்தச் சம்பவத்தில், மூன்று பேர் கொல்லப்பட்டனர். 264 பேர் காயமடைந்தனர். இதற்குக் காரணமாக இருந்த இரு சகோதரர்களில் ஒருவன் பொலிஸாரால் சுடப்பட்டார். மற்றொருவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

தடைப்பட்ட மரதன் ஓட்டம், நேற்று முன்தினம் மீண்டும் நடைபெற்றது. ஒரு ஓட்டம் என்ற தலைப்பினில் இலக்கினை அடைவோம் என்ற கோஷத்துடன் நடாத்தப்பட்ட இந்த நிகழ்ச்சியில், மூன்று அமெரிக்கக் கொடிகளும், ஒரு சீன நாட்டுக் கொடியும் இறந்தவர்களின் நினைவாக சுமந்து வரப்பட்டன. சுமார், 2,000 பேர் கலந்துகொண்ட இந்தப் போட்டியில் எதியோப்பிய நாட்டைச் சேர்ந்த லெலிசா முதலிடம் பெற்றுப் பதக்கம் வென்றார்.

இந்த நிலையில் எதியோப்பியாவில் செய்தியாளர்களைச் சந்தித்த லெலிசா இந்தப் போட்டியில் இறந்தவர்களைக் கௌரவிக்கும் விதமாகத எனது பதக்கத்தைத் திருப்பிக் கொடுக்க உள்ளேன்.

விளையாட்டை, விளையாட்டாக மட்டுமே பார்க்கவேண்டும். அதனைப் போர்க்களமாக நினைக்கக்கூடாது என்று கூறினார்.



# போராட்டம் தவிர்

- வண்ணநிலவன் -

தமிழ்நாட்டிலும், அகில இந்திய அளவிலும் எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கின்றன. நீண்டகாலமாக



இருந்து வரும் காஷ்மீர் பிரச்சினை இந்தியாவின் பிற மாநிலத்திலுள்ளவர்களுக்கு வெறும் தகவல் களமாகவும், செய்திகளாகவும்தான் தென்படுகிறது. மாவோயிஸ்டு களின் பிரச்சினை பற்றி ஒரு தமிழனோ, அல்லது ஒரு மலையாளியோ அலட்டிக் கொள்வதில்லை.

வட கிழக்கு மாநிலங்களி லுள்ள வங்கதேசத்தவர் பிரச்சினை பற்றி பக்கத்தி லுள்ள பீஹார், ஒடிஸா மாநில மக்கள் கூட்டம் பெரிதாகக் கருதுவதில்லை. அந்தந்த மாநிலப் பிரச்சினை அந்தந்த மாநிலத்தவரின் பாடு என்ற அளவில்தான் ஒட்டுமொத்த இந்தியருமே இருந்து வருகின்றனர்.

ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களின் மூலம் எல்லாவற்றையுமே சாதித்துவிட முடியாது. ஆனால், மனதளவில் நாம் நமது தேசத்தின் துன்பங்களைப் பற்றிய விழிப்புணர்வுடனாவது இருக்கிறோமா என்றால் இல்லை. விழிப்புணர்வு வேறு, போராட்டம் வேறு. விழிப்புணர்வு சாத்வீகமான உணர்ச்சி. ஆனால், போராட்டம் வன்முறையில் முடியும் அசுர உணர்ச்சி. எப்போது எல்லை மீறும் என்று சொல்ல முடியாத ஆபத்து போராட்ட உணர்வில் உள்ளது.

குறிப்பாக மாணவர்களும், இளைஞர்களும் விழிப்புணர்வுடன் இருப்பதைவிட, போராட்ட குணத்துடன் கிளர்ந்தெழுவதையே விரும்புகின்றனர். உடனடியான முடிவுகளை எதிர்பார்த்து போராட்டங்களில் ஈடுபடுகின்றனர். சமீப காலமாகத் தமிழகத்தில் இலங்கைப் பிரச்சினைக்காக மாணவர்கள் உண்ணாவிரதம், இரயில் மறியல், உருவ பொம்மைகள் எரிப்பு என்று பல்வேறு விதமான போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். தேர்வு எழுத வேண்டிய சமயத்தில், கல்லூரி வகுப்புகளுக்குச் செல்லாமல் ஆர்ப்பாட்டம், போராட்டம் என்று அலைகின்றனர்.

போராட்டம் நடத்துவதற்கு அரசியல் கட்சிகள் இருக்கின்றன. நாடாளுமன்ற ஜனநாயகத்தில் அரசியல் கட்சிகளால்தான் உருப்படியாக எதையாவது செய்ய முடியும். ஏற்கனவே தமிழக சட்ட சபையில் இலங்கை விவகாரத்தின் மீது பல மாதங்களுக்கு முன்பே தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நாடாளுமன்றக் கூட்டத் தொடர்களிலும் மத்திய அரசின் கவனத்துக்கு இப்பிரச்சினை கொண்டு வரப்பட்டுள்ளது.

இப்படியிருக்கும்போது சட்டசபையிலோ, நாடாளுமன்றத்திலோ ஒரு உறுப்பினர் கூட இல்லாத கல்லூரி மாணவர்கள் ஏன் உண்ணாவிரதம், போராட்டம் என்று இறங்க வேண்டும்? பெரிய அரசியல் கட்சிகளின் போராட்ட வழிமுறைகளைக் கையில் எடுத்துக்கொண்டு கல்லூரிக்கு மட்டம் போட்டு விட்டுத் தெருவில் இறங்க வேண்டிய தேவை என்ன?

ராஜபக்ஷவைத் தண்டிப்பதும், இலங்கையில் தனி ஈழம் அமைய வேண்டும் என்பதும் ஒரு வெளிநாட்டு விவகாரம். தி.மு.க., அ.தி.மு.க., போன்ற தமிழகத்தின் பெரிய கட்சிகளே ஆண்டுக் கணக்காகப் போராடியும் தீராத அந்நிய நாட்டு விவகாரங்கள் இவை. இந்திய அரசே இலங்கையை நிர்ப்பந்திக்க முடியாமல் திணறுகிற விஷயம் இது. அப்படிப்பட்ட ஒரு வெளிநாட்டு விஷயத்தில் லயோலா கல்லூரி மாணவர்கள் உண்ணாவிரதமிருக்கிறார்கள். திருவாரூரில் கல்லூரி மாணவர்கள் இரயிலை மறிக்கிறார்கள் என்பதற்காக இலங்கை அரசு பணிந்து விடுமா? என்ன அபத்தம் இது.

1965இல் நடந்த ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியைத் துவக்கி வைத்தது தி.மு.க. தான். ஆனால், கிளர்ச்சி ஆரம்பித்த உடனேயே போராட்டத்தை மாணவர்கள் தன்னெழுச்சியாகக் கையிலெடுத்தனர். தமிழகமெங்கும் வன்முறை தலைவிரித்தாடியது. பஸ்கள், வாகனங்கள் எரிக்கப்பட்டன. கடைகள் சூறையாடப்பட்டன. பல ஊர்களில், மாணவர்கள் கலவரத்தை அடக்க துப்பாக்கிச் சூடுகள் நடந்தன. பலர் மடிந்தனர். ஒரு சப்-இன்ஸ்பெக்டர் உயிரோடு எரிக்கப்பட்டார். மாணவர்களின் அரசியல் உணர்ச்சி இப்படித்தான் முடிந்தது.

நாகரிக சமுதாயத்தில் வன்முறைக்கு இடமில்லை. நமது அரசியல் உணர்வை வெளிப்படுத்த வேண்டிய இடம் வாக்குச் சாவடிதான். பீஹாரில் 1970 களின் தொடக்கத்தில் ஜெயப்பிரகாஷ் நாராயண் மாணவர்களைத் திரட்டிக்கொண்டு ஊழலுக்கு எதிரான போராட்டத்தை ஆரம்பித்தார். இந்திரா காந்தி எமெர்ஜென்ஸியைக் கொண்டுவந்து போராட்டங்களை அடக்கினார். இந்திரா தோற்று ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தது. ஜெ.பி. மாணவர்களைத் திரட்டி பீஹாரில் ஊழலை எதிர்த்ததனால், பீஹாரில் உடனே ராமராஜ்யம் தோன்றிவிடவில்லை. அதன் பின்னும் பல ஊழல் ஆட்சிகள் வந்து சென்றன. ஜெ.பி.யின் மாணவர் இயக்கம் சாதித்தது ஒன்றுமில்லை.

அண்ணா ஹஸாரே லோக்பால் மசோதா கொண்டு வரவேண்டுமென்று உண்ணாவிரதமெல்லாம் இருந்தார். ஏதோ பெரிதாக நடந்து விடுமென்று மீடியா சித்தரித்தது. மக்களும் நம்பினர். இன்று அண்ணா ஹஸாரே இருக்கிற இடமே தெரியவில்லை. அவரது சகா கேஜ்ரிவாலும் ஓய்ந்துவிட்டார். நாட்டில் லஞ்ச, ஊழலும் ஒழியவில்லை. லோக்பாலும் வரவில்லை.

ஹைதராபாத் உஸ்மானியா பல்கலைக்கழக மாணவர்கள் திடீர் திடீரென்று கோஷமிட்டு, வகுப்புகளைப் புறக்கணித்து ஓய்ந்து போகின்றனர். தெலுங்கானா வந்தபாடில்லை.

இலங்கை விவகாரமும் இப்படித்தான். அரசியல் உணர்ச்சி மாணவர்களுக்கு இருப்பதில் தவறில்லை. ஆனால், அதற்காக கல்வித் தலங்களை விட்டு வெளியேறி, கல்வியைத் தொடராமல் உண்ணாவிரதம், இரயில் மறியல் என்று போராடுவது தேவையில்லை.


1983 முதல் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றன. இதுதான் முடியும். அரசியலை அரசியல் கட்சிகளிடம் விட்டுவிடுங்கள். சாதாரணத் தமிழ் மக்கள் இதைத்தான் செய்கின்றனர். மாணவர்களுக்கு கல்வி தான் முக்கியம். அரசியல் போராட்டங்கள் தேவையில்லை. போராட்டங்கள் என்பது விழலுக்கிறைத்த நீராகத்தான் முடியும்.

# கோடைகாலக் குறிப்புகள்



- கோடை காலத்தில் உடலில் அதிகமான நீர் இழப்பு ஏற்படும். அதை ஈடுகட்டும் வகையில் சுமார் 8 முதல் 10 டம்ளர் தண்ணீர் தினமும் பருக வேண்டும்.
- அதிகாலை எழுந்தவுடன் குளிர்ந்த நீர் அல்லது எலுமிச்சைச் சாறு அல்லது மோர் ஒரு டம்ளர் அருந்துவது நல்லது.
- மண் பானை நீர் குளிர்ச்சி ஒத்துக்கொள்ளாது என்றால் பானையில் சில துளசி இலைகளைப் போட வேண்டும். அந்த நீர் சளி பிடிக்காது; உடலுக்கும் நல்லது.
- கோப்பி, தேநீர் போன்ற பானங்களையும் எண்ணெயில் பொரித்த பலகாரங்களையும் தவிர்த்துவிடுங்கள்.
- பருத்தி ஆடைகளே நல்லது. இளநிறம் அல்லது வெண்மையான ஆடைகளையே அணிய வேண்டும்.
- வெயிலில் அலைந்து களைத்துப் போய் இருப்பிடம் திரும்பியதும் வாயகன்ற ஒரு பாத்திரத்தில் தண்ணீர்விட்டு கால் பாதங்களைச் சில நிமிடங்கள் அதில் வைத்திருக்க வேண்டும். இதனால் உடல் வெப்பம் தணியும். கால்வலி நீங்கும். நல்ல நித்திரை வரும்.
- வெயிலில் அலைந்து வீடு திரும்பியதும் உடனே ஃபிரிட்ஜில் வைத்த குளிர்பானங்கள் அருந்தக் கூடாது.

# சாதனை நோய்!





புதிய சாதனைகள் நிகழ்த்துவது என்றால், சீனர்களுக்கு அல்வா சாப்பிடுவது மாதிரி. மிகக் கடினமான செயல்களைக் கூட, சர்வ சாதாரணமாக செய்து விடுவர். சீனாவைச் சேர்ந்த, லீ ஜின் என்பவர், கூர்மையான, நீண்ட ஆணி மீது, தன் மொட்டைத் தலையை வைத்து, 10 விநாடிகள் தலை கீழாக நின்று, சாதனை புரிந்துள்ளார். சீனாவின் பாரம்பரிய சண்டைக் கலை நிபுணரான இவர், இதற்காக, பல மாதங்கள், பயிற்சி எடுத்துள்ளார்.

சாதனை நிகழ்த்திய அன்று, இரண்டு பேர் சேர்ந்து, லீயை, தலைகீழாக தூக்கி, ஆணி மீது நிறுத்தினர். கடுமையான வலி ஏற்பட்டாலும், அதை வெளியில் காட்டாமல், இச்சாதனையை நிகழ்த்தி உள்ளார் லீ ஜின்.

சாதனையை முடித்தபின், அவரது மொட்டைத் தலையில், ஆணி குத்திய, கடுமையான பள்ளம் இருந்தது. மற்றபடி, அதிலிருந்து, இரத்தம் எதுவும் வராதது, வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பொதுமக்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

# பாம்பு புழுவாவதில்லை!

என் கதைகளுக்கு இவ்வளவு பணம் வேண்டுமென்று நான் பத்திரிகையாளரிடம் கேட்டதேயில்லை. பேரம் பேச, அவர்கள் என் கதைகளுக்கு தருவது விலை அல்ல. கேட்டுப் பெற அது கூலியும் அல்ல. உரிமைப் போர் புரிய நான் அவர்களிடம் வேலை செய்பவனுமல்ல. எழுத்தாளர் ட்ரேட் யூனியன், எழுத்தாளர் உரிமைக்காக எழுத்தாளர்களே போரிடல் ஆகியவற்றில் எனக்கு நம்பிக்கையில்லை. அப்படிப்பட்ட நிர்ப்பந்தங்கள் வருமாயின், நான் எழுதுவதை விட்டு விடுவேன்.

என் எழுத்துக்களை வெளியிடும் பத்திரிகைகளின் கொள்கைகள், காரியங்கள் ஆகியவற்றுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை, பொறுப்புமில்லை. நான் எழுதுகிற எழுத்துக்களுக்கு மட்டுமே நான் பொறுப்பு. இந்த உறவுகள் பற்றற்றவை. இந்த நட்புகள் பந்தமற்றவை. சம்பந்தமே இல்லாத இடத்தில் சண்டைக்கு இடமேது?

எவர் கட்டளைக்கும் உட்பட்டு நான் எழுதுவதில்லை. என் சொந்த தர்மத்துக்காகவே நான் எழுதுகிறேன். அவற்றை வெளியிட்டு, எனக்கு மரியாதை செலுத்துகிறவர்களிடம் சச்சரவிடுவது அநாகரிகம்.

பத்திரிகைக்காரர்களோடும், ஏன் எல்லாரோடும் ஒரு காலத்தில் நான் துவந்த யுத்தம் கூட செய்ததுண்டு. ஆனால், அது இலக்கிய விவகாரமோ, பொது விவகாரமோ கூட அல்ல. அவை என் அறியாமையின் விளைவுகள்.

நான் இப்போதெல்லாம் பெட்டிப் பாம்பாக அடங்கி விட்டதாக பலர் பேசுகின்றனர்! நல்லது தானே? பாம்பு பல்லை இழக்காமல் இருந்தால் சரி. பெட்டிக்குள் இருப்பதால் பாம்பு புழுவாகி விடாது. துள்ளித் துள்ளிக் குதிப்பதால் புழுக்கள் பாம்பாவதுமில்லை!



(ஜெயகாந்தன் கட்டுரையில்...)

# சினிமா சினிமா

◗ தமிழ்ப் படவுலகைப்போல் வட இந்திய நடிகைகளுக்கு என்றில்லாமல் தென்னிந்திய நடிகைகளுக்குத்தான் தெலுங்குப் படவுலகில் மவுசு அதிகம். அதில் போட்டியிலிருப்பவர்கள் த்ரிஷாவும் இலியானாவும். தெலுங்கில் இலியானாவுக்கு ஒன்றரைக் கோடி வரை சம்பளம் தரப்பட்டு வந்தது. இதில் சற்று பின் தங்கி இருந்த த்ரிஷா, தற்போது இலியானாவை முந்திக் கொண்டிருக்கிறார். “ரம்” என்ற பெயரில் உருவாகும் படத்துக்காக த்ரிஷா ரூபா 1 கோடியே 60 இலட்சம் சம்பளம் வாங்கியிருப்பதாக கூறப்படுகிறது.

◗ ஒரு படம் ஹிட்டாகிவிட்டால் தங்கள் சம்பளத்தை ஹீரோக்கள் உயர்த்துவது வாடிக்கைதான். முன்னணி ஹீரோக்கள் மட்டுமின்றி இளம் ஹீரோக்களும் சம்பளத்தை கோடிக்கணக்கில் உயர்த்திவிட்டனர். முதல் இரண்டு ஹிட் கொடுத்து சம்பளத்தை உயர்த்தாமல் இருந்த விஜய் சேதுபதி, “சூது கவ்வும்” படத்துக்குப் பின் சம்பளத்தை இரண்டு கோடி ரூபா ஆக்கிவிட்டார். “எதிர்நீச்சல்” வெற்றிக்குப் பின் சிவகார்த்திக்கேயன் சம்பளமும் இரண்டு கோடி. விமல் ரூபா 70 இலட்சத்திலிருந்து ரூபா90 இலட்சமாக உயர்த்தியிருக்கிறார். “பரதேசி” இற்குப் பிறகு அதர்வாவின் சம்பளம் ஒன்றரைக் கோடி. “கும்கி”யில் அறிமுகமான விக்ரம் பிரபு ஒரு கோடி ரூபா வாங்குகிறார். கார்த்திக்கின் மகன் கவுதம் அடுத்த படத்துக்கு ஒரு கோடி வாங்கியுள்ளாராம்.

◗ திரைக்கதை மன்னன் என்று பெயரெடுத்த போதும், தன் மகள் சரண்யாவை வைத்து இயக்கிய “பாரிஜாதம்”, மகன் சாந்தனுவை வைத்து இயக்கிய “சித்து ப்ளஸ்2” ஆகிய படங்கள் தோல்வியடைந்ததால், அதன் பின் படமே இயக்காமல் இருந்தார் கே.பாக்யராஜ். ஆனால், இப்போது தன் வழக்கமான குடும்ப சென்டிமென்டை கடந்து, அரசியலை நையாண்டி செய்யும் வகையில், “துணை முதல்வர் அன்னப் போஸ்ட்” என்றொரு படத்தை இயக்கவிருக்கிறார்

◗ கருணாஸ், ஷெரில் பிரிண்டோ ஜோடி சேர்ந்துள்ள படம், மச்சான். இப்படத்தில், இடம்பெறும் ஒரு பாடலில் பார்த்தீபன், எஸ்.ஜே. சூர்யா, பரத், விமல், ஸ்ரீகாந்த், விதார்த், விஜய் சேதுபதி, கிருஷ்ணா, சாந்தனு, சிவா, கோவை சரளா, விஜய் ஆண்டனி, சத்யன், சூரி, திரு, தம்பி ராமையா, பவர் ஸ்டார், ஸ்ரீகாந்த் தேவா ஆகிய 18 பேரும் தோன்றி, நடனமும் ஆடியுள்ளனர். இதில் சிவா, நடித்ததற்கான கூலியே பெறவில்லையாம்.

◗ மற்றுமொரு குறும்பட நாளைய இயக்குனர் வெற்றியாளர் பெரிய திரைக்கு வருகிறார். “பேய்











படம் என்றில்லாமல் மனிதர்களுக்கு இருக்கும் எதிர்மறையான விஷயங்களை த்ரில்லர் பாணியில் சொல்லும் கதை “தி வில்லா”. “பீட்சா”வின் வெற்றிக்குப் பின், தயாரிப்பாளர் சி.வி.குமாரை அணுகி கதை சொன்ன போது, இதை “பீட்சா”வின் இரண்டாம் பாகமாக உருவாக்கலாம் என்றார். “பீட்சா” படத்தில் வரும் ஒரு த்ரில்லர் காட்சியின் தொடர்ச்சியாக இந்தக் கதை தொடங்கும். முழுக்க முழுக்க பிரெஞ்ச் பாணியில் படம் உருவாகிறது” என்கிறார் இயக்குனர் தீபன். “சூது கவ்வும்” படத்தில் நடித்த அசோக் செல்வன், சஞ்சீதா ஷெட்டி ஆகியோர் இப்படத்தில் நாயகன் நாயகியாக நடிக்கின்றனர்.

◗ “இறந்த பின்னும் அப்பாக்கள் கதாநாயகநாய் வாழ்வது மகள்களின் மனதில் மட்டும்தான்...”.

“மகள்கள் கேட்பவற்றை முடிந்தவரை முடியாது என்று சொல்லிவிடக் கூடாது என்கிற வாழ்க்கையைத்தான் அப்பாக்கள் வாழ ஆசைப்படுகிறார்கள்...”.

“மகள்களைப் பெற்ற அப்பாக்களுக்கு மட்டும்தான் தெரியும், முத்தம் காமத்தில் சேர்ந்ததில்லை என்று...” இவை “தங்கமீன்கள்” படத்தில் வரும் வசனங்கள். “கற்றது தமிழ்” மூலம் கவனம் ஈர்த்த இயக்குநர் ராமின் அடுத்த படம் இது. “கௌதம் மேனன் மாதிரியான படைப்பாளியால்தான் இது மாதிரியான கதையை புரிந்து கொள்ள முடியும். நல்ல படைப்பை பார்க்காதவன், நல்ல எழுத்தைப் படிக்காதவனுக்கு இதிலுள்ள வாழ்க்கை புரியாது. படத்துக்கு தயாரிப்பாளர் தேடி அலைந்தபோது, கைகொடுத்தார். கதையை சொல்லும் போது, கொஞ்சம் நடித்துக் காட்டி சொன்னேன். கௌதம் மேனன் கதையை கேட்டு விட்டு, “நீங்களே நடிப்பதாக இருந்தால், இதை தயாரிக்கிறேன்” என்றார். இது என் வாழ்க்கையில் இருந்து மட்டும் எடுக்கப்பட்ட கதையல்ல. உங்கள் வாழ்க்கையும், உங்களை பிரிந்து வாடும் அன்பு மகளின் வாழ்வும் இருக்கிறது.” என்கிறார் ராம்.

◗ “தனுஷ், செல்வராகவன், யுவன்ஷங்கர்ராஜா காம்பினேஷன் என்றால் எனக்கு ரொம்ப பிடிக்கும். “மரியான்” படத்தில் ஒரு பாடலை நான் பாடிப் பார்த்தேன். அதற்கு என் குரல் பொருத்தமாக இல்லை. இன்னும் நல்ல குரலைத் தேடிய போது யுவனின் குரல் பொருத்தமாகப் பட்டது. அதனால் அவரையே இதில் பாட வைத்தேன். ஒரு மணி நேரத்திலேயே முழுப் பாடலையும் பாடிக் கொடுத்து விட்டார்” என தன் ட்விட்டர் பக்கத்தில் கூறியிருக்கிறார் ஏ.ஆர்.ரஹ்மான்.

## யார் வயிறு அழகு?

பிரிட்டன் மக்களால் பெரிதும் நேசிக்கப்படும், இளவரசி கேத் வில்லியம், கர்ப்பமாக இருக்கிறார். இந்த தகவலால், பிரிட்டன் மக்கள் உற்சாகம் அடைந்துள்ளனர். இதேபோல், அமெரிக்காவில், இளம் தலைமுறையினரின் அபிமானத்தைப் பெற்ற, நடிகையும், “டிவி” நிகழ்ச்சி தொகுப்பாளருமான, கிம் கர்தாஷியானும், கர்ப்பமாக உள்ளார். இதனால், இவர்கள், வீட்டை விட்டு வெளியில் வந்தாலே, அதை, மிகப் பெரிய செய்தியாக்கி விடுகின்றன, ஊடகங்கள்.

இந்நிலையில், இளவரசி கேத்தும், கிம் கர்தாஷியானும், வெவ்வேறு நிகழ்ச்சிகளில், சமீபத்தில் பங்கேற்றனர். அப்போது, இவர்களைப் படமெடுத்த புகைப்படக்காரர்கள், இருவரின் புகைப்படங்களையும் வெளியிட்டு, “இருவரில், யார் வயிறு, அழகாக உள்ளது?” என, விவாதம் நடத்ததாத குறையாக, செய்தி வெளியிட்டு வருகின்றன.

ஊடகங்களின் இந்த நடவடிக்கையால், இளவரசி கேத்தும், நடிகை கிம் கர்தாஷியானும், பயங்கர கடுப்பில் இருக்கின்றனர்.



# சாதா குழந்தை To சூப்பர் குழந்தை

08

**- டாக்டர்.பிரகாஷ் -**

கம்யூனிகேஷன் ஸ்கில்ஸ் எனப்படும் தகவல் தொடர்புத் திறனை குழந்தைகளிடம் திறம்பட வளர்ப்பதைப் பற்றிப் பார்ப்போம்.

"Seek first to understand, not to be understood." குழந்தைகளிடம் நாம் உரையாட வேண்டிய விதத்தின் சாரத்தை இந்த மேற்கோள் நமக்கு உணர்த்துகிறது.

வள்ளுவர் இப்போது இருந்திருந்தால், “கம்யூனிகேஷன் ஸ்கில் இல்லார்க்கு இவ்வுலகமில்லை” என்று மாற்றி எழுதி இருப்பார். அந்த அளவுக்கு, அது ஒரு அத்தியாவசியமான ஒன்றாகி விட்டது. சரியாக, தெளிவாக கம்யூனிகேட் செய்யும் குழந்தைகள் மகிழ்ச்சியுடனும், பாடசாலையில் திறமை சாலிகளாகவும், பிற்காலத்தில் சமூகத்தில் உயர்ந்தவர்களாகவும் விளங்குவதாக ஆய்வு முடிவுகள் கூறுகின்றன. குழந்தைகள், அவர்கள் மனதில் இருப்பதைத் தெளிவாக வெளிப்படுத்த (express) வைப்பது எப்படி?

இதற்குச் சிறந்த வழி, குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்கும் எதையுமே விளையாட்டுகள் (Fun) மூலமும், அவர்களின் ஐம்புலன்களையும் முழுவதும் ஈடுபடுத்தும் செயல்களின் மூலமும் கற்றுத் தருவதே.

குழந்தைகளிடம் நீங்கள் தொடர்ந்து பேசுவதன் மூலமே அவர்களின் பேச்சுத் திறனை வளர்க்க முடியும். இதற்கு நல்ல நாள், நட்சத்திரம் எதுவும் பார்க்க வேண்டாம். குழந்தை பிறந்ததில் இருந்தே நீங்கள் அவளு(னு)டன் உரையாடத் துவங்கலாம்.

உங்கள் முகத்தை குழந்தைக்கு மிகவும் பிடிக்கும். குழந்தையின் அருகே சென்று அதன் முகம் பார்த்து, மெதுவாகப் பேசவும். அதன் பின், உங்கள் குழந்தை எழுப்பும் ஒலிகளுக்கு கொஞ்சம் அவகாசம் கொடுத்து, அதைக் கவனிக்கவும். (Listen). குழந்தையின் பேச்சை நீங்கள் காது கொடுத்து கவனிப்பது, அதன் சுய மதிப்பை (Self-Esteem) அதிகரித்து, அவர்களை மகிழ்விக்கும். பொதுவாக, குழந்தைகள் 18 மாதங்கள் முதல் சரளமாகப் பேச ஆரம்பிப்பர். உங்களின் முயற்சியைப் பொறுத்து இதை இன்னும் விரைவாக்கலாம்.



குழந்தைகளிடம் நீங்கள் பேசுவதால்.

- நீங்கள் பேசுவதை, உங்கள் வாயசைப்பை நன்கு கவனித்து, பேசுவதைக் கற்றுக் கொள்கிறது.
- குழந்தையின் மூளையின் நரம்புத் தொடர்புகள் தூண்டப்பட்டு, கற்றலைத் துரிதப் படுத்துகிறது.
- பின்னாளில் நல்ல வாசிப்பாளராக, எழுத்தாளராக வருவதற்கு ஒரு சரியான அடித்தளம் அமைக்கிறது.
- சமூகத் திறன்கள் (Social Skills) மற்றும் பழகும் திறன்களை (good relationships) கற்றுக் கொடுக்கிறது.
- உங்களின் அன்பை, குழந்தை புரிந்து கொள்ள ஏதுவாகி, அதன் சுய மதிப்பையும் அதிகரிக்கச் செய்யும்.
- குழந்தைக்கும், உங்களுக்குமான இணைப்பை (bond) வலுப்படுத்தும். நினைவிருக்கட்டும், இந்த இணைப்பின் பலத்தைப் பொறுத்தே, குழந்தைக்கும் உங்களுக்கும் இருக்கும் கம்யூனிகேஷன் ஆழமாகும்.

(தொடரும்)

# மதுரைக்கார படங்களும் வன்முறை பண்பாடும்



***மதுரைக்கார*** படங்களில் வன்முறை ஒரு போர்னோ இணையத்தளத்தில் வருவது போல் விதவித வடிவங்கள் எடுக்கின்றன. ஒவ்வொன்றும் தம் விகார வகைமையால் நம்மை வியப்புறவும், ரசிக்கவும், அருவருப்படையவும் வைக்கின்றன. மதுரைக்கார வன்முறைப் பண்பாடு கணிசமான வணிக வெற்றியும் கண்டுள்ளது. மக்கள் விரும்புகிறார்கள். கலை ரசிகமணிகளும் அதன் எதார்த்தத்தை மெச்சுகிறார்கள்.

மதுரைக்கார படங்களை மேலும் குறிப்பாய் தேவர் சாதி பண்பாட்டுப் படங்கள் எனலாம். 'தேவர் மகன்', 'விருமாண்டி', பாலாவின் அனைத்துப் படங்கள், 'பருத்திவீரன்', 'சண்டைக் கோழி', 'சுப்பிரமணியபுரம்', 'சுந்தர பாண்டியன்', 'வெயில்', 'அரவான்' உள்ளிட்ட பல பிரபல தேவர்சாதிப் படங்களைக் குறிப்பிடலாம்.

இத்தாலிய மாபியா படங்களை இவ்விதத்தில் தேவர் வன்முறை பேசும படங்களோடு ஒப்பிடலாம். "God Father" வரிசையில் வந்த மாபியா படங்கள் புலம் பெயர் இத்தாலியர்கள் குறித்த பரவலான அச்சத்தை அமெரிக்க மக்களின் ஆழ்மனதில் பதிக்க உதவியதாக சொல்லப்படுகிறது. தேவர் சாதி வன்முறைப் படங்களுக்கு அந்த நோககம் உள்ளதா என்ற கோணத்தில் ஏற்கனவே விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது.

"God Father"ஐ உல்டா செய்து தமிழில் முக்கியமான இயக்குநர்கள் ஒரு படமாவது எடுத்திருப்பார்கள். ஏன் "God Father" கதைவடிவம் மற்றும் கரு நமக்கு இவ்வளவு ஈர்ப்புடையதாக உள்ளது எனக் கேட்க வேண்டும். முக்கிய காரணம் அது மனித இயல்பு சூழலால் தீர்மானமாவதில்லை, மாறாக அது மரபியல்ரீதியாக வருகிற ஒன்று என அப்படம் சொல்கிறது. God Father இல் நாயகன் மைக்கேல் தன் அப்பாவான மாபியா தலைவர் விட்டோ கார்லியோனோவில் இருந்து தன்னை மாறுபட்டவனாக கருதுகிறான். குற்றமற்ற, மென்மையான நாகரிகமான வாழ்வை விழைகிறான். ஆனால் மக்கிளஸ்கி எனும் ஒரு பொலிஸ் அதிகாரி அவனது முகவாய் எலும்பை உடைக்க அச்சிறு சம்பவம் அவனது மன அமைப்பை முழுக்க மாற்றுகிறது. அதுவரை பார்க்க கண்ணியமாகத் தோன்றிய அவனது முகம் இப்போது தன்னியல்பாகவே கொஞ்சம் ஒரு பக்கம் வீங்கித் தோன்றுகிறது. அது அவனது மனமாறுதலுக்கான உருவகம் தான். அந்தத் தாக்குதல் அவனுக்குள் 'தூங்கிக் கொண்டிருந்த சிங்கத்தை தட்டி எழுப்புகிறது'. பிறகு அவன் தன் தந்தையை விட கொடூரமான, கறாராக தர்க்கரீதியாக மட்டும் சிந்திக்கும் ஒரு மாபியா தலைவனாகிறான். தன் சகோதரியின் கணவனை தாட்சண்ணியமில்லாமல் கொல்லும் அளவுக்கு போகிறான். தமிழக இயக்குநர்கள் இந்த 'கறாரான் தர்க்கத்தின் வன்முறை' மற்றும் 'விழுமியங்களைத் துறந்த ஒருவனின் பாவங்கள்' ஆகிய பேசு பொருட்களை விட்டு விட்டு 'சிங்கம் தட்டி எழுப்பப்படுவதை' மட்டும் எடுத்துக் கொள்கிறார்கள். அவர்களுக்கு தமது சாதியத்தின் நியாயத்தை உறுதிப்படுத்த அது நல்ல ஒரு சூத்திரமாக இருக்கிறது. (தேவர்கள் மட்டுமல்ல இந்தியர்களே. பொதுவாக ஒருவரின் சுபாவம் தந்தை வழியாகத் தான் வரும் என்று உள்ளூர நம்புகிறவர்கள் என்பதையும் இங்கு சொல்லியாக வேண்டும். அதனால் தான் God Father பல இந்திய மொழிகளில் வெறறிகரமாக திரும்பத் திரும்ப எடுக்கப்பட்டு வருகிறது)

நமது சாதியத்தின் வரலாறு நில பிரபுத்துவ வன்முறையின் வரலாறும் தான். வன்முறையை நியாயப்படுத்தாமல் நீங்கள் சாதிய மேலாண்மையையும் நியாயப்படுத்த முடியாது. அதனால் தான் மைக்கேலின் பாத்திரத்தில் இருந்து ஏகப்பட்ட சிங்கங்கள் 'தேவர் மகனில்' இருந்து 'சண்டைக் கோழி' உள்ளிட்ட சமீபத்திய படங்கள் வரை புறப்பட்டு வந்து கொண்டே இருக்கின்றன.

கவனிப்புக்குரிய விசயம் இன்றைய தேவர் சமூகம் வேல்கம்பு அருவா சமூகம் அல்ல என்பது. அரசியல் தலைமையில், அரசு பதவிகளில், காவல் துறையில், சினிமாத் துறையில், தனியார் ஐ.டி வேலைகளில் என அவர்களில் கணிசமானோர் வலுவாக காலூன்றி, அச்சமூகம் இன்று 'முன்னேறிய சமூகமாக' மாறியுள்ளது. முன்னொரு காலத்தில் அவர்கள் கள்வர்களாக, மதுரை நகரின் காவலர்களாக, போர்ப்படை வீரர்களாக இருந்திருக்கலாம். ஆனால் இன்று வன்முறை அவர்களுக்கு காலப் பொருத்தமற்ற தேவையற்ற ஒரு பண்பு. நிலப்பிரபுத்துவ வாழ்க்கை முறையில் உள்ளவர்களைத் தவிர பிறருக்குத் தேவையில்லாதது. இன்று அது பெண்களுக்கு மீசை போலத் தான். இருந்தும் சமகால வாழ்வில் காட்டுமிராண்டித்தனமாக கருதப்படுகிற, தம் தொழிலுக்கு இன்று அவசியப்படாத வன்மம், வீரம் போன்றவற்றை தேவர்கள் ஏன் பண்பாட்டு அடையாளமாக முன்னிறுத்துகிறார்கள்? பெண்ணுக்கு எதற்கு மீசை?

மனிதர்கள் தாம் வாழ்கிற காலத்தில், சூழலின் பண்பாட்டை ஏற்பது தான் ஆரோக்கியமானது. ஆனால் நாம் எதார்த்தத்தில் பார்ப்பது முற்றிலும் மாறுபட்ட போக்கு. பொதுவாக தமிழர்கள் இரட்டை வாழ்க்கை வாழ்கிறார்கள். இருபத்தோராம் நூற்றாண்டில் வாழ்ந்தபடி 15ஆம் நூற்றாண்டு வரலாற்று பண்பாட்டை சிலாகித்துக் கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு கற்பனையில் எப்போதும் பின்புறம் ஒரு வால் ஆடிக் கொண்டிருக்க வேண்டும். அது அவர்களுக்கு சமகால வாழ்வின் அடையாள் நெருக்கடிகளில் இருந்து ஒரு சின்ன ஆறுதல் அளிக்கும்.

தமிழ் சினிமாவில் பொதுவாக ஹீரோ சண்டை போடுவது நாயகியை காப்பாற்ற, தீமையை அழிக்க அல்லது குடும்பத்துக்காக பழிவாங்கத் தான். இந்த இலட்சியவாதம் அல்லது உணர்ச்சிபூர்வ ஈடுபாடு இல்லாமல் வன்முறைக்காக வன்முறையில் ஈடுபடுவதை தேவர் படங்கள் தான் முதன் முறை தமிழ் சினிமாவுக்கு கொண்டு வந்தன. 'தேவர் மகனில்' நாசர் பாத்திரம் கமலோடு சண்டை போடும் இறுதிக் காட்சியில் தன்னுடைய வன்முறை விருப்பத்துக்காகத் தான் மோதுகிறார். மற்றபடி இருவருக்கும் குறிப்பிடும்படியான எந்தப் பகையும் இல்லை. கமலும் அவரைப் பழிவாங்குவதற்காகக் கொல்லுவதில்லை. சண்டையின் உக்கிரத்தில் அவருக்குள் இருந்த 'தேவன்' வெளிப்பட்டு எதிரியின் தலையை வெட்ட வைக்கிறது. சண்டையில் ஜெயித்த மறுநொடி அவருக்கு தன்னுடைய வன்முறை அத்தனையும் வீண் எனப் புரிகிறது. ஆனால் வன்முறை போதைக்கு அடிமையாகிய கணமொன்றில் தன் பங்காளியின் தலையை சீவி விடுகிறார். இந்த சண்டைக்காக சண்டையிடும் வன்முறையின் போதையைத் தான் பாலா தன் படங்களில் தத்ரூபமாக National Geographic பாணியில் சித்தரித்து வெற்றி பெற்றார்.

இந்த தூய வன்முறையின் அழகியல் நம் மனதை எளிதில் கிளர்த்துவது. ஏனென்றால் வன்முறைக்கு உண்மையில் எந்த நோக்கமும் இல்லை. மனிதன் கொல்லும் போது கிடைக்கும் மனக்கிளர்ச்சிக்காகத் தான் கொல்லுகிறான். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் வன்முறை தாண்டவம் ஆடும் ஆசை உள்ளது. பாலாவின் படங்களில் இறுதிக்காட்சிவரை வில்லன் மக்களை விதம் விதமாக சித்திரவதை செய்து கொல்ல அதற்குப் பின்வரும் பதினைந்து நிமிடங்களில் வில்லனை நாயகன் சித்திரவதை செய்து கொல்வான். 'பிதா மகனில்' விக்ரம் வில்லனின் கழுத்தைக் கடித்து விட்டு திருப்தியில் வான் பார்க்கும் காட்சி நினைவிருக்கும். இது வெறும் சாடிஸம் அல்ல. சடங்குரீதியான வன்முறை. இராணுவத்தினர் எதிரிகளை தோலை உயிருடன் உரித்து சிறுக சிறுக கொல்வதைப் போன்றது அது. மனிதனுக்கு இன்னொருவனை இப்படிக் கொல்லாமல் கொல்வதில் ஒரு சுகம் உள்ளது. பாலாவின் கண்டுபிடிப்பு போர்க்கள சாடிச கிளர்ச்சி மனநிலையை சினிமா அரங்கிலும் தோற்றுவிக்கலாம் என்பது தான்.

சமீபமாக வந்த 'சுந்தரபாண்டியனில்' வன்முறையாளர்களுக்குள் உள்ள அறத்தைக் காட்டி இருப்பார்கள் (அசட்டுத்தனமாகத் தான்). இறுதிக் காட்சியில் தன்னை அழிக்கப்பார்க்கும் மூன்று நண்பர்களையும் கொல்லாமல் விடுவதுடன் அவர்களின் பெயர் ஊரில் களங்கப்படாதிருக்கும் பொருட்டு நடந்து கொள்கிறான். பேருந்தில் நடக்கும் ஒரு சண்டையில் அப்புக் குட்டி கொல்லப்பட அதற்கு நீதி கோரும் ஒரு பகுதி. மக்கள் (தலித்துகளாக இருக்கலாம்) மூடர்களாகவும், மரணத்தை வன்முறையின் தவிர்க்க முடியா வீரவிளைவாக ஏற்றுக் கொளளும் மக்கள் மேன்மையானவர்களாகவும் காட்டப்படுகிறார்கள். ஒரு அசல் வீரன் தன் எதிரிகளை மதிக்கிறவன் என்று சுந்தரபாண்டியன் சொல்வதன் பொருள் ஒரு வன்முறைக்கு விரோதமே முக்கியமில்லை, எதிரி பொருட்டில்லை என்று தான். மதுரைக்கார படங்களின் ஆன்மா இது தான்.

Good Fellas எனும் மற்றொரு இத்தாலிய மாபியா படத்தை நினைவுபடுத்தும் 'சுப்பிரமணியபுரத்தில்' இந்த சுந்தரபாண்டியத்தனம் இன்னும் எதார்த்தமாக ஓரளவு உளவியல்தன்மையுடன் கொண்டு வரப்பட்டிருக்கும். அதில் ஒரு காட்சியில் நாயகன் அழகர் தன் சிறு வீட்டு எரிச்சலை தெருவில் போகும் கூலித் தொழிலாளிகளிடம் காட்டி சண்டையிடும் ஒரு அழகான காட்சி வரும். அதே அர்த்தமற்ற தொனியில் தான் ஒவ்வொரு வன்முறைக் காட்சியும் வரும். எளிய தூண்டுதல் போதும், அப்படத்தின் நாயகர்களை கொலைகள் செய்ய வைக்க. அவர்கள் குருதி மணத்தை நுகர்ந்து திரிந்து கொண்டே இருக்கிறார்கள். அந்த வன்முறைப் பசி அவர்களின் மரணங்களுடன் தான் முடிகிறது.

வசந்த பாலன் இக்கத்தியின் இன்னொரு நுனியைப் பிடித்துக் கொண்டு

(17ஆம் பக்கம் பார்க்க)

- அபிலாஷ் கட்டுரையிலிருந்து

பொதுவாக தமிழர்கள் இரட்டை வாழ்க்கை வாழ்கிறார்கள். இருபத்தோராம் நூற்றாண்டில் வாழ்ந்தபடி 15ஆம் நூற்றாண்டு வரலாற்று பண்பாட்டை சிலாகித்துக் கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு கற்பனையில் எப்போதும் பின்புறம் ஒரு வால் ஆடிக் கொண்டிருக்க வேண்டும். அது அவர்களுக்கு சமகால வாழ்வின் அடையாள நெருக்கடிகளில் இருந்து ஒரு சின்ன ஆறுதல் அளிக்கும்.

# அரசபொது ஊழியர் சங்கத்தால் 10 கோரிக்கைகள் முன்வைப்பு

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்க பேச்சுவார்த்தை கடந்த மாதம் 23ஆம் திகதி வடமாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழுவின் தலைவர் எஸ். அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இதில் தொழிங்சங்கத்தினால் பத்துக்கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

வடமாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் கடமை புரியும் நாள் சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு ஆளணி வெற்றிடத்திற்கு அமைவாகவும் PAC 20/2009 சுற்றறிக்கைக்கு அமைவாகவும் நிரந்தர நியமனமின்றிக் கடமை புரியும் ஊழியர்களது சேவைக்காலத்தை கவனத்திற்கொண்டு அவர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படல் வேண்டும். அத்துடன் உள்ளூராட்சி சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை 01/86 கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

உள்ளூராட்சி மன்ற ஊழியர்களுக்கு வட மாகாண ஆளுநரின் அனுமதியுடன் 2011.12.11 ஆம் திகதி இடப்பட்டு வெளியிடப்பட்ட அட்டவணைப்படுத்தப்படாத ஊழியர்களின் பதவிகளின் திட்டத்திற்கு அமைவாக வகுப்பு III லிருந்து வகுப்பு II,I பதவி உயர்வு வழங்கப்படல் வேண்டும். அ.வ.இல: 1258/20இல் குறிப்பிடப்பட்டுள்ள சேவைக்காலம் கவனத்திற் கொள்ளப்படவேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்களில் கடமை புரியும் பணியாளர்களுக்கு வட மாகாண பிரதிப்பிரதம செயலாளர் அவர்களது 2008.11. 10ஆம் திகதிய PPA/C/NO.NP/02/2008 (19) சுற்றறிக்கைக்கு அமைவாகவும் தாபன விதிக் கோவை XXI பிரிவு 03இன் பிரகாரமும் PAC 14/2011 அமைவாகவும் சீருடைக்கான கொடுப்பனவும் தையற் கூலியும் உட்பட ரூபா 2200 கிடைப்பதற்கு உதவ வேண்டும்.

அலுவலகப் பணியாளர் சேவை வகுப்பு III லிருந்து வகுப்பு II,I இது காலவரை கிடைக்காத வட மாகாண இணைந்த சேவை சார்ந்த ஊழியர்களுக்கு ,அ.வ.இல. 1229/17 மற்றும் 1258/20 அமைவாக வகுப்பு II,I பதவி உயர்வு கிடைப்பதற்கு உதவ வேண்டும்.

வட மாகாண இணைந்த சேவையின் கீழ் அலுவலக தேவை கருதி வெளிவாரி அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களுக்கும் சாரதிகளுக்கும் நிரந்தர நியமனம் காலம் தாழ்த்தாது வழங்கப்பட்ட வேண்டும் எனக் கோரல்.

வட மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்ட ஆளணி வெற்றிடமிருந்தும் இது கால வரை பாடசாலை பணியாளர் காவலாளி, நூலகப் பணியாளர் ஆய்வுகூடப் பணியாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி நியமிக்கப்படாத பாடசாலைகளுக்கு ஊழியர்கள் நியமிக்கப்படல் வேண்டும். தற்காலிக அல்லது ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் கடமை புரியும் பட்சத்தில் அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படல் வேண்டும்.

வட மாகாணத்திலுள்ள அலுவலகங்களில் முகாமைத்துவ உதவியாளர் வெற்றிடம் போட்டிப் பரீட்சையின் பிரகாரம் நிரப்பப்படும் போது அ.வ.இல. 1372/23 அமைவாக அரச சிறு பணியாளர்களுக்குரிய 30வீதம் சிறு பணியாளர்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.

வடக்கு,- கிழக்கு மாகாணம் இணைந்திருந்த காலப்பகுதியில் குலுக்கல் முறையின் பிரகாரம் கிழக்கு மாகாணத்தைச் சார்ந்த ஊழியர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் உட்பட ஏனைய சேவை சார்ந்தவர்கள் வட மாகாண அலுவலகங்களில் கடமைக்காக இணைத்துக் கொள்ளப்பட்டனர். இவ்வாறானவர்கள் பல்வேறு இடர்கள் கஷ்டங்களுக்கு உள்ளாகிய நிலைமையில் இருப்பதால் இவர்களது விடயத்தில் கருணையின் அடிப்படையில் இரு மாகாண அதிகாரிகளும் ஒன்றிணைந்து ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்து அவர்களது சுய விருப்பத்தின் பிரகாரம் விரும்பிய மாகாணத்தில் நிர்வாகத்தின் கீழ் கடமை புரிவதற்கு உதவி கோரல்.

வட மாகாண அரச சேவை சார்ந்த அலுவலர்களின் நலன் கருதி அவ்வப்போது ஏற்படும் நிர்வாக ரீதியான பிரச்சினைகளுக்கு சுமுகமான முறையில் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் பொருட்டு PAC10/2000 அமைவாக அமைச்சு மட்டத்திலான ஆலோசனை சேவை அமைக்கப்படல் வேண்டும் எனக் கோரல் அதில் தொழிற்சங்கப்பிரதிநிதிகளும் இணைத்துக் கொள்ளப்படல் வேண்டும்.

வடமாகாண சபை நிர்வாகத்தின் கீழ் உள்ள அமைச்சுக்கள் திணைக்களம் சார்ந்த இடமாற்ற சபை அமர்வுகளில் எமது தொழிற்சங்கத்திற்கு பிரதிநிதித்துவம் வழங்கப்படல் வேண்டும்.

இவ்வாறு முன்வைக்கப்பட்ட 10 கோரிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது அவற்றுள் உள்ளூராட்சி மன்ற ஊழியர்களுக்குரிய நிரந்தர நியமனம் வழங்கல், பதவியுயர்வு தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பதாக சபையில் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் திணைக்களத் தலைவர்களும்,ஆணைக்குழு உறுப்பினர்களும் இணைந்து சிபார்சு பரிந்துரைகளுடன் வடமாகாண ஆளுநரின் கவனத்துக்கு முன்வைத்து ஆளுநரின் அனுமதியுடன் செயற்படுத்துவற்கு சபையில் முடிவு எடுக்கப்பட்டது.

இப்பேச்சுவார்த்தையில் பொதுச்சேவை ஆணைக் குழுவின் உறுப்பினர்களும், திணைக்களத் தலைவர்களும், தொழிற்சங்கத் தலைவர், தொழிற சங்க உயர்மட்டக் குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

## வடமராட்சி கல்வி வலயத்தால் கணித பாட செயற்றிட்டம்

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் க.பொ.த (ச/த) பரீட்சையில் கணித பாடத்திற்குத்தோற்றவுள்ள மாணவர்களுக்கான விசேட செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இச் செயற்றிட்டத்திற்கான செயலட்டைகளை வடமராட்சி வலய கணிதபாட உதவிக்கல்விப் பணிப்பாளர் க.ஈஸ்வரதேவன் தலைமையில் வலய கணிதபாட ஆசிரியர்கள் தயாரித்துள்ளனர்.

இத்திட்டத்தினை மேற்கொண்டுவருமாறு வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்திடம் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆராய்ந்த நிர்வாகக் குழுவினர் வடமராட்சி வலய கணிதபாட அடைவுமட்டத்தை உயர்த்தும் நோக்கமாக இத்திட்டத்திற்கு அனுசரணை செய்வதாக உறுதியளித்துள்ளது.

விரைவில் இச் செயல் அட்டைகள் ஒவ்வொரு வாரமும் அனுப்பிவைக்கப்படவுள்ளன. (109)



கிளிநொச்சி கல்வி வலயத்தில் பளை, பூநகரி, கண்டாவளை, கரைச்சிக்கோட்டங்களைச் சேர்ந்த 225இறகு மேற்பட்ட ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களுக்கு 'பல்தரக்கற்பித்தல்' என்னும் விடயம் பற்றி இருநாள் பயிற்சி அணமையில் நடைபெற்றது. கிளிவலய ஆரம்பக்கல்வி, உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.கணேசலிங்கம் தலை மையில் பூநகரிக் கோட்டத்தைச் சேர்ந்த 52 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுவதைக்காணலாம். (112)

# ஆயுர்வேதம்



## எச்சிலால் ஏற்படும் கிருமித் தொற்று!

இன்று பெரும்பாலான மக்கள் தங்கள் உமிழ்நீரை விரல்களால் தொட்டு ரூபா நோட்டுகளை எண்ணுவது. பேருந்து நடத்துநர்கள் உமிழ்நீரால் விரல்களை நனைத்து டிக்கெட் விநியோகம் செய்வது. மாணவர்களும் ஆசிரியர்களும் விரல்களை உமிழ்நீரில் தோய்த்து புத்தகங்களின் பக்கங்களைப் புரட்டுவது. கடைகளில் பொலித்தீன் பைகளைப் பிரிப்பதற்காக உமிழ்நீரில் தொட்ட விரல்களைப் பயன்படுத்துவது போன்ற ஆரோக்கியக் குறைவான செயல்களில் ஈடுபடுகிறார்கள். எச்சிலால் ஏற்படும் கிருமித் தொற்றுகளால் உண்டாகும் வியாதிகள் பற்றி ஆயுர்வேதம் என்ன கூறுகிறது என்று பார்க்கலாமா?

நோய்கள் ஏற்படுவதற்கான காரணத்தை நிஜம் என்றும் ஆகந்துகம் என்றும் இருவகையாக ஆயுர்வேதம் குறிப்பிடுகிறது. தவறான உணவு அல்லது செய்கையால் உடல் உட்புற தோஷங்களாகிய வாத, பித்த கபங்கள் சீற்றமடைந்து தாதுக்களையும் மலங்களையும் கேடு அடையச் செய்து நோய்களை உருவாக்குவது "நிஜம்' என்றும், வெளிப்புறக் காரணங்களாகிய பூதம், விஷம், வாயு, காயம், முறிவு முதலியவற்றால் தோன்றுபவையும், காமம், குரோதம், பயம் முதலிய மனம்சார்ந்த காரணங்களால் தோன்றுபவையுமான எல்லா நோய்களும் "ஆகந்துக'மென்றும் குறிப்பிடுகிறது. மேற்குறித்தவாறு உமிழ்நீரில் விரல்கள் நனைத்தலானது "ஆகந்துகம்' என்ற வகையைச் சேர்ந்ததாகும்.

கைக்கு கை மாறும் பணத்தில் கண்களுக்குப் புலப்படாத எண்ணற்ற கிருமிகளும் அழுக்குகளும் இருக்கும்நிலையில், கைவிரலை உமிழ்நீரில் நனைத்து எண்ணி, மறுபடியும் அதே விரலை வாயிலுள்ள உமிழ்நீரில் நனைத்தால், ரூபாத் தாள்களிலுள்ள அழுக்குகளும், கிருமிகளும் வாயினுள்ளே வந்து சேர்ந்து விடும். வயிற்றுப் பகுதிக்கு அரணாக, வாயினுள் அமைந்துள்ள எச்சில் சுரப்பிகள், ருசி கோளங்கள், ரொன்சில், அடினோயிட், உள்நாக்கு, பற்கள் போன்ற பகுதிகளை இந்தக் கிருமிகளும், அழுக்குகளும் தாக்கக கூடிய ஆபத்தை வீணாக வரவழைத்துக் கொள்ளும் தவறான பழக்கமாகும் இது. ஏதேனும் வழியாக அவை மூளைப் பகுதிக்குச் சென்றுவிட்டால் மூளையைக் கவசம் போல் பாதுகாக்கும் சவ்வுப் பகுதியில் தாக்கினால், கடுமையான மூளை உபாதைகளைச் சந்திக்க வேண்டி வரும். சுரப்பிகள் தடித்து வீங்கிச் செயலாற்றும் திறன் குன்றிப் போவதால் ஏற்படும் உபாதைகளை நீக்குவதற்காக கடும் உணவுக் கட்டுப்பாடும் இருக்க வேண்டிய நிலை ஏற்படும். வயிற்றினுள் சென்றுவிட்டால் இனம் புரியாத வலி, வாந்தி, பேதி போன்ற உபாதைகளையும், காய்ச்சல், தோலில் தடிப்பு, அரிப்பு போன்றவற்றையும் ஏற்படுத்தலாம்.

இதற்கு மாற்று வழியாக, நீரால் நனைத்த பஞ்சு டப்பியை தொட்டு, தாள்களை எண்ணுவதை சில இடங்களில் நீங்கள் பார்த்திருக்கக் கூடும். அமர்ந்து இருக்கக் கூடியவர்களுக்கு இதை எளிதாகச் செய்ய முடியும் நடத்துநர், கடைகளில் வேலை செய்பவர்கள் இதை ஒரு சிறிய வடிவத்தில் கழுத்திலிருந்து கட்டித் தொங்கவிட்டு, அதன் மூலம் ரூபாத் தாள்களையோ, பொலித்தீன் பைகளையோ தொட்டு அவற்றைப் பிரித்துக் கொடுத்தால் அவர்களுக்கு நோய் பரவாமல் தடுக்க முடியும் என்பது மட்டுமல்ல, அதை வாங்குபவருக்கும் அருவருப்பை ஏற்படுத்தாது. இவர்கள் மூலம் மற்றவர்களுக்கு நோய் பரவாமல் தடுக்கவும் முடியும்.

தவறான இந்தச் செய்கையால் நோய்க் கிருமிகளும் அழுக்குகளும் வாயினுள் சென்று அவ்விடத்தில் ஏதேனும் நோய்களைத் தோற்றுவித்தால், "கபளக்கிரஹம்' என்ற ஒரு சிகிச்சை முறையால், உபாதைகளை நம்மால் குறைக்க முடியும் என்று ஆயுர்வேதம் கூறுகிறது. கருங்காலிக்கட்டை, ஆலம்பட்டை, அரசம்பட்டை, அத்திப் பட்டை, இத்திப் பட்டை, வேலம்பட்டை ஆகியவற்றை வகைக்கு 5 கிராம் வீதமெடுத்து, 400 மி.லீ. தண்ணீரில் கலந்து, கொதிக்க விட்டு, 200 மி.லீ. ஆனதும், குளிர்ந்த பிறகு, வடிகட்டி வாயினுள் விட்டு, அசைத்துக் குலுக்கித் துப்பி விடுதலுக்கு கபளக்கிரஹம் என்று பெயராகும். சுவையறியாமை, வாயில் உண்டாகும் அழுக்கு, கெட்ட நாற்றம், சுரப்பிகளில் ஏற்படும் கிருமித் தொற்று போன்றவை இதன் மூலம் குணமாகும்.

அலைபேசியையும், அடையாள அட்டையையும் நாடா மூலம் கழுத்தில் தொங்க விட்டுக் கொள்வது சகஜமாகிப் போன இக்காலத்தில் நீரால் நனைத்த பஞ்சு டப்பியையும் தொங்கவிட்டுக் கொண்டு பயன்படுத்தினால், அதற்கு நல்ல வரவேற்பு பொதுமக்களிடம் இருந்து நிச்சயம் கிடைக்குமே தவிர, யாரும் குறை சொல்லமாட்டார்கள் என்பது உறுதி.

# வீதி திருத்தப்படாமையால் பெரியதம்பனை மக்கள் அவதி



பெரியதம்பனை ஊடான பிரமாணலங்குளம் - மடு பிரதான வீதி நீண்ட நாட்களாக திருத்தப்படாமையால் மக்கள் போக்குவரத்து செய்வதில் இடர்பாடுகளை எதிர்நோக்குவதாகத் தெரிவித்துள்ளனர். பிரமாணலங்குளத்தில் இருந்து மடுவுக்கு செல்லும் 20 கிலோமீற்றர் நீளமான இப் பிரதான வீதியில் மடு, பாலம்பிட்டி, தட்சணாமருதமடு, முள்ளிக்குளம், கீரிசுட்டான், சின்ன பண்டிவிரிச்சான், பெரிய பண்டி விரிச்சான், பெரியதம்பனை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் போக்குவரத்து செய்கின்றனர்.

இப் பகுதி மக்கள் மீள்குடியேறி மூன்று ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையிலும் இன்னும் இவ் வீதி புனரமைக்கப்படாமையினால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ளும் இம்மக்கள் வீதி சீரின்மையால் தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதிலும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, பாடசாலைக்கு செல்லும் மாணவர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதுடன் மழை காலத்திலும் முகம்கொடுத்து வருவதுடன் வைத்தியசாலை வசதிகள் இப் பகுதியில் இன்மையால் நோயாளர்களை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதிலும் சிரமங்களை எதிர்கொள்வதாக இப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்

இப் பகுதியில் அமைந்துள்ள மயானத்திற்கு செல்லும் வீதி பல இலட்சம் ரூபா பெறுமதியியல் புனரமைக்கப்பட்ட போதிலும் அவ் வீதி கவனிப்பாரற்றுக் காணப்படுவதுடன் இப் பகுதி கிராமங்களில் உள்ள உள்ளக வீதிகளும் செப்பனிடப்படவில்லை என தெரிவிக்கின்றனர். வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான இவ் வீதியை மிக விரைவில் புனரமைப்பதற்கு ஆவன செய்து தருமாறு அப்பதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பரமர் சங்கமம்



''மாட்டுக்கு மாடு சொன்னாக் கேளாது மணிகட்டிய மாடு சொல்ல வேணும்'' என்பது முதுமொழி. எங்கள்ள கனபேருக்கு இந்தக் குணம் இருப்பதை மறுத்துவிட முடியாது.

தொழில் சார்ந்த வர்த்தகம்சார்ந்த அமைபை கூட்டி ஒரு ஒழுங்கில் அதனைக் கட்டுமாணம் செய்ய விடாமல் ஒருசிலர் இடறுப்பட்டுக் கொண்டுநிற்பர்.

1947ஆம் ஆண்டு இலங்கை அரசு தொழில் திணைக்களத்தை உருவாக்கி சாய்ப்புச் சட்ட நடைமுறையைக் கொணர்ந்ததாக அறியலாம். ஏறத்தாள 65ஆண்டுகள் கடந்த நிலையிலும் அதனை நடைமுறைப்படுத்த முடியவில்லை.

மானிப்பாய், வர்த்தக சங்கத்தின் தீர்மானத்துக்கு மாறாகத் திறக்கப்பட்ட வர்த்தக நிலையம் பொலிஸாரின் உதவியுடன் மூடப்பட்டதாக கடந்த வாரங்களில் ஊடகங்களில் செய்திகள் வெளியாகி இருந்தன.

சாய்ப்புச் சட்டத்தால் 12 மணிநேரங்கள் வர்த்தக நிலையங்களைத் திறக்க அனுமதித்தாலும், முறைப்படி 8 மணி நேரத்திற்கு அதிகப்படியான 4 மணி நேரங்களுக்கும் மேலதிகப்படி செலுத்த வேண்டுமென சட்டம் வலியுறுத்துகிறது.

அதன்படி இங்கே எத்தனை வர்த்தக நிலைய உரிமையாளர்கள் நடந்து கொள்கிறார்கள்? நூற்றுக்கு ஒருவர் தேறுவார் இல்லாமலும் ஊழியர் சேமலாப நிதியைக் கட்டுகின்ற நிலையங்கள் உண்டா? இதனாலே மாதம் ஒரு கடையாக ஊழியர்கள் வேலை பார்ப்பதைப் பரக்கக் காணலாம்.

துரதிஷ்டவசமாக ஊழியர்களது நலனைப் பேணும் சங்கங்கள் யாழ்ப்பாணத்தில் எண்டில்லாமல் இலங்கையின் ஏனைய நகரங்களிலும் உள்ளதாக அறியமுடியவில்லை.

தொழில் கொள்வோர், செய்வோர் மற்றும் நிலையங்கள் திறந்து மூடும் நேரங்கள் வார விடுமுறை பொருட்களின் விலைகள் அல்லது கட்டண்ங்களின் ஒருமைப்பாட்டைக் கடைப்பிடிக்கவே வர்த்தக சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

அந்த ஒழுங்கில் செயற்படாதவர்களை எப்படி அந்தத் தொழில்களில் அனுமதிப்பது? ஒவ்வொரு சங்கங்களுக்கும் ஒழுங்கமைப்புக் கோவை என்னும் சட்ட வரையறைகள் பேணப்படுகின்றன. அதனில் இருந்து விலத்துவோர், அந்தத் தொழிற் துறையில் இருந்தும் விலத்தப்படுவார்கள் என்பதையே மானிப்பாய் வர்த்தக சங்கத்தின் நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன.

திருநெல்வேலி பகுதியில் சிகை அலங்கரிப்பு நிலையத்தை பதிவு செய்ய சங்கம் அறிவித்தபோது நிலைய உரிமையாளர் யாழ்.மாநகர சபையில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. சங்கப் பதிவு மேற்கொள்ள மாட்டனென கூறியதாக அறியமுடிகிறது.

இத்தகைய ஒருசில பிரகிருதிகளால் ஏனைய நூற்றுக்கணக்கான அங்கத்தவர்கள் குளம்புகின்ற நிலையை அவர்கள் உணர்வதும் இல்லாமல் நிலையத்தை சட்ட இரும்புக் கரங்களைக் கொண்டு மூடுவிக்கும் நிலையையும் ஏற்படுத்திக் கொள்கின்றனர்.

மானிப்பாய் வர்த்த சங்கத்தின் தீர்மானத்தை மீறியவர் 5 ஆயிரம் ரூபாவைத் தண்டப் பணமாகவும் செலுத்த நேர்ந்ததாக மேலும் அந்தச் செய்தியால் அறியமுடிந்தது.

இதைத்தான் மாட்டுக்கு மாடுசொன்னாக் கேளாது மணிகட்டிய மாடு வரவேணுமெண்டு சொல்லுறது இல்லையே பின்னை...

# மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படும் போதே கிராமங்கள் அபிவிருத்தி அடையும்



கிராம மக்களிடம் கல்வி, அரசியல் உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் விழிப்புணர்வு ஏற்படும் போதே கிராமங்கள் அபிவிருத்தி அடையும் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் அவர்கள் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் அராலி கிழக்கில் வேள்ட் விஷன் நிறுவனத்தின் நிதியுதவியுடனும், மக்கள் பங்களிப்புடனும் 17 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட அம்பாள் முன் பள்ளிக் கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அம்பாள் சனசமூக நிலையத் தலைவர் அமிர்தராஜ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், வலி.மேற்கு பிரதேச சபையின் உறுப்பினரும் வலிகாமம் ஈ.பி.டி.பி பிரதேச அமைப்பாளருமான பாலகிருஸ்ணன் (ஜீவன்), வலி மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் செல்வக்குமார், வலிகாம வலய பிரதிக் கல்வி பணிப்பாளர் ரவிச்சந்திரன், வேள்ட் விஷன் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் றொனசறோ, வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் செயலாளர் திருமதி சாந்தா, கோட்டக் கல்விப் பணிப்பளார் செல்வி அன்ரனி சாந்தா மரியாம்பிள்ளை, ஓய்வு பெற்ற தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் செந்தில்நாதன், கிராம சேவையாளர் சிவறூபன், அராலி சரஸ்வதி மகாவித்தியாலய முதல்வர் மனோகரன், கெயார் நிறுவனத்தின் முன்னாள் வெளிக்கள உத்தியோகத்தர் நிர்மலரட்ணம், முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவச் செல்வங்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# அன்னமார் ஆலய பொங்கல் விழா

(கைதடி)

கைதடி மேற்கு உதயநகர் அன்னமார் ஆலயவருடாந்த வைகாசி பொங்கல் விழா இடம்பெறவுள்ளது. எதிர்வரும் சனிக்கிழமை அன்னதான நிகழ்வும், மறுநாள் ஞாயிற்றுக் கிழமை பொங்கல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இவ்வாலயம் இவ்வூரின் மிகவும் பழமைவாய்ந்த ஆலயங்களில் ஒன்றாகும். (21)

# எதிர்வரும் நாட்களில் காலநிலையில் மாற்றம்

(கொழும்பு)

எதிர்வரும் நாட்களில் இலங்கையின் காலநிலையில் மாற்றங்கள் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்படி எதிர்வரும் நாட்களில் இலங்கையின் பல பகுதிகளில் அதிக மழை பெய்யலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் சில பகுதிகளில் அதிக மழையும் பெய்யலாம் என்றும் காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. இதன்படி மேல் மாகாணம், சப்ரகமுவ மாகாணம் மத்திய மாகாணம் போன்றவற்றில் அதிக மழை காணப்படலாம் என்று கூறப்படுகிறது. ஊவா மாகாணத்தில் மாலை அல்லது முன்னிரவு வேளையில் அதிக மழை பெய்யலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

# முரசின் இன்றைய பலன்

(29.05.2013 – புதன்கிழமை)

விஜய வருஷம் வைகாசி மாதம் 15 ஆம் திகதி.
நட்சத்திரம் உத்தராடம் பிற்பகல் 03.17 வரை. திதி பஞ்சமி.
முன்னிரவு 10.45 வரை. இராகுகாலம் 11.52 - 01.22 வரை.
சுபநேரம் 04.22 - 05.52 வரை. அமிர்த சித்தம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பழைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணபீர்கள். மேலோரின் அறிமுகம் கிடைக்கும். புது வாகனம், புது முயற்சிகளுக்குப் பலன். தொழிலில், ஆதரவு பெருகும். நண்பர்களின் ஒத்துழைப்பால் தைரியம் உருவாகும். உறவினர் உதவி. |
| ரிஷபம் | செயலில் உண்மை, நேர்மைக்கு அதிக முக்கியத்துவம் தருவீர்கள். நெருக்கமானவர்களிடமிருந்து பாராட்டுக் கிடைக்கும். உறுதியான முழவுகள் எடுத்து. தொழில் முன்னேற்றம். தாராள வரவு. இல்லறத் துணை விரும்பியது செய்வீர்கள். |
| மிதுனம் | இடையூறு செய்பவரை உணர்ந்து விலகுவது நல்லது. வீண் வாக்குவாதம் தவிர்க. தொழிலில். வேலைச்சுமை. தேவைக்குப் பணம் கிடைக்கும். வெளியூர் பயணத்திட்டத்தில். மாறுதல். புத்திரரால் பெருமை வரும். |
| கடகம் | புத்துணர்வு, செயல்களில் உத்வேகம். தேங்கியிருந்த பணிகளை முழப்பீர்கள். தொழில் தாரரள வளர்ச்சி. தாராள பணவரவு. அதில் குடும்பத்திற்காக தாராள பணச்செலவு. தொடங்கும் காரியங்கள் வெற்றியாக முழயும். |
| சிம்மம் | கூடுதல் வளம் பெறுவதற்கான அனுகூலம் வரும். உறவினரிடம் நல்மதிப்பு. தொழில் இலக்கு நிறைவேறும். தேவையான அளவுக்கு பணவரவு. கடன் தீரும். இல்லத்தில் சுபநிகழ்ச்சிக்குத் திட்டம். வெளியூரிலிருந்து நற்செய்தி. |
| கன்னி | மனதில் குழப்பமான சிந்தனை. மறதியும் தொல்லை தரும். அதிகம் பேசுவதை தவிர்ப்பது நல்லது. தொழில், திட்ட இலக்கு நிறைவேறும். அளவான பணவரவு. புதிய யுக்திகள் நன்மை தரும். உழைப்பதில் உத்வேகம். |
| துலாம் | மதிநுட்பத்துடன் செயல்களை நிறைவேற்றுவீர்கள். தொழில் அனுகூல நிலைமையைப் பயன்படுத்துவீர்கள். பணவரவும், நன்மையும். சமூகத்தில் அந்தஸ்து. விருந்து. விசேஷம். குடும்ப தேவை நிறைவேறும். தம்பதியர் ஒற்றுமை. |
| விருச்சிகம் | பொறாமையாளர்களின் பரிகாசம். வீம்புடன் சில காரியங்கள் செய்வீர்கள். மனதின் கஷ்டம் நண்பர்களால் தீரும். தொழிலில் புது மூலதனம். பணவரவு தாமதம். உடல்நலம் சீர்பெறும். புத்திரரால் மகிழ்ச்சி. நன்மை சேரும். |
| தனுசு | பேச்சில் அன்பும் கனிவும் இருக்கும். தொழில் வளர்ச்சிக்கு புதிய அனுகூலம் கிடைக்கும். வராதிருந்த கடன் வசூலாகும். பொன், பொருள் சேர்க்கை. புதிய அறிமுகம் ஒன்று வரும். உத்தியோகத்தர்க்கு பாராட்டு. வெகுமதி கிடைக்கும். |
| மகரம் | நல்ல செய்தி வரும். நண்பர், உறவினர் தேவையறிந்து உதவுவர். தொழிலில் ஆதாயம் பெருகும். உபரியாகவும் வருமானம். குடும்பத்தின்ரின் நீண்டநாள் தேவை நிறைவேற்றுவீர்கள். மனதில் இருந்த பளு ஒன்று நீங்கும். |
| கும்பம் | உங்களைப் புரிந்துகொள்ளாதவர்களின் விமர்சனம். சினமுண்டாக்கும். தொழில் மந்தம். உணவில் கட்டுப்பாடு நல்லது. மதிப்புமிகு பொருள் பாதுகாப்பில் வனம். அதிகாரிகளால் அலைக்கழிவு. விட்டுக் கொடுக்க வேண்டிய நாள். |
| மீனம் | நல்லவை செய்து பிறர் மனதில் இடம் பிழப்பீர்கள். சுறுசுறுப்பு. முழயாதிருந்த செயல்களும் முழயும். தொழில் வளர்ச்சிபெறும். சராசரி வரவு. நட்பு மேலோங் கும். தாயின் தேவை பூர்த்தி செய்வீர்கள். குடும்பத்தினரின் பாசத்தில் மகிழ்வு. |

குமுதாவை விட வதனி உயரமானவள், நளினியை விட குமுதா உயரம் கூடியவள்.
ஆரணியைவிட வதனி உயரம் குறைந்தவள்.

29) இவர்களில் உயரம் கூடியவர் யார்?
1) வதனி 2) ஆரணி 3) நளினி

30) இவர்களில் உயரம் குறைந்தவர் யார்?
1) நளினி 2) குமுதா 3) வதனி

**உருவில் தரப்பட்ட தொழிலுக்கு அவசியமான உபகரணத்தை தெரிந்த கோடிடுக.**

31)  1) துறப்பணம் 2) கலப்பை 3) மேசன்கரண்டி

32)  1) தூரிகை 2) வனைசில்லு 3) கரப்பு

33) 300 இன் அரைவாசியின் 1/3 உடன் 25 ஐ கூட்டினால் கிடைக்கும் விடை?
1) 50 2) 75 3) 125

34) மண்டபம் ஒன்றில் 14 தூண்கள் சமதூர இடைவெளியில் நடப்பட்டுள்ளன. இரண்டு துண்டுகளுக்கு இடையிலான தூரம் 4 m எனின், மண்டபத்தின் மொத்த நீளம் யாது?
1) 36 m 2) 52m 3) 60m

35) 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4 ஆம் திகதி வியாழக்கிழமை எனின் மார்ச் மாத இறுதி நாள் எத்தனையாம் திகதி?
1) புதன்கிழமை 2) வியாழக்கிழமை 3) செவ்வாய்க்கிழமை

36) அகலத்தைபோல் இரண்டு மடங்கு நீளமுள்ள செவ்வகவடிவ பூம்பாத்தி ஒன்றின் அகலம் 8 உ.அ எனின் பூம்பாத்தியின் சுற்றளவு யாது?
1) 36 cm 2) 48 cm 3) 64 cm

37)

| | | | |
|---|---|---|---|
| ள | பு | | வி |
| கி | ம் | த் | கா |
| | த | கு | |

கட்டத்தில் உள்ள சொற்களை கொண்டு நகரம் ஒன்றின் பெயரை எழுதுக. ----------------------

38) இது ஞாயிற்றுத் தொகுதியின் மிகச்சிறிய கோளாகும். சூரியனுக்கு மிக அண்மையில் இருப்பதால் மிகவும் வெப்பமானதாகும். இங்கு கூறப்படும் கோள் எது? ------------

39) நடக்க இருப்பதை முன்னரே கூறுபவனை குறிக்கும் தனிச்சொல் எது? ----------------------

40) சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக்குக.
முதியோரை / நாம் / வேண்டும் / சிறியோராகிய / மதிக்க ----------------------

**வினாவிற்குரிய விடைகள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1) 2 | 6) 1 | 11) 2 | 16) 2 | 21) X | 28) 2 | 35) 1 | |
| 2) 1 | 7) 2 | 12) 1 | 17) 2 | 22) ✓ | 29) 2 | 36) 2 | |
| 3) 2 | 8) 1 | 13) 2 | 18) 2 | 23) 2 | 30) 1 | 37) புத்தளம் | |
| 4) 2 | 9) 2 | 14) 2 | 19) 0 | 24) 2 | 31) 1 | 38) புதன் | |
| 5) 1 | 10) 3 | 15) 3 | 20) X | 25) 3 | 32) 1 | 39) தீர்க்க தரிசி | |
| | | | | 26) 1 | 33) 2 | 40) சிறியோராகிய நாம் முதியோரை மதிக்க வேண்டும் | |
| | | | | 27) 3 | 34) 2 | | |




## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013


1.30 மணி

# கல்வி முரசு

ஆசிரியர் : சண் சுதர்சன்

1 ஆம், 2 ஆம் வினாக்களில் தரப்பட்ட படங்களில் ஒத்த தன்மையுள்ள இரு படங்கள் குறிக்கும் எழுத்துக்கள் கொண்ட விடையின் கீழ் கோடிடுக.

01) 
1) A, B 2) B, D 3) C, D

02) 
1) A, D 2) B, C 3) A, B

**கீழ்வரும் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.**

03) போட்டியில் வெற்றி பெறுவது அவ்வளவு இலகுவான காரியமில்லை என்பதால் விளங்கிக் கொள்வது,
1) போட்டியில் வெற்றி பெறக்கூடாது.
2) போட்டியில் வெற்றி பெறுவது கடினம்.
3) போட்டியில் வெற்றி பெற முடியாது.

04) கடற்கரை ஓரங்களில் கல்வேலி அமைப்பதன் நோக்கம்
1) படகுகளை நிறுத்துவதற்காக,
2) மண்ணரிப்பைத் தடுப்பதற்காக,
3) சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்காக,


05) துடுப்பாட்ட வீரர்கள் தலைக்கவசம் அணிவதன் நோக்கம்
1) பாதுகாப்புக்காக 2) அழகிற்காக 3) பந்தின் வேகத்தை கட்டுப்படுத்துவதற்காக

தரப்பட்ட எழுத்துக்களையும் அவற்றின் குறியீடுகளையும் அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.

ம - ◪ தி - ⊘ ச - ✚ வ - ⧖ ப - ∟ ம் - ⬢ பு - ☒ ப் - ☆

06. சம்பவம் என்ற சொல்லுக்கான சரியான குறியீட்டை தெரிவு செய்க.
1) ✚ ⬢ ∟ ⧖ ⬢ 2) ⧖ ⬢ ∟ ✚ ⬢ 3) ✚ ⬢ ◪ ⧖ ⬢

07) பின்வருவனவற்றில் சரியான தொடர்பைக் காட்டுவது,
1) திவசம் ⊘ ⧖ ◪ ⬢ 2) மதிப்பு ◪ ⊘ ☆ ☒ 3) வசம்பு ⧖ ✚ ⬢ ∟





08) தோலால் தயாரிக்கப்பட்ட பொருட்களை குறிக்கும் எழுத்துக்கள் எவை?
1) C,E 2) A, B 3) C, B


09) விளையாட்டுப் பொருட்களைக் குறிக்கும் எழுத்துக்கள் எவை?
1) A, F, D 2) H, A, B 3) H, B, F

10) F, D, G தொடர்பாக கூறக்கூடியது
1) தகவல்தொடர்பு சாதனங்கள்
2) பொழுதுபோக்கு சாதனங்கள்
3) மின்சார உபகரணங்கள்

**11 ஆம், 12 ஆம் வினாக்களில் உள்ள கோலத்தை அவதானித்து - ? - இக்குறி இடப்பட்ட இடத்திற்கு வரவேண்டிய விடையை தெரிந்து கோடிடுக.**

11)



1) 63 2) 54 3) 48

12)



1) 84 2) 68 3) 72

**பின்வரும் விவரணத்தை வாசித்து 13 ஆம் 14 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

| | |
|---|---|
| 1 பந்தும் 1 பொம்மையும் = ரூபா 110 | 1 பொம்மையும் 1 விளையாட்டுக்காரும் = ரூபா 90 |
| 1 பந்து = ரூபா 60 | 1 பொம்மையும் 1 பலூனும் = ரூபா 75 |

13) பலூன் ஒன்றின் விலை யாது?
1) 30.00 2) 25.00 3) 40.00


14) விளையாட்டுக்கார் ஒன்றும் பலூன் ஒன்றும் வாங்கத் தேவையான பணம் யாது?
1) 45.00 2) 65.00 3) 55.00


15) பூம்பாத்தி ஒன்றில் ரோஜா, மல்லிகை, செவ்வந்தி செடிகள் முறையே மாறி மாறி நடப்பட்டன. முதலாவதாக நடப்பட்டது காலை ரோஜாச்செடி எனின் 29 ஆவதாக நடப்பட்ட செடி எது?
1) ரோஜா 2) செவ்வந்தி 3) மல்லிகை


16) மு.ப 8.45 மணிக்கு பயணத்தை ஆரம்பித்த ஒருவர் மு.ப. 10.20 மணிக்கு பயணத்தை முடித்தார் எனின் பயணத்திற்கு செலவான காலம் யாது?
1) 2 மணி 25 நிமிடம் 2) 1 மணி 35 நிமிடம் 3) 1 மணி 50 நிமிடம்



17 ஆம், 18 ஆம் வினாக்களுக்கு A.B.C நிரைகளை உதவியாகக் கொண்டு விடை தருக.





17) A.B.C மூன்று நிரைகளிலும் உள்ள உரு எது?




18) A நிரையில் உள்ளதும் B நிரையில் இல்லாததுமான உரு எது?




**கீழ்வரும் கூற்றுக்கள் எப்போதும் உண்மையாயின் (✓) எனவும் சில வேளைகளில் உண்மையானது எனின் (x) எனவும் ஒருபோதும் உண்மையாக இருக்காது எனின் (O) எனவும் அடையாளம் இடுக.**


19) இரண்டு ஒற்றை எண்களின் கூட்டுத்தொகை ஓர் ஒற்றை எண். ( )
20) வானில் கருமுகில் கூட்டம் தோன்றினால் மழை பெய்யும் ( )
21) ஆண்களைவிட பெண்கள் உயரம் குறைந்தவர்கள். ( )
22) நீலத்திமிங்கிலம் குட்டியீன்று இனம்பெருக்கும். ( )

**சரியான விடையை தெரிந்து கோடிடுக.**

23) மாகாணம் - மாவட்டம் - நகரம் என்பவற்றுக்கிடையிலான தொடர்பை காட்டும் உருவைத் தெரிக



24) சதுரமுகியை செய்வதற்கான வெட்டுரு தரப்பட்டுள்ளது. இதனை மடித்து ஒட்டுவதன் மூலம் பெறப்படும் சதுரமுகியின் எதிர்ப்பக்கங்களில் உள்ள புள்ளிகளின் கூட்டுத்தொகை 7 ஆக அமையக்கூடிய உரு எது?



25) 

எனின்  இவ்வுருவின் பெறுமானம் யாது?
1) 45 2) 25 3) 30

**இடைவெளிக்குப் பொருத்தமான சொற்களைத் தெரிந்து கோடிடுக.**

26) ராகுல் 200 m ------------------ ஓட்டப்போட்டியில் முதலிடம் பெற்றான்.
1) குறுந்தூர 2) மத்தியதூர 3) நீண்டதூர

27) கடைக்குச் சென்ற கமல் 750 ---------- எண்ணெய் வாங்கினான்
1) லீற்றர் 2) கிலோகிராம் 3) மில்லிலீற்றர்

28) சாதாரண மனிதனின் உடல் வெப்பநிலை 98.40 ---------- ஆகும்
1) செல்சியஸ் 2) பரனைட் 3) மில்லிலீற்றர்

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## VACANCIES

Applications will be received by me up to 28th June 2013 from suitably qualified candidates for the following posts;

**1. POST – CURATOR (LANDSCAPE), GRADE III** (University of Jaffna)

**Qualifications:**

*1.* Should possess a four year special Degree in Agriculture or Agricultural Technology & Management and majoring in Crop Science/ Horticulture/Floricul ture/ Forestry from a recognized university/ HEI with not less than one (01) year of experience in landscaping in a State/Corporation or reputed Privatese ctor organization in supervisory capacity.

OR

*2.* Should possess a four year special Degree in Botany of a recognized university/HEI with not less than two (02) years of experience in landscaping in State/Corporation or reputed Private sector organization in supervisory capacity.

Salary Scale : U-EX1 (II)Rs. 26,020-3x585-27,775(EB)28,420;6x645;6x585-35,800 p.m.

Selection : By a structured interview .

**2. POST – ASSISTANT FARM MANAGER**

(Vacancy exist at the Faculty of Agriculture, Kilinochchi)

**Qualifications:**

1. A special Degree in Agriculture of a recognized University
**Note :**
Preference will be given to those who possess not less than one year of field * experience in a recognized establishment after graduation.

OR

2. A two year Diploma in Agriculture of a recognized institution with not less than three years of field* experience in a recognized establishment after completing the Diploma

(* Field experience - Farm experience)

Salary Scale : U-MN3(II) Rs.22,240-18x320-28,000 p.m

Selection : By Interview

**Age Limit for the above Posts:** Not more than 45 years

(*Note - Age limit is not applicable for applicants in the Government / Departments/ State Corporation and statutory bodies.)

**Statutory Benefits:**

1. Allowance approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System.
3. Gratuity payments
4. Employment Trust Fund Benefits
5. Free Medical care

Application forms may be obtained from the office of the Senior Assistant Registrar/ Establishments Branch (Non Academic Section), University of Jaffna, Thirunelvely, Jaffna, either in person or by post on a payment of Rs.100/= per application form.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order / Postal Order drawn in favour of " Bursar, University of Jaffna, Thirunelvely, Jaffna" together with a self-addressed Rs.5.00 stamped envelope of 23x10 c.m in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk . Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/ Postal Order for Rs.100/- to the applications forms drawn in favor of the Bursar, University of Jaffna.

Duly completed application form should be sent under registered cover to reach the Senior Assistant Registrar/ Establishments Branch (Non Academic Section), University of Jaffna, Thirunelvely, Jaffna on or before 28.06.2013

Applications sent on the specified form only will be accepted. Applications received after the closing date or illegible and incomplete applications will be rejected without intimation.

Those who are in Public Service/ Corporations / Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments/Corporations/Boards.

Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for the appointment if the applicants routed through the Head of Department is not received.

Registrar
27.05.2013

(C/2798)


# ஜனாதிபதி ஆட்சியை முடிந்தால் கொண்டு வந்து பாருங்கள்

## மம்தா ஆவேசம்

மேற்கு வங்கத்தில் ஹௌரா நாடாளுமன்ற தொகுதிக்கு நடைபெறவுள்ள இடைத்தேர்தலை ஒட்டி திரிணாமுல் காங்கிரசின் தலைவரும் முதல் அமைசருமான மம்தா பானர்ஜி அங்கு பிரசாரத்தில் ஈடுப்பட்டார்.

அப்போது மத்திய அரசு குறித்து மம்தா கூறியதாவது,

மத்திய அரசு மேற்கு வங்க மாநிலத்திற்கு தேவையான நிதியை ஒதுக்குவதில் பாரபட்சம் காட்டி வருகிறது. எங்களுக்கு எதிராக சி.பி.ஐ.யை ஏவி விட்டு மிரட்டல் விடுத்து வருகிறது.

ஐக்கிய முற்போக்கு கூட்டணியிலிருந்து நாங்கள் வெளியேறிய பிறகு எங்கள் மீது பழிவாங்கும் போக்கை காங்கிரஸ் கூடடணி அரசு கடைப்பிடித்து வருகிறது. எனது அரசுக்கு எதிராக காங்கிரசும், சி.பி.ஐ.எம் கைக்கோர்த்து செயற்படுகிறார்கள். ஆனால் அவர்களின் சதித்திட்டம் செல்லுபடியாகது. கடந்த 34 வருடங்களாக நான் மிரட்டப்பட்டு வருகிறேன்.



முடிந்தால் நீங்கள் சட்டம் 356 பயன்படுத்தி ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டு வந்து பாருங்கள். ஆனால அவர்களின் சதித் திட்டத்தை நாங்கள் முறியடிப்போம். ஐக்கிய முற்போக்கு கூட்டணி இரண்டு முறை நாட்டை ஆட்சி செயதிருக்கலாம். ஆனால் மூன்றாவது முறையாக அவர்கள் நாட்டை ஆளவிடமாட்டோம். இவ்வாறு அவர் கூறினார்.

## மதுரைக்காரர

(12ஆம் பக்கத்தொடர்ச்சி...)

வன்முறையில் அடிவாங்கி சாகிறவனின் கதையைச் சொல்கிறார். அவரது படங்களிலும் வீரமான தேவர்கள் வருகிறார்கள். வன்முறையை மோப்பம் பிடித்துத் தேடிப் போகிறார்கள். ஆனால் அவர்கள் தீரமாக மோதி இறந்து போகிறார்கள். விநோதமாக மக்களுக்கு இதுவும் பிடித்துப் போகிறது. அவரது படங்கள் தோல்வியுற்றவனைப் பற்றியது எனச் சொல்லப் படுகிறது. அது தவறு. அவை தியாகிகள் பற்றியவை. எல்லா வன்முறை வரலாறுகளின் வீர கதைப்பாடல்களிலும் தொன்மங்களிலும் உயிர் விட்டவர்களுக்கு தனி இடம் உண்டு. அவர்களை அச்சமூகம் வழிபடும். 'வெயில்' படத்திலும் நாயகனின் அப்பா இறந்து போன தன் மூத்த மகனை "சாமி" ஆகிவிட்டதாய் கூறுகிறார். "அரவானிலும்" நாயகன் பலிகொடுக்கப்பட்ட பின் சாமியாகிறான். "அங்காடித் தெருவில்" கால் இழந்த நாயகிக்கு வாழ்வளித்து நாயகன் தியாகி ஆகிறான்.

ஒட்டுமொத்தமாக மதுரைக்கார படங்களைப் பார்க்கையில், வன்முறையை வழிபடும் மனப்பான்மையை வளர்ப்பது இன்றைய காலத்தில் ஆரோக்கியமானதா என்கிற கேள்வி வளர்ந்து நிற்கிறது. வன் முறையை நுணுக்கமாக ஆராயும் படங்களை (மார்டின் ஸ்கார்ஸிஸ் எடுத்தது போல்) இவர்களால் தரமுடியவில்லை என்பது ஒரு முக்கிய தோல்வி தான். தம்முடைய சாதியில் சண்டைக்காக ஆடு, கோழி வளர்ப்பவர்களுக்கும் தமக்கும் இடையிலான ஒரு வித்தியாசத்தை எதிர்காலப் படங்களில் காட்டுவார்கள் எனத் எதிர்பார்ப்போம்.

## அணுத்திட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்தும் இந்தியா

அணுத்திட்டங்கள் தொடர்பில் ஜப்பானுடன் கூடுதல் கவனம் செலுத்துவதற்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். ஆசியப் பசுபிக் பிராந்தியத்தில் பதற்றம் எதுவும் ஏற்படாத வகையில், அமைதியான முறையில் அணுத் திட்டங்களை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் மன்மோகன் சிங் குறிப்பிட்டுள்ளார்.

ஜப்பானுக்கான இரண்டு நாள் விஜயத்தில் ஈடுபட்டுள்ள பிரதமர், ஜப்பானின் உயர்மட்ட அதிகாரிகளுடன் இது தொடர்பில் கலந்துரையாடவுள்ளார்.

இதேவேளை இந்தியப் பிரதமர் தாய்லாந்துக்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.







## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..........................................

முகவரி : ..........................................

பிறந்த ஆண்டு : ..........................................


கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# சாத்தானை விரைவில் அழிப்போம் முஷாரப்புக்கு கொலை மிரட்டல்



பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப்புக்கு தலிபான் தீவிரவாதிகள் மீண்டும் கொலை மிரட்டல் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோவின் படுகொலை, 2007ஆம் ஆண்டில் நீதிபதிகளை பதவீ நீக்கம் செய்தது, 2006ஆம் ஆண்டில் பலுசிஸ்தான் தலைவர் கொல்லப்பட்டது போன்ற வழக்குகளில் பர்வேஸ் முஷாரப் கைது செய்யப்பட்டு ஏப்ரல் 19ஆம் திகதி முதல் வீட்டுக் காவலில் அடைக்கப்பட்டுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் அவர் பாகிஸ்தான் திரும்புவதற்கு முன்பே, தெஹ்ரிக் இ தலிபான் பாகிஸ்தான் தீவிரவாதிகள் அவருக்கு கொலை மிரட்டல் விடுத்தனர்.

“முஷாரப் பதவியில் இருந்தபோது அமெரிக்காவுடன் சேர்ந்து தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் அவர் பாகிஸ்தான் வந்ததும் அவரைக் கொலை செய்வோம். இதற்காகவே தனி தற்கொலை படை அமைக்கப்பட்டுள்ளது” என்று அறிவித்தனர். இந்தநிலையில். அமைப்பின் செய்தி தொடர்பாளர் இசானுல்லா இசான் மீண்டும் மிரட்டல் விடுக்கும் காட்சி நேற்று முன்தினம் தலிபான் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டது.

அதில் அவர், “முஷாரப் தனது ஆட்சியின்போது பலுசிஸ்தான் முதல் வஜிரிஸ்தான் வரை துப்பாக்கிச் சூடு நடத்தி இரத்தம் ஓடச் செய்தார். சிவப்பு மசூதி எனப்படும் லால் மஸ்ஜித்தில் நடைபெற்ற தாக்குதலில் நூற்றுக் கணக்கான அப்பாவி மாணவர்கள் கொல்லப்பட்டனர். இதற்கெல்லாம் பதிலடியாக அந்த சாத்தானை (முஷாரப்) விரைவில் அழிப்போம்” என்று அவர் கூறியுள்ளார். முஷாரப் மீதான வழக்கு விசாரணையில், நீதிபதிகளைக்கைது செய்த வழக்கில் முஷாரப்புக்கு பிணை வழங்க தீவிரவாத தடுப்பு நிதிமன்றம் மறுப்புத் தெரிவித்தது. ஆனால், பெனாசிர் பூட்டோ கொலை வழக்கில் அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

உலகச் செய்திகள்

# எரிமலை குமுறியதையடுத்து அபாய எச்சரிக்கை



எல்லைப் பகுதியில் உள்ள ஹப்பஹியு எரிமலை குமுறியதை அடுத்து, அங்குள்ள தமது நாட்டு மக்களை பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு ஆர்ஜென்டினாவும், சிலியும் அபாய எச்சரிக்கையுடனான அறிவித்தல் விடுத்துள்ளன.

சுமார் மூவாயிரம் பேரை அங்கிருந்து வெளியேறுமாறு அதிகாரிகள் பணிப்புரை விடுத்துள்ளனர்.

எரிமலை அமைந்துள்ள இருநாட்டிற்குமிடையிலான எல் லைப் பகுதியில் ஆயிரக்கணக்கான நில அதிர்வுகளும் உணரப்பட்டுள்ளன. இந்நிலையில், குறித்த பிராந்தியத்தில் மழை பெய்து வருவதால் மக்கள் அங்கிருந்து வெளியேறுவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அண்டிஸ் மலைத்தொடரில் அமைந்துள்ள இந்த எரிமலையை அண்மித்த வான்பரப்பில் விமானங்கள் பயணிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# ஈராக்கில் குண்டுகள் வெடிப்பு;



ஈராக் தலைநகர் பாக்தாத்தில் பல்வேறு இடங்களில் நேற்று கார் குண்டுகள் வெடித்து சிதறியதில் 53இற்கும் மேற்பட்டோர் பலியானார்கள் 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். குண்டு வெடிப்பு நடந்த பகுதிகள் அனைத்தும் ஷியா முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளாகும். மொத்தம் 11 இடங்களில் நேற்று முன்தினம் குண்டு வெடிப்புகள் நடந்துள்ளன. அண்மைக்காலங்களாக ஈராக்கில் அதிகளவில் குண்டுகள் வெடித்து வருகின்றன. கடந்த ஒனறரை மாதங்களில் மட்டும் இத்தகைய குண்டுவெடிப்புகளில் 450 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

# கோழி முட்டைக்குப் பதிலாக சைவமுட்டை தயார்

அமெரிக்க உணவு நிறுவனம், கோழி முட்டைக்குப் பதிலாக, தாவரங்களிலிருந்து முட்டை தயாரித்து வருகிறது. சைவ உணவு சாப்பிடுபவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் வகையில், அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ நகரில் உள்ள ஹாம்டன் க்ரீக் புட்ஸ் நிறுவனம், பல்வேறு தாவரங்களிலிருந்து எடுக்கப்பட்ட பொருட்களின் உதவியுடன், முட்டை தயாரித்து வருகிறது. இது குறித்து இந்நிறுவனத்தின் தலைவர் ஜோஷ் டெட்ரிக் கூறியதாவது: முட்டை மற்றும் இறைச்சிக்கு மாற்று பொருளை மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். எண்ணெய் மற்றும் தண்ணீர் கலப்பு பெற்ற பொருள், முட்டையில் உள்ளது. தாவரங்களில் இதே போன்ற பொருளை கண்டெடுத்து, அதைப் பவுடராக்கி, அதிலிருந்து முட்டை தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். தூள் வடிவில் நாங்கள் தயாரித்துள்ள முட்டை, சில பேக்கரிகளில் முட்டைக்குப் பதிலாக



பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறு டெட்ரிக் கூறினார்.

# சிரிய போராளிகள் மீதான ஆயுதத்தடை நீக்கம்

சிரியாவில் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக அதிபர் ஆசாத்தின் படைக்கும் போராளிகள் படைக்கும் இடையே கடுமையான சண்டை நடந்து வருகிறது. இதனையடுத்து அவர்களுக்கு ஆயுதங்களை இறக்குமதி செய்ய ஐரோப்பிய யூனியன் தடை விதித்திருந்தது.

இந்நிலையில் புருசல்ஸ் நகரில் ஐரோப்பிய யூனியனின் மந்திரிகள் கூட்டம் நடந்தது. அதில் மேலும் போராளிகளுக்கு எதிரான ஆயுதத்தடையை புதுப்பிக்கப் போவதில்லை என்று முடிவு



எடுக்கப்பட்டுள்ளது.

இருந்தும் உடனடியாக அவர்களுக்கு ஆயுதங்களை அனுப்பப் போவதில்லை என்று பிரிட்டன் வெளியுறவு மந்திரி கூறியுள்ளார். மேலும் மற்ற தடைகள் தொடரும் என்றும் அவர் கூறியுள்ளார். போராளிகளுக்கு ஆயுதங்கள் வழங்குவது 2 வருடங்களுக்கு மேலாக நீடித்து வரும் சண்டைக்கு விரைவில் அரசியல் தீர்வைகாண உதவும் என்று பிரிட்டனும் பிரான்சும் நம்புகிறது.

# மதுவை மறக்க மருந்து கண்டுபிடிப்பு

குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்களை அதிலிருந்து மீட்க, புதிய மருந்து லண்டனில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ”இந்த மருந்தை உட்கொள்வதின் மூலம், 61 சதவீதம் வரை, மது அருந்தும் இச்சை கட்டுப்படும் என, ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். உலகளவில், குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனால், மது அருந்துபவர்களின் உடல்நிலை மோசமடைவது மட்டுமின்றி, ஏராளமான சாலை விபத்துகள் மற்றும் சமூக விரோத செயல்கள் நிகழ்கின்றன. விஞ்ஞானிகளின் நீண்டகால ஆராய்ச்சிக்குப்பின், இதற்குத் தீர்வு' கிடைத்துள்ளது. பிரிட்டன் விஞ்ஞானிகள் குழு, தன் ஆராய்ச்சியின் பயனாய், புதிய மருந்து ஒன்றை அறிமுகம் செய்துள்ளது.

இதுகுறித்து விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: இந்த மருந்தை உட்கொள்வதின் மூலம், 61 சதவீதம் வரை குடிப்பழக்கத்திலிருந்து மீளமுடியும். இந்த மருந்து, பிரிட்டன் அரசின் ஒப்புதலுடன், விற்பனைக்கு வந்துள்ளது. மாத்திரை வடிவில் வெளியிடப்பட்டுள்ள இதற்கு, செலின் க்ரோ என்று பெயரிடப்பட்டுள்ளது. மோசமான குடிப்பழக்கத்திற்கு அடிமையான ஒருவர், ஒரு நாளைக்கு, ஒரு மாத்திரை உட்கொள்வதின் மூலம், 61 சதவீதம் வரை மது அருந்துவதற்கான இச்சையிலிருந்து விடுபடலாம். இந்த மருந்தை உட்கொள்வதால், எவ்வித பக்க விளைவுகளும் ஏற்படாது. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# அமெரிக்காவில் நிலநடுக்கம்

அமெரிக்காவின் பனாமா மற்றும் கொஸ்டாரிக்கா பகுதிகளில் 5.6 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. இந்த நிலநடுக்கம் நேற்றுக் காலை ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படாத போதிலும், இதனால் ஏற்பட்ட சேத விபரங்கள் தொடர்பில் தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை. இதேவேளை, கடந்த சில நாட்களாக அமெரிக்க மத்திய எல்லை நாடுகளில் தொடர்ச்சியான நிலநடுக்கம் பதிவாகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் அறிஞர்களுக்கு யாழில் வறுமையா?

## கம்பன் விழாவில் உணர்ச்சிப் பேச்சு

(யாழ்ப்பாணம்)

கம்பன் விழாக்களில் இலங்கை, இந்திய அறிஞர்கள் தமிழைப் பல கோணங்களிலும் ஆய்வு செய்கிறார்கள். விளக்குகிறார்கள். இந்த விழாக்களில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் கலந்துகொள்ள வேண்டும். இத்தகைய தமிழ் விழாக்களுக்கு தமிழாசிரியர்களை அனுப்பவில்லை என்றால் கல்வித்திணைக்களம் எத்தனை கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் வைத்தும் பயன் ஏற்படப்போவதில்லை என்று குறிப்பிட்டார் கலாநிதி ஆறுதிருமுருகன்.

யாழ்ப்பாணக் கம்பன் கழகம் நல்லூரில் நடாத்திய கம்பன்விழாவின் இறுதிநாள் நிகழ்வில் வாழ்த்துரை வழங்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

ஆறுதிருமுருகன் தொடர்ந்து பேசுகையில், எங்களுக்குத் தமிழ கற்பித்த ஆசிரியர்கள் தமிழை இரசித்து சுவைத்து விளக்கமாகக் கற்பித்தார்கள். இன்று தமிழ் படிப்பிக்கின்ற பலருக்கு இலக்கணமும் தெரிவதில்லை இலக்கியமும் தெரிவதில்லை.

யாழ்ப்பாணத்தில் இன்று நல்லசிந்தனைக்கு நல்ல உள்ளங்களைக் காண்பதற்கு வறுமை நிலை ஏற்பட்டுள்ளது. இந்த வறுமைக்கு முடிவு கட்டுவதற்கு கம்பன் கழகம் இன்று விழா எடுத்தமை வரவேற்கத்தக்கதாகும்.

பண்டிதர் கணபதிப்பிள்ளை, பண்டிதர் நாகலிங்கம் போன்ற எத்தனையோ தமிழறிஞர்கள் தமிழை வளர்த்த பூமி யாழ்ப்பாணம். பரமேஸ்வராக் கல்லூரியில் தமிழ்விழா என்றால் இந்திய இலங்கை அறிஞர்கள் கூடுவார்கள். முழுப்பனை கொண்டுவந்து நட்டு சொக்கட்டான் பந்தல் போட்டு விழா நடக்கும்.

விழாவுக்கு குடாநாட்டின் பலபாகங்களிலிருந்தும் மக்கள் வருவார்கள். விழா முடிய வண்டிலில் விளக்குக்கட்டி வீடுபோக விடியும். அப்படி இருந்த யாழ்ப்பாணம் இன்று எப்படிப் போய்விட்டது என்பதை நினைக்க வேதனையாக இருக்கிறது.

இந்தியாவில் அகராதி எழுதுவது என்றால் யாழ்ப்பாணத்து சதாவதானி கதிரவேற்பிள்ளை அகராதியைத் தழுவியது என்று எழுதுவார்கள். அந்தளவிற்கு உலகில் முதன்முதலில் அகராதி தந்தவன் யாழ்ப்பாணத்துத் தமிழன். ஆறுமுகநாவலர், சுன்னாகம குமாரசுவாமிப் புலவர் போன்ற பல அறிஞர்களைத் தந்த யாழ்ப்பாண மண் இன்று வறுமைமிக்கதாகிவிட்டது. இந்த வறுமையைப் போக்க கம்பன் கழகம் முன்வரவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

முன்னாள் மாநகர சபை ஆணையாளர் சி.வி.கே. சிவஞானம் தலைமையுரை நிகழ்த்தினார். யாழ். இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் தொடக்கவுரை நிகழ்த்தினார்.

கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் கம்பசித்தாந்தம் என்னும் பொருளில் தத்துவ அரங்கு இடம்பெற்றது. தமிழக அறிஞர்களான இலக்கியச் சுடர் த.இராமலிங்கம், புலவர் இரா. மது மற்றும் கலாநிதி ஸ்ரீபிரசாந்தன் ஆகியோர் இந்நிகழ்வில் உரையாற்றினர். (10)

## இந்தியப் பிரதமரை சந்திக்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முயற்சி

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்து இந்திய வம்சாவளித் தமிழர்களின் பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தை நடாத்தத் திட்டமிட்டுள்ளது. இந்தியப் பிரதமரை சந்திப்பது தொடர்பான கோரிக்கை ஏற்கனவே விடுக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழர்களுடன் இணைந்து வாழ்கின்ற போதிலும் இந்திய வம்சாவளித் தமிழர்களின் பிரச்சினைகள் வித்தியாசமானவை என ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார். வடக்கு, கிழக்கில் வாழும் இலங்கைத் தமிழர்கள் காணி, பொலிஸ் அதிகாரங்களை கோருகின்றனர். மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் பெரும்பான்மை இனத்துடன் வாழ்ந்து வரும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் இந்த அதிகாரங்களைக் கோரவில்லை. இலங்கைத் தமிழர்களுக்கு தலைவலி இருக்கின்றது, இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கு வயிற்றுவலி. இரு சமூகத்தினருக்கும் ஒரே மருந்து மாத்திரைகளை வழங்க முடியாது என செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

## விபத்துக்களின் அறுவடை 4 மாதத்தில் 738 பேர் பலி

இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 738 பேர் உயிரிழந்துள்ளதுடன் 2,061 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டது.

குறித்த காலப்பகுதியில் 689 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மதுபோதை மற்றும் கவனக்குறைவுடன் வாகனம் செலுத்தியமையினால் இவ்வாறான விபத்துக்கள் சம்பவித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், கடந்த வருடத்தின் குறித்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் இடம்பெற்ற விபத்துக்களில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர்.

## பக்கச்சார்பாக செயற்படுகிறது ஜெனிவா

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் குறித்து அரசு அதிருப்தி வெளியிட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் நிதிச் செயற்பாடுகள் வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளப்படவில்லை என ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஜெனிவாவிற்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை பக்கச்சார்பாக செயற்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

சில நாடுகளின் மீது அழுத்தங்களை பிரயோகிக்கும் அதே வேளை, சில நாடுகளில் இடம்பெற்றுவரும் குற்றச் செயல்களைக் கண்டு கொள்வதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் மனித உரிமை ஆணைக் குழு மௌனம்காத்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழு பக்கச்சார்பாகவோ அரசியல் உள்நோக்கங்களின் அடிப்படையிலோ இயங்குவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் வரவு செலவுத்திட்டம் தொடர்பான நடவடிக்கைகள் சுயாதீனத்தன்மையுடன் கூடியதாக அமைய வேண்டுமென தெரிவித்துள்ளார்.

### புதுக்குடியிருப்பு...

தின் நுழைவாசலினையும் பெயர்ப் பலகையினையும் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் திறந்துவைக்கப்பட்டு இதற்கு பிரதம விருந்தினர்களாக அமைச்சர் றிசாட்பதியுதின், நாடாளுமன்ற உறுப்பினர்.குனேஸ்பறுக், முல்லை மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் L.V.R.மாக், முல்லை மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி ஜெனரல் குணதிலக, வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி, முல்லை மாவட்ட ஜனாதிபதி இணைப்பாளர் ச.கனகரத்தினம், இ.பிரதாபன் ஆகியோரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (2,40)


### நாடாளு...

டுள்ளன. 13 ஆவது சரத்தை நீக்குவது தொடர்பாக கொழும்பு அரசியலில் வாதப் பிரதிவாதங்கள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையிலேயே சிவாஜிலிங்கத்தின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

### '13' ஐ...

ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், தமிழ்மொழிப் பிரதியும் விரைவில் தயாரிக்கப்பட்டு விடும் எனவும் மேல் மாகாணசபை உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

உத்தேச பிரேரணையை நாடாளுமன்றில் சமர்ப்பித்தன் பின்னர் சகல அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



யாழ். பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் யாழ். பஸ்தியான் சந்திப்பகுதியில் றைவ்கிறீன் மோட்டார் வாகன புகைப் பரிசோதனை மத்திய நிலையத்தில் நேற்று முதல் புகைப்பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்று புகைப்பரிசோதனைக்கு உட்படுத்துவதைக காணலாம். (படம் - பார்த்தீபன்)

### மீண்டும்...

பட்டு மக்களின் காணிப்பிரச்சினைகள் தீர்க்கப்படும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சிக்கு வருகை தந்த அவர் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் 260 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கிளிநொச்சி பிரதேச நில அளவைத் திணைக களத்தினை திறந்துவைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் மக்களின் தேவைகள் இனிவரும் நாட்களில் இவ் அலுவலகம் மூலம் விரைவுபடுத்தப்படும் அதன் மூலம் காணிகள் விரைவாக அளவீடுசெய்யப்பட்டு மண்ணின்மகிமை திட்டத்தின் கீழ் ஆவணங்கள் வழங்கப்படுவதற்கும் ஏதுவாக அமையும் எனக் குறிப்பிட்ட அமைச்சர், இந்த நாட்டின் ஜனாதிபதி தனக்கு வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள் என எந்தவித பாகுபாடுமின்றி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார் எனவும் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட மீள் எழுச்சித்திட்டம் மற்றும் வடக்கின் துரித மீட்சித்திட்டம் ஆகியவற்றின் பிரதிதிட்டப்பணிப்பாளர் விஜகிருஸ்ணன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வர்த்தக வாணிப அமைச்சர் றிசாட்பதியுதீன் காணி மற்றும் காணி அபிவிருத்தி பிரதி அமைச்சர் சிறிபால கம்லத், வடமாகாண ஆளுநர் சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திட்டப்பணிப்பாளர் லியனகே, நிலஅளவையாளர் நாயகம் மகேஸ் பெர்னாண்டோ கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரன், மற்றும் திணைக்களங்களின் அதிகாரிகள் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (02,40)

### யாழ்ப்பாணம்...

அவர் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான சாத்தியம் இருந்தாலும், இதர அரசியல் கட்சிகளை அவர் சந்திப்பார் என்றும் தெரிகிறது. குறிப்பாக இவ்விஜயத்தின் போது வடக்கு, கிழக்கு பகுதிகளுக்குச் செல்லவுள்ள நவநீதம்பிள்ளை அங்குள்ள நிலைமைகளை நேரில் பார்வையிடவுள்ளதுடன், மக்கள் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடுவார் எனத் தெரியவருகின்றது.

இலங்கையில் இருந்து மீண்டும் ஜெனிவா புறப்படும் தினத்தில் அவர் கொழும்பில் விசேட ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்தி தமது இலங்கை விஜயம் உட்பட முக்கிய சில விடயங்கள் தொடர்பில் கருத்து வெளியிடவுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

### வெளிநாடு...

பட்ட கோரிக்கையை கொழும்பு மேலதிக நீதவான் பியந்த லியனகே நேற்று நிராகரித்துள்ளார்.

வைத்திய பரிசோதனைக்கு வருமாறு துமிந்த சில்வா எம்.பியை பரிசோதனைக்கு உட்படுத்திய வைத்தியர் அறிவித்துள்ளமையினால் இரு வாரங்களுக்கு வெளிநாட்டுக்குச் செல்வதற்கு அவருடைய கடவுச்சீட்டை விடுவிக்குமாறு அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

இரண்டு காரணங்களுக்காக அந்தக் கோரிக்கைக்கு இடமளிக்க முடியாது என்றும் வைத்திய பரிசோதனைக்கு செல்வதற்காக முறையான வைத்திய சான்றிதழ் முன்வைக்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டிய மேலதிக நீதவான் அவரது கோரிக்கையை நிராகரித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி 50,000 ரூபா ரொக்கப் பிணையிலும் தலா 500,000 ரூபா பெறுமதியான இரண்டு சரீர பிணைகளிலும் விடுவிக்கப்பட்டதுடன், கடவுச்சீட்டையும் நீதிமன்றம் பறிமுதல் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.


### யாழ். - கொழும்பு...

கண்டியில் அனைத்துலக மாநாட்டு மண்டபத்தை நிறுவவும், அநுராதபுரத்தில் கலையரங்கு ஒன்றை அமைத்துக் கொடுக்கவும், கொழும்பு மற்றும் ராகம மருத்துவமனைகளை அபிவிருத்தி செய்யவும் சீனா உதவ முன்வந்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுப் பிற்பகல் சீன அதிபர் ஜி ஜின்பின்கை சந்தித்த போதே இலங்கைக்கு தொடர்ந்து உதவிகளை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளார். இந்தச் சந்திப்புகளின் போது வர்த்தகம், மற்றும் சுற்றுலாத்துறை ஒத்துழைப்புகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

# வேற்றுமைகளை களைந்து சமரசம் காணும் முயற்சி

## ரஜீவ விஜேசிங்க நெடுந்தீவில்



(நெடுந்தீவு)

நேற்றுப் பிற்பகல் 2.00 மணியளவில் நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி தலைமையில் வேற்றுமை அகற்றிய சமரசம் என்னும் தொனிப்பொருளில் மக்களின் தேவைகள், கருத்துக்கள், பிரச்சினைகளை கேட்டறிந்து ஜனாதிபதிக்கு முன்வைப்பதற்காக ஜனாதிபதியின் ஆலோசகரும், நாடாளுமன்ற உறுப்பினரும், பேராசிரியருமான ரஜீவ விஜேசிங்க கருத்துரை வழங்கினார்.

இந்நிகழ்வில் நெடுந்தீவு பிரதேச சபை தவிசாளர் தானியேல் றெக்சியனும் உடனிருந்தார்.

இந்நிகழ்வின் போது நெடுந்தீவிலுள்ள கழகங்கள் மற்றும் சங்கங்களின் பிரதிநிதிகள், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் அரச அலுவலகங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், கடற்படை மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் என பல துறைகளைச் சேர்ந்தோரும் பங்குபற்றினர்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட நெடுந்தீவு பிரதேச சபை தவிசாளர் தானியேல் றெக்சியன் பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துக்கு பிரத்தியோக வாகனம் ஒன்றையும், கடற்றொழிலாளர்களுக்கு வாழ்வாதார உதவிகளை பெற்றுக் கொடுப்பதற்கான கோரிக்கையையும் முன்வைத்தார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட பிரதேச சபை உறுப்பினர் மயில்வாகனம், நெடுந்தீவு போக்குவரத்து பற்றியும் விவசாயிகளின் பிரச்சினைகள் பற்றியும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து நெடுந்தீவு பிரதேச செயலக பட்டதாரிப்பயிலுநர்கள் நெடுந்தீவு மாணவர்களது கல்வி செயற்பாடுகள் பற்றியும், அலுவலர்களுக்கான கஷ்டப்பிரதேச படிகள் தொடர்பாகவும் வங்கிச் சேவை மற்றும் அலுவலகங்கள், பாடசாலைகளுக்கான இணைய சேவைகள் பக்ஸ் சேவைக்கான வசதிகள் ஏற்படுத்தல் தொடர்பாகவும் வீதிகள் அமைத்தல் தொடர்பாகவும் குறிப்பிட்டனர்.

கடற்றொழில் சங்கத்தின் சார்பில் கருத்துத் தெரிவித்தவர்கள், இந்திய இழுவைப்படகுகளினால் எமது மீனவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் தொடர்பாகவும் மின்சார, குடிநீர் விஸ்தரிப்புகள் தொடர்பாகவும் கருத்துக்களை தெரிவித்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ரஜீவ விஜேசிங்க, தொழில் சார் பயிற்சி நிலையங்களை அமைப்பதற்கும், போக்குவரத்து சேவைகளை மேம்படுத்துவதற்கும் உரிய ஆலோசனைகளை வழங்கியதோடு இரண்டு விதமான அமைப்புக்களை நெடுந்தீவில் நிறுவுதல் வேண்டும் எனவும் ஒன்று அபிவிருத்தி சார்ந்ததாகவும் மற்றையது மக்களின் பாதுகாப்பு பற்றியதாகவும் இருத்தல் வேண்டும் எனவும் தேவைகளினை தாம் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு செல்வதாகவும் குறிப்பிட்டார்.

# திருப்தியற்ற ஊதியம் இலங்கை முன்னிலையில்

(கொழும்பு)

உலகில் சம்பளம் மிகவும் குறைவாக வழங்கப்படும் நாடுகளின் வரிசையில் இலங்கை பட்டியலிடப்பட்டுள்ளது.

சர்வதேச பூகோள சம்பள முரண்பாட்டு அறிக்கையில் இந்த விடயம் வெளியிடப்பட்டுள்ளது. 75 நாடுகளில் சம்பளம் வழங்கப்படும் முறைமை தொடர்பில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் மூலம் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றில் ஐந்து நாடுகள் மிகவும் மோசமான முறையில் ஊழியர்களுக்கு சம்பளங்களை வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், அல்ஜீரியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளே இவ்வாறு மோசமான நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. மிகச் சிறந்த வகையில் சம்பளங்களை வழங்கும் நாடாக சுவிட்சர்லாந்து திகழ்கின்றது.

# மன்னிப்புக் கோரியது வளிமண்டல திணைக்களம்

இந்து சமுத்திரப் பகுதியில் இம்மாத ஆரம்பத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய சூறாவளிக்கு இலங்கையின் சிறப்புமிக்க அரசர்களில் ஒருவரான மகாசேனன் என்பவரது பெயரை வைத்தமைக்காக வளிமண்டலவியல் திணைக்களம் பகிரங்க மன்னிப்புக் கோரியுள்ளது.

அழிவை ஏற்படுத்தும் சூறாவளிக்கு மகாசென் என பெயர் இட்டதை பொதுமக்களும் பொது நிறுவனங்களும் கண்டனங்களை வெளியிட்டிருந்தன. இதன் காரணமாக வளிமண்டலவியல் திணைக்களம் பெரும் விமர்சனத்திற்கு உள்ளாகியிருந்தது.

இந்நிலையிலே வளிமண்டலவியல் திணைக்களம் மன்னனது பெயரை சூறாவளிக்கு வைத்தமைக்காக மன்னிப்புக் கோரியுள்ளது.

# வர்த்தக நிலையத்தில் நள்ளிரவில் திருட்டு

(கொழும்பு)


கொழும்பு உயர் கண்காணிப்பு வலயப் பகுதிக்குள் உள்ள தமிழ் வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான பயண முகவர் நிலையம் உடைக்கப்பட்டு சுமார் இரண்டரை கோடி ரூபா பெறுமதியான பணம் மற்றும் பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

நேற்று முன்தினமிரவு கனரக வாகனங்களுடன் அந்தப் பகுதிக்கு வந்த 15 தொடக்கம் 20 பேர் கொண்ட குழுவினர் வாகனங்களை நிறுத்தி விட்டு முகவர் நிலையத்தை உடைத்து உள்ளே புகுந்து 98 இலட்சம் ரூபா பணத்தினையும், ஒன்றரை கோடி ரூபா பெறுமதியான தளபாடங்கள் மற்றும் இலத்திரனியல் பொருட்கைளையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இதேவேளை குறித்த முகவர் நிலையம் ஜனாதிபதி மாளிகைக்கு 50 மீற்றர் தூரத்திலும், கோட்டை பொலிஸ் நிலையத்திலிருந்து 100 மீற்றர் தூரத்திலும் அமைந்துள்ளது. குறித்த சம்பவத்தை அப்பகுதியிலிருந்த சிலர் அவதானித்துள்ள போதிலும் சம்பவம் தொடர்பில் யாருக்கும் தெரியப்படுத்தவில்லை.

இந்நிலையில் நேற்று காலை குறித்த முகவர் நிலையத்தின் உரிமையாளர் நிலையத்தை திறந்த போதே உள்ளே கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை அறியப்பட்டுள்ளது. மேலும் குறித்த பயண முகவர் நிலையத்தின் உரிமையாளர் முன்னாள் அமைச்சர் மகேஸ்வரனின் மைத்துனர் எனவும் தெரியவருகிறது.



காரைநகர் ஆலடியில் அமைந்துள்ள இராணுவ முகாமில் வெசாக் அலங்காரப் பந்தல் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். (50)

# வருமான வரி செலுத்தத் தவறின் சொத்துக்கள் முடக்கம்

(கொழும்பு)

வருமான வரி செலுத்தாத 200 பேரின் சொத்துக்களை முடக்குவதற்குத் தீர்மானித்துள்ளதாக கொழும்பு மாநகர சபை ஆணையாளர் பத்ராணி ஜயவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் உரியவர்களுக்கு அறிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வருமான வரி செலுத்தாமை தொடர்பில் இவர்களுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் தெரியப்படுத்திய போதிலும் அவர்கள் உரிய முறையில் பதிலளிக்காமையால் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். இதுவரையில் மாநகர சபையில் 1500 மில்லியன் ரூபா வருமான வரி நிலுவையிலுள்ளதாக மாநகர சபை ஆணையாளர் சுட்டிக்காட்டினார்.

வருமான வரி உரிய முறையில் செலுத்தப்படாமையால் மாநகர சபையின் சில அபிவிருத்தி நடவடிக்கைகள் தாமதமடைவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# வகுப்புத் தடை

(கொழும்பு)

ருகுணு பல்கலைக்கழக மாணவர்கள் ஆறு பேருக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது. பகிடிவதை சம்பவம் தொடர்பில் இம்மாணவர்களுக்கு வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ள ஆறு பேருள் மாணவிகள் இருவரும் அடங்குவர்.

# புதுக்குடியிருப்பில் வைத்தியசாலை திறப்பு

புதுக்குடியிருப்பு பொது வைத்தியசாலை வைபவரீதியாக பொருளாதர அபிவிருத்தி அமைச்சரினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ் வைத்தியசாலைக்கு பொருளாதர அபிவிருத்தி அமைச்சினால் 36 மில்லியன் ரூபா செலவில் புனர்நிர்மாண வேலைகள் செய்யப்பட்டு மக்களின் பாவனைக்காக வைபவரீதியாக முல்லைத்தீவு சுகாதார பிராந்திய பணிப்பாளர் அ.திலீபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினர்கள் மங்கள வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டு பிரதான கட்டடத்தின் நுழைவாசலினையும் பெயர்ப் பலகையினையும் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷ திறந்து வைத்ததுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கூரை தகரங்களும் துவிச்சக்கரவண்டிகளும் அவரினால் வழங்கப்பட்டன.

இதற்கு பிரதம விருந்தினர்களாக அமைச்சர் றிசாட் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர் குனேஸ்பறுத், முல்லை மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் L.V.R.மாக், முல்லை மாவட்ட பொலிஸ் பெறுப்பதிகாரி ஜெனரல் குணதிலக, வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி, முல்லை மாவட்ட ஜனாதிபதி இணைப்பாளர் ச.கனகரத்தினம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (40,02)

ENGLISH
THE EASY WAY
Modern 5 Way Approach to English Language Learning
இலகுவழி ஆங்கில கற்கைநெறி
By: S.Muththulingam
சனி, ஞாயிறு காலை 9.00 - 11.00
செவ், வியா மாலை 3.00 - 5.00
இடம்: சிகரம் விரிவுரை மண்டபம்
153. பலாலி வீதி. கந்தர்மடம். யாழ்ப்பாணம்
☎ 021 222 0011
முதல் வகுப்பு இலவசம்
(C/2799)

## மரண அறிவித்தல்

### மகேந்திரன் செந்தூர்செல்வி (தவம்)



கல்லூரி வீதி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், 7 ஆம் கட்டை, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மகேந்திரன் செந்தூர்செல்வி (தவம்) அவர்கள் கடந்த (23.05.2013) வியாழக்கிழமை அன்று அகாலமரணமடைந்து விட்டார்.

அன்னார் தூலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை நேசம்மா அவர்களின் அன்பு மகளும், வை.மகேந்திரன் (ஆனந்தன்) அவர்களின் அன்பு மனைவியும், பேரின்பநாயகம் (சுருளி), லோகநாதன், குகதாஸ் அவர்களின் பாசமிகு சகோதரியும், ஜெனனி, ஜெயந்தன், ஜெனார்த்தன், தாட்சாஜினி, உக்கிரேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சுஜித் (குட்டி) மாமியாரும், கஜாஜினி, சிவானுஜா ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.05.2013) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் காலை 10.00 மணியளவில் கொத்தியாலயடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**7 ஆம் கட்டை,**
**மல்லாகம்.** (R/184) **தகவல்: குடும்பத்தினர்.**

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மே 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.